பக்கங்கள்: 14

Registered as a Newspaper

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna.
90 A/L
WEEKEND CLASSES
★ ZOOLOGY ★
இழையவியல்
Sat. & Sun.
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

NEW MASTER INSTITUTE
241, Navalar Road, Jaffna.
89 A/L
WEEK END CLASSES
★ CHEMISTRY ★
சேதன இரசாயனம்
Sat. & Sun.
9-30 A பிரிவு
12-30 B பிரிவு
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன்

மலை: 3 யாழ்ப்பாணம் விபவ ஹு புரட்டாதி மீ 01 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 05 (17-09-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 28

# புலிகளுடன் பேசுவது குறித்து இந்தியா தீவிர ஆராய்வு?

## மக்கள் கருத்துக் குறித்து நேற்றுத் தகவல்கள் திரட்டப்பட்டன

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 17

**யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் சாத்தியம் குறித்து, இந்திய அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களிலும் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக மிக நம்பிக்கையான வட்டாரங்கள் மூலம் சஞ்சீவிக்குத் தெரியவந்துள்ளது.**

யுத்த நிறுத்தம் குறித்து மக்களதும், பொதுஸ்தாபனங்கள், பிரமுகர்களினதும் கருத்துக்களைத் திரட்டுவதிலும், யுத்த நிறுத்த அறிவிப்பின் பின்னர் இங்குள்ள நிலைமை குறித்துத் தகவல் திரட்டுவதிலும் இந்தியத் தரப்பில் ஆர்வம் காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய இடங்களில் இந்திய அமைதிப் படையின் உயர் அதிகாரிகள் சிலர், பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பிரமுகர்களை நேற்றுச் சந்தித்து அவர்களின் கருத்தை அறிந்தனர்.

அவ்வேளை தெரிவிக்கப்பட்ட கருத்துகளையும், ஆலோசனைகளையும் இந்திய அரசின் உயர் மட்டத்துக்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டதாம்.

இதேவேளை, தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் யுத்த நிறுத்தம் இந்தியத் தரப்பினால் மாத்திரமே அறிவிக்கப்பட்டதால், அது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் என்றும்—

இருதரப்பு யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவதையே இந்தியா எதிர்பார்க்கின்றது எனவும்— இந்தியத்தரப்பில் அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளதாம்.

### சுலபமாகும்

யுத்த நிறுத்தம் என்பது பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முதல்கட்ட நடவடிக்கையே என்று இங்குள்ள இந்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும் சொல்லப்பட்டது.

எனினும் இருதரப்பு யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான சாதகமான சூழ்நிலைகள்

(6- ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் சேவை 26ஆம் திகதி நடைபெறுது
### திலீபனை நினைவு கூருவதற்காக

யாழ்ப்பாணம், செப். 17

எதிர்வரும் 26ம் திகதி திங்கட்கிழமை வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கங்களின் சமாஜத்தில் அங்கம் வகிப்போரின் பஸ்கள் எதுவும் சேவையில் ஈடுபடமாட்டா.

மேற்படி சமாஜத்தலைவர் திரு. பொன் மதிமுகராசா தலைமையில் அனைத்து பஞ்சாயத்து சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தன்னையே அர்ப்பணித்து அமரரான திலீபனுக்கு

(6- ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவுக்கு அப்பால் பஸ் சேவை இல்லை

யாழ்ப்பாணம், செப். 17

வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் மற்றும் தனியார் பஸ் சேவைகளும் இன்று வவுனியாவுக்கு அப்பால் தமது சேவையைநடத்த மாட்டாது எனத்தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன

(6- ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தீவிர பாதுகாப்பு

யாழ்ப்பாணம், செப், 17

கொழும்பில்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச, கூட்டுத்தாபனக் கட்டடங்களுக்கு காவல் போடப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் கேந்திர நிலையங்களில் முப்படையினரும்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எவரது பயமுறுத்தலுக்கும் அடிபணிய வேண்டாம் என்றும் கடைகளைத் திறந்து தாம் பாதுகாப்பு வழங்குவதாகவும் படையினர் கூறி வருகின்றனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின்பிறந்தநாளான இன்று கொழும்பில் அசம்பாவிதங்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் முன்கூட்டியே நேற்றே வாகனங்கள் அனைத்தும் தீவிரமாகப் படையினரால் சோதனையிடப்பட்டன. (ஒ-10)

## அரசு இப்படிச் சொல்கிறது

கொழும்பிலும் தென் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நேற்று அரசு, தனியார் நிறுவனங்கள் வழமை போல் செயற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கடைசிச் சந்தர்ப்பம் இது; மக்களுக்கு அமைதி தருவது
### போராளிகள் கடமை - அமிர்

கொழும்பு, செப் 7

இப்போதைய யுத்த நிறுத்தச் சூழ்நிலையான கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு அமைதியை ஏற்படுத்துவது சகலபோராளி அமைப்புகளினதும் கடமையாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சஞ்சீவிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் குறித்து சஞ்சீவி செய்தியாளர் அவரிடம் கருத்துக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசு வடக்குக் - கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்தது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மகிழ்ச்சி அடைகிறது.

இந்த மாகாணத்தில் நீண்ட காலமாக துன்பமடைந்து வரும் மக்களுக்கு இந்த யுத்த நிறுத்தம் ஆறுதலையும், அமைதியையும் கொண்டு வரவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட சகல தமிழர் போராளி அமைப்புகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த வேண்டுகோளை விடுக்கின்றது.

இந்தப் போராளி அமைப்புக்கள் தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. உயிரைத் தியாகம் செய்த இளைஞர்கள், யுவதிகள் இக்கடமை

(6- ஆம் பக்கம் பார்க்க)

## பி.பி.ஸிக்கு சொன்னது

திரு. அமிர்தலிங்கம் பி.பி. ஸிக்கு அளித்த நீண்ட பேட்டி ஒன்றில் பின்வரும் விடயங்களையும் தெரிவித்திருந்தார்.

★ தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆக்க பூர்வமான பதில கிடைக்க வேண்டும் எனறே எல்லாத் தமிழ் மக்களும் விரும்புகிறார்கள்.

★ சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க நாமும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

★ சமாதானம் ஏற்படுவது விடுதலைப் புலிகளின் முடிவில் தங்கியிருக்கிறது என்பது உண்மை. (அ-எ)

## ரணராஜா ஆளுநர்

இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக பிரதி நீதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

செங்கடகலை எம். பி. யான திரு. ஷெல்டன் ரணராஜா பல சந்தர்ப்பங்களில நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கருத்து வெளியிட்டு வந்தவர்.

## பூஸாவிலிருந்து வந்த அனைவருக்கும் நிவாரணம்
### 2,000 ரூபாவும் உடுபுடைவைகளும்

கொழும்பு,செப். 17

பூஸாவில் இருந்து விடுதலையானவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை புனர்வாழ்வு அமைச்சு மேற்கொண்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணங்கள் போல் இவர்களுக்கும் வழங்கப்படும்.

விடுதலையான ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபா பணமும் உடுபுடைவைகளும் நிவாரணமாக வழங்கப்படவுள்ளன.

பூஸாவில் இருந்து விடுதலையாகி வந்தவர் எனஉறுதிப் படுத்தப்படும் பட்சத்திலேயே அவர்களுக்கு நிவாரணம்வழங்கப்படும்.

அடுத்த மாதம் அளவில் நிவாரணக்கொடுப்பனவுகளை வழங்க புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறியவந்துள்ளது. (ஒ-10)

## ஜனாதிபதி வேட்பாளராக பிரேமதாச ஏகமனதாகத் தெரிவு
### பிரேரித்தவர்: ஜே. ஆர்; ஆமோதித்தவர்: காமினி

கொழும்பு, செப் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் திரு. ஆர். பிரேமதாச ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவரின் பெயரை ஜனாதிபதி ஜெயவர்த்தன பிரேரித்தார்.

அமைச்சர் காமினி திசநாயக்கா ஆமோதித்தார்.

அமைச்சர் அத்துலத்முதலியும் ஆதரித்தார்.

நேற்று மாலை நடந்த ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் இத் தெரிவு இடம் பெற்றது.

ஐ. தே. க. தலைவர் ரஞ்சன் விஜயரத்ன செய்தியாளர்களிடம் பேசுகையில் ஜனாதிபதி தேர்தல் டிசம்பரில் நடைபெறும் என்று சொன்னார்.

நியமனப் பத்திரங்கள் நவம்பர் மத்தியில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

## பேச்சு நடத்தும் விதத்தில் புதுடில்லி மீளாய்வு செய்ய வேண்டும்
### ஆணையாளர் யோசனை

யாழ்ப்பாணம், செப். 17

இந்திய அரசாங்கம் அறிவித்துள்ள யுத்த நிறுத்தம் ஆயுத ஒப்படைப்பை பின்னிப் பிணைந்ததாகவே இருக்கிறது.

இதனால் இந்த யுத்த நிறுத்தம் பலதரப்பினர் மத்தியிலும் வேறுபாடான [illegible] ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே தற்போது இங்குள்ள நிலைமையையும், கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து நிலைமையை மீளாய்வுசெய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து புதுடில்லி ஆராய வேண்டும்.

யாழ். மாநகராளுமன்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் சஞ்சீவிக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

முதலில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும். அதன் பிறகே ஆயுதக்கையளிப்புப் பற்றி ஆராய முடி

(6- ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

17 - 09 - 1988
புரட்டாதி — 01
சனிக்கிழமை
சுபநேரம்:
03.03முதல் 04.33வரை
ராகுகாலம்:
09.03முதல் 10.33வரை
ஷஷ்டி விரதம்

## நல்லூரில் உண்ணாவிரதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

நல்லூரில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதத்தில் பங்கு பற்றும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

நேற்று இரண்டாவது நாளாக தியாகி திலீபனை நினைவுகூர்ந்து நல்லூரில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களும் தனியார் ரியூட்டரி மாணவர்களும் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை பூஸாவில் இருந்து விடுதலையாகிய பல இளைஞர்களும் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர்.

வடபகுதியைச் சேர்ந்த பல பிரஜைகள் குழுக்களும் அன்னையர் முன்னணியினரும் இந்த உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-10)



பூஸாவிலிருந்து விடுதலையாகி வந்தவர்கள் கடந்த வியாழக்கிழமை காங்கேசன் இறங்குதுறையில் கப்பலில் இருந்து இறங்குவதை முதல்படத்திலும்— இரண்டாவது படத்தில் விடுதலையாகி வந்த ஒருவருடன் அமைதிப்படையின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே, யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன் ஆகியோர் வரவேற்று அளவளாவுவதையும் — துறைமுகத்தில் தொங்கவிடப்பட்டிருந்த ''தியாக சீலர்களை அன்புடன் வரவேற்கிறோம்'' என்ற பதாகையை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : சர்வானந்தர்) (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் மிளிரும் பல்சுவை வார இதழ்

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

Honda CB 50 Recondition (Clutch Model) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (6662)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட Co 90 Honda, மோட்டார் சைக்கிளும் Avon 18'' சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 166, கோயில் வீதி, நல்லூர். (கந்தன்கருணைக்கு காமையில்) (6661)

மிகவும் தரமானதும் நீண்டகாலம் பாவிக்கக்கூடியதுமான Tungsram Electric Bulbs எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஏக விநியோகஸ்தர்கள் சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்டெட் யாழ்ப்பாணம், கிளிநோச்சி. (C. 221)

10 Sri Car Fiat 128 U.K இல் இருந்து வருவிக்கப்பட்டது. விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 'ஐங்கரம்' 252, யாழ். வீதி, மானிப்பாய். (சவைபதிப்பிள்ளை கடைக்கு அருகாமையில்) (6501)

Lohmann இன சிவப்பு வெள்ளை முட்டையிடும் ஒருநாள் பேட்டுக்குஞ்சும், புரொயிலர்குஞ்சும் மற்றும் சேவல் குஞ்சும் 17-9-88 முதல் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- M. G. M. Forage Stores No. 208, Ist Cross St, Jaffna. (6513)

தையல் மெஷின் (எலெக்ரிக்), பாவித்த டபிள், சிங்கிள் கட்டில் மெத்தைகள் மற்றும் சகல தளபாடங்கள், சாப்பாட்டு மேசை, விருந்தைக் கதிரைகள், கண்ணாடிமேசை, விட்டுப்பாவனை Show Case, சிறிய எலக்ரிக் குக்கர், சசத் றேடியோ, குசினிப் பொருள்கள், Baby Cot, Hall Set, Pyrex கிளாஸ் வகைகள், காரியாலய மேசை, Pram, மெஷின் உடன் விற்பனைக்குண்டு. 120, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். கராச் அருகில். (6433)

### மலிவு விற்பனை

தம்புரா, வயலின், மிருதங்கம் (தஞ்சாவூர்) ஆகியனவும் கர்நாடக சங்கீதஇசை. கொண்ட கஸட்டுகள் மலிவு விலையில், பக்திப்பாடல்கள், திருமதி மணிமாறன் ஆற்றிய சொற்பொழிவுகள் கொண்ட கஸட்டுகள் ஆகியன உண்டு. அ.அ. ஆனந்தம், 17/4, ஐயனார் கோயில்வீதி, வண். மேற்கு. (6445)

தொழிற்சாலையில் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மிக மலிவு விலையில் விற்கப்படும். (காலம் 16-9-88 முதல் 22-9-88 வரை) இடம்: பேள் உலோகத் தொழிற்சாலை, 60 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்.) (6520)

### வீடு விற்பனைக்கு

வவுனியாவில் இல. 131, Station Rd, Vavuniya, எனும் விலாசம் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S. Ketharalingam, 665, Point Pedro Rd, Nallur. (6519)

### காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு பூதர்மடத்தடியில் கோப்பாய் வரவேற்கிறது என்ற விளம்பரப் பலகைக்கு கிழக்கு பக்கமாக உள்ள 6 பரப்பு காணியும் ஒரு சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. கனகசபை [கணேசன்], 26, புகையிரத நிலைய வீதி, கொக்குவில். [[தினசரி காலை 6 மணிக்கும் 12 மணிக்கும் இடையில்]. (6517)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் பருத்தித்துறை வீதியையும் ஸ்டேசன் வீதியையும் இணைக்கும் First Lane அருகே வீடு கட்டுவதற்கு வசதியான மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு, No 356 C/o Uthayan, Jaffna. (C151)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் Shetna B.380, Prima Lohmann Golden Comet, Hyline றெற்று பிறவுண், பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், புரையிலர், குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம், முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு 1. R.S.K. Farm, முருசபதி உடுவில். 2. குபேரன் ஸ்ரோர்ஸ். கொக்குவில் சந்தி, கொக்குவில். (6380)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (6143)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள்' சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6144)

## தேவை

கொழும்பில் உள்ள நிறுவனத்திற்கு எள்ளு, கடல் அட்டை (Beach De Mur) சுறுப்பீலி (Sharkfin) முதலியன ஏற்றுமதிக்குத் தேவை. விநியோகஸ்தர்கள் மாதம் ஒன்றிற்கு தரக்கூடிய தொகை Quantity) மற்றும் விலை முதலிய விபரங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும். Exports Manager, Hilltop Enterprises, 111, Sea Street Colombo - 11 (6391)

நம்பிக்கை வாய்ந்த இடங்களில் ஒன்று அரபு நாடுகளுக்குப் பலதரப்பட்ட தொழிலாளர்களும் (ஆண்கள்) Lady Tailors, Cutters ம், House Maids ம் உடனடியாகத் தேவை. பி. ப. 200-தொடக்கம் 6-00 க்குள் தொடர்பு கொள்ளவும்; Mrs. P. Danial, Miller House, K. K. S. Rd, (Mallakam Junction), Jaffna. (6399)

சாரதா இன் ஜினியேர்ஸ் ஓட்டுமடம்சந்தி, யாழ்ப்பாணம் மேற்படி ஸ்தாபனத்திற்கு பிற்ரேஸ‍ும், தொழில்நுட்ப பயிற்சியாளரும் உடன் தேவை. மேற்படி விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (6506)

### சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 மூத்த விஞயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

### அச்சக வேலையாட்கள் தேவை

அச்சுக் கோப்பாளர், மெஷின் மைண்டர் தேவை. இருபாலாரும் அனுபவ சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். No, 364, C/o உதயன், யாழ்ப்பாணம். (6514)

### பணிப் பெண்கள் தேவை

ஆங்கிலம் ஓரளவு தெரிந்த 16-35 வயதிற்குட்பட்ட, பெண்கள் இரண்டு வருட ஒப்பந்தத்தில் சிங்கப்பூரில் பணிபுரிய உடன் தேவை. சம்பளம் 2500-3000 ரூபா வரை ஒன்றரை லட்ச ரூபாய்க்கு முழுமையாகக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்கள். நற்சான்றிதலுடன் ஞாயிறு 18 ஆம்திகதி காலை 8மணி முதல் நேரில் சமுகமளிக்கவும். S. யோகரத்தினம் 96, ஆடியபாத வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (6512)

### தவறிவிட்டன

கிருஷ்ணர் ஆறுமுகம் என்பவராகிய நான் பேர்ஸ்சுடன்அடையாள அட்டையையும் ஒரு பகுதி பணத்தையும் ஒரு சங்கிலியையும் தவறவிட்டுள்ளேன். கோப்பாய்க்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நடந்தது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கவும், இவற்றை பெருமனதுடன் ஒப்படைப்பவர்களுக்கு பெறுமதிக்குரிய சன்மானம் வழங்கப்படும். (C219)

கொழும்பில் வசிக்கும் சிவமனோகரன் என்பவரின் பெயரிட்ட தேசிய சேமிப்பு வங்கிக் கோர்வை (File) ஒன்று 769 வழி இலக்க மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் மினிபஸ் சங்க காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6518)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி சடாட்சம், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் ''சக்தி சரவணு'' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடம், மட்டக்களப்பு பாம்பரிய பரம்பரை மந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல் லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6510,

### SCIENTIFIC DRESS MAKING

புதிய வகுப்புக்கள் 28-9-88 இல் ஆரம்பம். இலகுவான முறையில் கற்பிக்கப்படும். உடனடியாகத்தொடர்பு கொள்ளவும்: திருமதி செ. பாலசேகரம், No. 19, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6447)

### Spoken English with Grammar

புதிய பிரிவு அரச ஊழியர்களது வசதிக்காக மாலைநேர வகுப்புநேரம்: 4 மணி — 6 மணி செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும். ஆரம்பம்: 20-6-88 S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6435)

### ஓர் நற்செய்தி

எனது சொந்தப் பாவிப்பிலுள்ள 1 Sri (Peugeot) 3000 இலக்கம் உடைய 203 கார் அண்மையில் எரிக்கப்பட்டு விட்டது. ஆனால் கூடியளவு உதிரிப் பாகங்கள் பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளது. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வ. கனகசபை 26, புகையிரத நிலைய வீதி, கொக்குவில். தினசரி காலை 6 மணிக்கும் 12 மணிக்கும் இடையில்) (6509)

### G. C. E. (O/L) New Syllabus

மேற்படி பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- சகல புத்தகசாலைகளிலும்கிடைக்கும். உயர்கல்விப் பதிப்பக வெளியீடுகள். (6651)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

---

## பிரதேசக் கல்வித் திணைக்களம்

நல்லூர் யாழ்ப்பாணம்

ஆசிய அபிவிருத்தி வங்கி கல்வி புனருத்தாபன திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில் கட்டிடங்கள் புனர் நிர்மாணம் செய்தல், பெருந்திருத்த வேலை ஆகியவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுதல் 1988 ஒக்டோபர் 03ஆம் திகதி (1988 - 10 - 03) மாலை 2.00 மணி வரையும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் 1988 ஒக்டோபர் மாதம் 06ஆம் திகதி காலை 10.00 மணி வரையும் பின் போடப்பட்டுள்ளது.

வெ. சபாநாயகம்
பிரதேசக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(C-223)

---

\+
J.M.J

உங்கள் பயண அமைப்பாளர்

# S. P. ANTON

மகிழ்ச்சியுடன் வழங்கும்

# வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

கனடா - ஜெர்மனி - இத்தாலி
சுவிஸ் - பிரான்ஸ் - அமெரிக்கா
உடனடிப் பயண ஒழுங்குகளைச் செய்துகொடுக்கிறோம்

கொழும்பு - யாழ்ப்பாணத்தில் கனடாவுக்கு பாஸ்போட் தந்தவர்கள் உடன் எங்கள் கந்தோரில் தொடர்புகொள்ளவும்.

கனடா, கிறீஸ், யோர்தான், சைப்ரஸ், லெபனுன், பிரான்ஸ், லண்டன் முதலிய நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்கள் உடனடித் தேவை.

மற்றும் சகல விபரங்களுக்கும் உடன் தொடர்புகொள்ளுங்கள்

உங்கள் பயண அமைப்பாளர்:

## S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பு)
யாழ்ப்பாணம்.

(C/222)

---

# லோட்டஸ் சைக்கிள் டயர், டியூப் விற்பனையாளர்களுக்கு

# ஓர் அறிவித்தல்

1988 செப்டெம்பர் 14ஆம் திகதி முதல் **அசோஸியேட்டட் மோட்டர்வெய்ஸ் லிமிட்.,** ஸ்தாபனத்தார் பின்வரும் விலை மாற்றங்களைச் செய்துள்ளனர் என்பதை அறியத்தருகிறோம்.

| டயர்கள்: | | பாவனையாளர் விலை: |
|---|---|---|
| ஸ்டான்டட் டயர்கள்: | 28 x 1 1/2<br>26 x 1 3/8<br>24 x 1 3/8<br>20 x 1 3/8<br>18 x 1 3/8 | ரூபா 72-00 |
| சுப்பர் டயர்கள்: | 28 x 1 1/2 | — ரூபா 74-00 |
| ஹெவிடியூட்டி டயர்கள்: | 28 x 1 1/2 | — ரூபா 76.25 |
| டியூப்புகள் (பொருத்து) | 28 x 1 1/2<br>26 x 1 3/8<br>24 x 1 3/8<br>20 x 1 3/8<br>18 x 1 3/8 | ரூபா 20-25 |

# M/s. E.S. பேரம்பலம் & Co.,

ஏக விநியோகஸ்தர்கள்:
**லோட்டஸ் டயர் & டியூப்புகள்**
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C64)

---

### இணைப்பை ஆட்சேபித்து

# திருமலையில் சிங்களவர் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

திருகோணமலை, செப். 17

வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு ஆட்சேபம் தெரிவித்து திருகோணமலை, கந்தளாய் பகுதிகளில் நேற்று முந்த திங்களன்று சிங்கள மக்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

சிங்களவருக்குச் சொந்தமான கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. சிங்களவருக்குச் சொந்தமான வாகனங்கள் எதுவும் ஓடவில்லை.

திருமலை — கந்தளாய் ஆகிய பகுதிகளுக்கிடையில் சேவையில் விடப்பட்ட சிங்களவருக்குச் சொந்தமான வாகனங்கள் கூட ஓடவில்லை.

கந்தளாயிலும் கடைகள் யாவும் பூட்டப்பட்டன. வாகனப் போக்குவரத்து எதுவுமின்றி அப்பகுதி வெறிச்சோடிக் கிடந்தது.

திருமலை வடகரைவீதியிலுள்ள தமிழ், முஸ்லீம் மக்களுக்குச்சொந்தமான கடைகளைப் பூட்டும்படி ஒரு சில சிங்கள மக்கள் வற்புறுத்திக் காலையில் திறந்திருந்த கடைகளைப் பூட்டவைத்தனர்.

எனினும் ஒரு சில மணித்தியாலத்தின் பின்பு இந்தியப் படையினர் வந்து கடைகளைத் திறப்பிக்கச் செய்தனர். நகரத்தின் ஏனைய பகுதிகளில் எதுவித தங்கு தடையின்றி வழமை போல எல்லாம் நடைபெற்றன. (ஒ-150)

---

# 31 ஆம் நாள் இதயச் செந்நீர் அஞ்சலி

மலர்வு:
08-12-1938

உதிர்வு:
18-08-1988



## அமரர் ஜேம்ஸ் அருமைநாதன்

(யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்

எம் அன்பு நிறை ஜெம்ஸ் சேர். இங்கிருந்து நாம், உம் பிரிவு கேட்டு அதிர்ந்தோம், அழுதோம், அலறினோம். நம்பவே மறுத்தோம். மிஸ்டர், மிஸ்டர் என்று அன்புக் குரல் இன்னும் எம் காதில் ஒலிக்கின்றதே. இறைவா! விரைவில், உம் பேரின்பம் இவருக்கு அருள்க எனப் பிரார்த்தித்து, அர்ப்பணிக்கின்றோம் எம் கண்ணீர் அஞ்சலியை.

சுஜி வேதநாயகம் (Norway)
நிஷான் வேதநாயகம் (Norway)
ரெஷான் வேதநாயகம் (Norway)

சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி. (6671)

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தம்பையா செல்லம்மா

மலர்வு: 15-2-1900 உதிர்வு: 19-9-1985

திதி: 17-9-1988

அன்புத் தெய்வமே! எம்மை விட்டகன்று மூன்றாண்டுகளானாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
உங்கள் அன்பு
மருமகன்: க. கதிரித்தம்பி (அமெரிக்கா)
மகள்: க. மங்கையக்கரசி
பேரப்பிள்ளைகள்:
க. சோதிராஜன் (நோர்வே)
க. முகுந்தன் (மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை)
க. துஷிதா (மகளிர் கல்லூரி உடுவில்)
சு. புவனச்சந்திரன் (தபாலகம் யாழ்ப்பாணம்.)

''துஷித பவனம்''
அரசடி,
கே. கே. எஸ். வீதி,
மாவிட்டபுரம். (6438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+
J. M. J.
உங்கள் பயண அமைப்பாளர்
மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

# வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்
★ இத்தாலி ★ அமெரிக்கா

ஆகிய நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் எமது குழுக்கள் வாரந்தோறும் வெற்றிகரமாகப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.
மேலே குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்வதற்கு
இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.
எனவே விரும்புவோர்
உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

1. செல்வம்கொழிக்கும் குவைத் நாட்டில்
ஆஸ்பத்திரி, பாடசாலே
மற்றும் பொது அலுவலகங்களில்
சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்
**CLEANERS**
சம்பளம்: 35 — 40 டினர்

குவைத்
கப்பல் வேலை வாய்ப்புகள்
இவற்றில் பணியாற்றுவதற்கு
விருப்புகிறீர்களா?
சம்பளம்: 200 A.D. டொலர்

2. அபுதாபி நாட்டில்
பெண்களுக்கு வேலை வாய்ப்பு
ரெயிலர்ஸ்
வெட்டுநர், டிசைநர், பூ வேலை
முதலிய வேலைகளுக்கு உடனடியாகத் தேவை.

3. குவைத்
ஆண், பெண் தையற்காரர்கள்
உடன் தேவை. சம்பளம் ரூபா 5,500
மற்றும் உணவு, இருப்பிடம்.

4. கனடா, கிறீஸ்
சிங்கப்பூர், ஓமான்
முதலிய நாடுகளுக்கு
வீட்டுப் பணிப்பெண்கள்
உடனடித் தேவை.

5. சவூதி அரேபியா
கிளினேர்ஸ், கூலியாட்கள்,
வீட்டுச் சாரதி, H.V. சாரதி
உடனடித் தேவை.

மற்றும் சகல விபரங்களுக்கும்
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:
**எஸ். பி. அன்ரன்**
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C/201)


## சிறுகதைப்போட்டி

வடமராட்சி, செப்:17
வல்வை நெடியகாடு கணபதிப் படிப்பகத்தார் நடத்தும் கையெழுத்துப்பிரதியின் மூன்றாவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு சிறுகதைப் போட்டியொன்று நடத்தப்படுகிறது. (இ-160)

## பைலட்டும் விடுதலை

யாழ்ப்பாணம், செப். 17
பூஸா தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு வியாழனன்று காங்கேசன் வந்தவர்களில் ''எயர் லங்கா'' விமான ஓட்டி (பைலட்) ஒருவரும் அடங்கி இருந்தார்.

கொழும்பு - கொட்டாஞ்சேனையைச்சேர்ந்த எஸ். குமாரசாமி என்ற அவர் உதயனுக்குத் தகவல் தருகையில், ''கடந்த 86 ஆம் ஆண்டில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற ''ட்றைஸ்ரார்'' விமானக் குண்டு வெடிப்பை அடுத்து நான் கைதுசெய்யப்பட்டேன்.

பயங்கரவாத சம்பவங்களில் எதுவும் ஈடுபாடில்லாத நான் தமிழன் என்ற ஒரே காரணத்தினாலேயே கைதாகி சிறையில் அடைக்கப்பட்டேன்'' என்றார்.
(ஒ-9)

## வதந்திகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, செப் 17
வதந்திகளுக்குச் செவிமடுக்க வேண்டாம் என்று அரசு விசேட அறிக்கை மூலம் மக்களைக் கோரி உள்ளது. (இ—எ)

## நாட்டரிசி விலை

கொடிகாமம், செப். 17
கொடிகாமச் சந்தையிலும் கடைகளிலும் நாட்டரிசி விலை ஏறிவருகிறது. (இ-75)

## யாழ்ப்பாணத்துக்கு எப். எம் ஒலிபரப்பு

கொழும்பு செப் 17
யாழ்ப்பாணத்துக்கான எப். எம் ஒலிபரப்பு விரைவில் முன்னேற்றமடையும்.

இதற்காக கரஹத்தனை, ரடெல்ல ஆகிய இடங்களில் விசை அதிகரிப்பு ட்ரான்ஸ் மீற்றர்கள் நிறுவப்படவுள்ளன என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் லிவிவி ஜேமான தெரிவித்தார்.
தற்போதைய எப்.எம் ஒலிபரப்பு யாழ்ப்பாணத்தில் தெளிவாகக் கேட்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ

## அனுக்கிரமிப்பு உடன்பாடு

கேப்டவுன், செப் 17
தென் ஆபிரிக்காவின் நிறவெறி அரசும் மொஸாம்பிக்கறுப்புஇன அரசும் அனுக்கிரமிப்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள சம்மதித்துள்ளன. தென்ஆபிரிக்க ஜனாதிபதி பிக்போத்தா மொஸாம்பிக் சென்று ஜனாதிபதி சிஸ்ஸேனோவுடன் பேச்சுக்கள் நடத்தினர்.
அப்போதே இந்த உடன்பாடு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (எ)

# ஒரு கர்ப்பூர மலையின் கதை




1987 செப்டம்பரில்

யாழ்ப்பாணத்து நல்லூரில்
ஊரறிய ஒரு சந்தனக் கட்டை தன்னைத் தேய்த்தொழித்துக் கொண்டது;
உலகறிய ஒரு கர்ப்பூர மலை ஒளியெறிந்து தன்னை முடித்துக் கொண்டது.

## திலீபன் மறைந்து போனன்

ஓர் இயக்கத்தின் பிரதிநிதியாகவா அவன் இறந்து போனன்?
ஒரு முழுச் சமுதாயத்தின் மனச் சாட்சியாக,
அதன் வேதனையின் வெளிப்பாடாக

அவன்
வாடி
தேய்ந்து
நூர்ந்து போனன்!

அவன் வடக்கிருந்த நேர்மைத் துணிவினூடே
ஈழத்துத் தமிழர்களின் வருங்கால வளம் புன்னகைக்கின்றது.
கர்ப்பூர மலை நீறுகிவிட்டது.
அந்த நீறு.................
ஒவ்வொருத்தர் நெற்றியிலும்...................நெஞ்சிலும்

---வல்வை வர்த்தகர் சங்கமும்
வடமராட்சி மக்களும்
(C. 62)


உ
## நன்றி

நாளது 05 – 09 – 1988 அன்று இனிதே நிறைவேறிய எமது திருமணத்தின் போது எமது பெற்றோரின் அழைப்பை ஏற்றுச் சமுகந்தந்து எம்மை ஆசிர்வதித்தும், அன்பளிப்புகள் வழங்கியும், வாழ்த்துக்கள் அனுப்பியும் மகிழ்வித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குமரகுருபரன் — சிந்தியா
''பொன்னம்பல வாசா'',
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
(6498)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட ஆங்கில வகுப்பு

To help you begin, build up & enrich your English

## AN INTEGRATED ENGLISH COURSE

2ஆவது பிரிவு

ஆரம்பம்: 01-10-1988

6 மாத கால தீவிரப் பயிற்சி

ஆசிரியர்:

**திரு. T. N. பஞ்சாட்சரம்**

பாடத்தொகுதி:

ENGLISH SPEECH PRACTICE
GRAMMAR & USAGE
VOCABULARY ENRICHMENT
READING WITH UNDERSTANDING
PRACTICE IN WRITING & CORRESPONDENT.

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.
★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.

முற்பகல் 10 — 12 மணி வரை.

விவரங்களுக்கு:

**ASTAN Institute**

166/1, HOSPITAL ROAD, JAFFNA.

(A S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.)

(C 199)



## ஆசாரிய அபிஷேகம்

(குரு பட்டமளிப்பு விழா)

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 22 ஆம் நாள் (07-09-1988) புதன்கிழமை துவாதசி திதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் எமது கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

**கிருஷ்ணராஜா சர்மாவுக்கு**

மலேசியா குவந்தான் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் தீட்சா குரு, கிரியா கலாபமணி, சிவாகமஞானசாகரம் டாக்டர் N. சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில்

**ஆசாரிய அபிஷேகம்** சிறப்பாக நடந்தேறியது.

தகவல்:

சொ. பஞ்சாட்சர ஐயர் தம்பதிகள்.

கலட்டிப் பிள்ளையார் கோயில், புங்குடுதீவு-10.

(6656)



# ஊஷா

## ஊஷா விற்பனையாளர்கள் தேவை.

சகலவிதமான ஊஷா தையல் மெஷின்கள், காற்றாடிகள் விற்பனை நிலையங்களை நாடு முழுவதிலும் நிறுவி வருகின்றோம். வடமாகாணத்திலும் எமது விற்பனையாளர்கள் தேவை. பின்வரும் பட்டினங்களில் சிறந்த விற்பனை வாய்ப்புள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வசதியான காட்சியறைகள் இருப்பது அவசியம்.

| | |
|---|---|
| 1. வவுனியா. | 8. அச்சுவேலி. |
| 2. மாங்குளம். | 9. உரும்பிராய். |
| 3. மன்னார். | 10. தெல்லிப்பளை |
| 4. கிளிநொச்சி. | 11. காங்கேசன்துறை |
| 5. முல்லைத்தீவு. | 12. மானிப்பாய். |
| 6. பருத்தித்துறை. | 13. ஊர்காவற்துறை. |
| 7. நெல்லியடி. | 14. காரைநகர். |

விற்பனை வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ள ஏனைய பட்டினங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

எமது சகலவித ஊஷா மெஷின்களையும் காற்றாடிகளையும் விற்பனை செய்யும் முகவர்களுக்கு உயர்ந்த கமிஷன் மற்றும் விற்பனை ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.

முழு விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

திரு. கே. கருணாகரன் பிரதேச விற்பனை அதிகாரி

பொற்கலன்தம்பை, தெல்லிப்பளை.

**ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட.**

68, அத்திடிய வீதி, ரத்மலானை. தொலைபேசி: 71-6922 7934, 7381



## குரு வீடியோ சென்ரர்

எமது நேற்றைய

★ புதிய வெளியீடுகள் ★

1. ஜீவா ......(ஒறிஜினல்)
★ சத்தியராஜ் ★ அமலா

2. மேளம் கொட்டு தாலி கட்டு (ஒறிஜினல்)
★ ராமராஜன் ★ சரண்யா ★ S.S.சந்திரன்

3. இல்லம் ......(ஒறிஜினல்)
★ சிவகுமார் ★ அமலா ★ சந்திரசேகர்

"இல்லம்" படத்தின் கொழும்பு மாஸ்ரர் பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

குரு வீடியோ சென்ரர்,

180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6450)



## CEYGMA PUMPS
## சிக்மா பம்ப்ஸ்

உங்கள் தேவைகளுக்கேற்ற

மின் மோட்டர்கள்
Electric Motor Pumps

| | | | |
|---|---|---|---|
| ½ HP. | 1" X 1" | — | 3500-00 |
| ¾ HP. | 1¼" X 1¼" | — | 3950-00 |
| 1 HP. | 1¼" X 1¼" | — | 4750-00 |
| 1 HP. | 2" X 1½" | — | 5250-00 |
| 1½ HP. | 2" X 2" | — | 5850-00 |

நீர் இறைக்கும் இயந்திரங்கள்
Engine Pumps

இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
Indian Villiers Mk, 12 7250-00

குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது
Kubota Ks. 160 8250-00

இப்பொழுது தாராளமாகக் கையிருப்பில் உள்ளன. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் உண்டு. பழுதடைந்த பம்ப்கள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விசேஷ பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்.

UNITED AGRO ENGINEERING


274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
C/216 யாழ்ப்பாணம்.



## எச்சரிக்கை

வாடிக்கையாளர்களே!

உங்கள் அபிமான சிக்மா மின் மோட்டர்களை வாங்கும்போது மிகவும் அவதானித்து வாங்கவும். நாம் உற்பத்தி செய்யும் எல்லா பம்ப்களிலும் "CEYGMA" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கும்.



● போலியான நீல நிற பம்புகளை வாங்கி ஏமாறுநீர்கள்

● "CEYGMA" என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள்

CEYGMA PUMPS
சிக்மா பம்ப்ஸ்

United Agro Engineering

274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.


## பிற்போடப்பட்டுள்ளது

புற்றுநோயாளர் விடுதி நிதிக்காக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மகாஜனக் கல்லூரிப் பிரிவு ஆதரவில் இடம்பெற இருந்த இராஜன் இன்னிசைக் குழுவினர் வழங்கும் "தெய்வீக ராகங்கள்" நிகழ்ச்சி 18-9-88 அன்று தியாகி திலீபனின் நினைவாக துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் 2-10-88 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. 17-9-88 அன்று இடம்பெற விருந்த பாடல் போட்டி நிகழ்ச்சியும் 1-10-88 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மகாஜனக் கல்லூரிப் பிரிவு**

(6655)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. செல்லத்துரை மகாதேவன்

பிறப்பு. 01-04-1936 இறப்பு. 04-08-1988

திதி:- 17-9-1988

அன்புடனும் பாசத்துடனும் பழகி எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த அன்னாரின் மறைவிற்காக அவரது குடும்பத்தாருடன் சேர்ந்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
ஸ்ரீராமகிருஷ்ணா
ஸ்ரீதாமோதரவிலாஸ்
பாலி பஸ் நண்பர்கள்.

(6554)

## ஓராண்டு நினைவஞ்சலி



Dr. கந்தவனம் சுப்பிரமணியம்
(Retired Director of Anti- Malaria-Campaign)

மண்ணில்: 6-8-31
விண்ணில்: 17-9-87

எங்கள் குடும்பத்தினைச் செழிக்க வைத்து கண்ணின் மணிபோலக் காத்து எம்மையெல்லாம் மேலோங்க வைத்த குல தெய்வமே! ஓராண்டு பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், பெருமக்கள்.

திருமதி த. ஐயாத்துரை,
167, கண்டி ரோட்,
யாழ்ப்பாணம்.

(6553)

## 99ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 24—02—1935

●

அநியாயத்தின் பிடியில்; 10—06—1988

●

திதி: 06—09—1988

**திரு. கந்தையா தணிகாசலம்**

தாயற்றோர் பலபேரும், பசித்தவேளை சாப்பாடில்லாதவர்கள் பலரும் பெற்ற சேயற்றோர் பல்லோரும், உடுப்பதற்கோர் சிற்றுடை யில்லாரும் எதிர்த்துப்பேச வாயற்ற ஏழைகளும் சுருண்டு தூங்க மனையற்றோர் ஆயிரமும் பல நாட்போரில் நோயுற்றுக் கிடக்கின்ற வேளை நோகாமல் காப்பதுதான் மனிததர்மம் என குடத்திலே சோற்றையள்ளி கொடுத்த கை மீளுமுன்பே வெடுக்கெனக் கடித்து விட்டனர்.....?


மனைவி: திருமதி தணிகாசலம்
மகள்; வத்சலா
மகன்; திருத்தணிகன்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

( 6491 )


## N.E.I. ELECTRIC WATER PUMP

தரமான சேவைக்கும் நீண்டகால உழைப்புக்கும்



கேட்டு வாங்குங்கள்

**நியூ்றேன் வாட்டர் பம்ஸ்**

Manufactures:-

**N. E. INDUSTRIES**

141, Stanley Road, JAFFNA.


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

1988 ஐப்பசி மாதம் 7 ஆம் தேதிவரை பின்வரும் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவி : கொள்வனவு அலுவலர்

சம்பள அளவுத் திட்டம்:
ரூபா 2500 – 5 x 50; 14 x 75 — 3800
(மாதமொன்றிற்கு)

தகைமைகள்:

(1) க. பொ. த. (சாதாரண தரம் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் மூன்று திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச்சித்திகள், சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியையும், எண்கணிதம் வர்த்தக எண்கணிதம் / கணிதம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கத் திணைக்களம், அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் களஞ்சியத்தைப் பேணுவதிலும் பதிவேடுகளைப் பேணுவதிலும் குறைந்தபட்சம் 15 ஆண்டு அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். 15, ஆண்டு அனுபவத்தில் 5 ஆண்டு அனுபவம் பொறியற் கருவிகள். மின்சார, உலோகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் அடையாளம் காண்பதிலும் இருத்தல் வேண்டும்.

(3) வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையை கீழே கையொப்பம் இட்டுள்ளவருக்கு அனுப்பிப் பெறக்கூடிய விதிக்கப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

அரசாங்க சேவை / அரச கூட்டுத்தாபனங்கள்/சபைகளிலுள்ள அலுவலரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும், இத்தேவைக்கு இணங்கி ஒழுகாவிட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

—பதிவாளர்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
08-09-1988

C 156


## குவைத் வேலை வாய்ப்பு

**ட்ரைவர்:**

நீண்ட ட்ரெயிலருடன் கூடிய பார வாகனம் ஓட்டக் கூடிய ட்ரைவர் தேவை.

**சம்பளம்: ரூபாய் 15,000/-**

★ ட்ரெயிலருடன் கூடிய ட்ராக்டர் ஓட்டுவதில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

★ 17ஆம் திகதியும் 18ஆம் திகதியும் நேரில் சந்திக்கவும்.

**சிவா**

6/3, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(6475)


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வீதிக்குப் பெயரிடுதல்

முத்திரை சந்திக்கும் ஜமுனு வீதிக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் இருந்து பிரிந்து 30 அடி அகலம் 200 அடி நீளமாக சென்று பின் 15 அடி அகலம் 150 அடி நீளமாகச் சென்று முடிவடையும் ஒழுங்கைக்கு ''இராஜதானி வீதி'' எனப் பெயரிடுமாறு எம்மிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இது சம்பந்தமாக எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினுல் இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் ஆட்சேபனைக்கான காரணங்களைக் காட்டி எழுத்து மூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்ருர்கள்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
07- 09- 1988 (C214)



வடபகுதி வாழ் மக்களுக்கு!

## 'மொகமதலி அப்துலலி'

ஸ்தாபனத்தினுல் அறிமுகப்படுத்தப்படும் மேலும் சில

**புதிய சேவைகள்**

எம்மிடம் தரத்தில் சிறந்த
**கோழி இறைச்சி (Broilers)**
நிதானமான விலையில்
விற்பனைக்கு வந்துள்ளது.

ஜப்பானில் இருந்து
எம்மால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட

# Rinnai Gas Cookers

பலவித மொடல்களில்
விற்பனை செய்கின்ருேம்.

அதுமட்டுமல்ல
பழுதான Rinnai Gas Cookersக்குத் தேவையான உதிரிப் பாகங்களைப் பொருத்தி எம்மால் திருத்திக் கொடுக்கப்படும்.

**மொகமதலி அப்துலலி**
**5 - 7, பெரிய கடை,**
**யாழ்ப்பாணம்.**
(6350)



**ஆங்கிலத்தில் பேச வேண்டும்**
**என்ற விருப்பம்-**
**ஆனுல் தவருகப் பேசி**
**விடுவோமோ என்ற தயக்கம்-**
**இதுதானே**
**உங்களது பிரச்சினை?**

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது
WRITTEN ENGLISH
ஆனுல் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது
SPOKEN ENGLISH
எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.
இதனைக் கருத்திற்கொண்டு
**BRIGHT TRAINING CENTRE**
நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிருர்கள்.


உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்
**SPOKEN ENGLISH**
பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.

விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க.

# BRIGHT
## TRAINING CENTRE
**P. O. Box 162, Colombo.**
(6264)


தான் கொண்ட இலட்சியத்துக்காக அண்ணல் காந்தி அடியொற்றி தன்னுயிர் ஈந்த

# தியாகத் தீபம் திலீபனுக்கு அஞ்சலி!



"மக்கள் புரட்சி வெடிக்கட்டும். தமிழீழம் மலரட்டும்"-
திலீபன் பரணப் படுக்கையில் இருந்து மக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி.

- தமிழீழ மக்கள் சார்பில்

## குர்பாபிஷேக மலர் வெளியீடு

இக் கோயிலின் சிறப்பு இம்மலரில் வெளிவந்திருப்பதும் அம்பிகையின் திருவூஞ்சல் வெளிவந்திருப்பதும் மலருக்கு அணிகலனுக விளங்குகின்றன. அம்பிகையே இம்மலரினுள் இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூலைப்பெற்றுக் கொள்ள வேண்டும்.

மத்துவில் சேலத்து அம்மன் இராசராஜேஸ்வரி அம்பாள் கோயிற சங்காபிஷேகத்தின் போது கும்பாபிஷேகச் சிறப்பு நூலை வெளியிட்டு வைத்துப்பேசுகையில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா மேற்கண்டவாறு கூறினுர்.

பிரம்மஸ்ரீ வேதக்குட்டி குருக்கள் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

முதற்பிரதியை திரு. ஆ. சி. பா. சுந்தரம் பெற்றுக்கொண்டார்.

திரு. முத்தையா தொடர்ந்து பேசும்போது "நம் ஒவ்வொருவரும் வெள்ளிக்கிழமை தோறும் தவருது கோயிலுக்குச் சென்று கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டும். கூட்டுப்பிரார்த்தனை ஒன்றினுல்தான் இந்த வையத்தில் மனிதன் இறைவனுடன் தொடர்பு கொள்ள முடியும்" எனக் கூறினுர். (ச)

## மன்னூரில் ஹர்த்தால் பகிஷ்கரிப்பு

அடம்பன் கொத்தணிப் பகுதியில் உள்ள வட்டக்கண்டல் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை உள்ளடக்கிய எட்டுப் பேரை உடனடியாக விடுவிக்குமாறு கோரி மன்னூர் மாவட்டம் எங்கும் கடந்த 13 ஆம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்று அலுவலகங்கள், பாடசாலைகள் இயங்கவில்லை. போக்குவரத்தும் ஸ்தம்பித்திருந்தன.

இச் ஹர்த்தாலுக்கு முதல் நாள் வட்டக்கண்டல் வித்தியாலய மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். (ச)

## புதிய கட்டடம்

சற்போதுகரம்பு உயர் தரப்பள்ளி சிவசம்பு வித்தியாலயத்தின் புதிய கட்டடத்தைரூபா 2 லட்சம் செலவில் கட்டித் தருவதற்கு றெட்பான நிறுவனம் முன்வந்துள்ளது.

மேற்படி ஆக்கவேலைகள் யாவும் விரைவில் தொடங்கும் என வடமாநிலக் கல்விப் பணிப்பாளர், திரு. வெற்றிவேலு சபாநாயகம் தெரிவித்தார். (ச-160)


## முக்கிய அறிவித்தல்

**கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி பின்போடப்பட்டுள்ளது**

கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தினரால் இன்று நடத்தப்படவிருந்த கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி மறு அறிவித்தல் வரை பின் போடப்பட்டுள்ளது.
(6660)



கற்பகதருவாக இயற்கை தந்த பனை வளத்தை நம்பியுள்ள எம்மக்களே!

உங்கள் பனம் உற்பத்தியை இல 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் காரியாலயத்தில் விற்பனை செய்து வருமானத்தைப் பெறுங்கள்.

நாட்டுக்காக உயிர் நீத்த உத்தமர்கள் நினைவாக வீட்டுக்கொரு பனம் விதையை நாட்டுங்கள்.

**தலைவர்,**
பனை அபிவிருத்திச் சபை.

தலைமை அலுவலகம்:
பனை அபிவிருத்திச் சபை,
இல. 54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C137)



## மண்டபம் விற்பனைக்குண்டு

உருக்கு கேடரினுல் அமைக்கப்பட்ட 40 அடி அகலமுள்ள 7 ஊசிக் கால்களைக் (Truss) கொண்டதும், சமம்கொண்ட பீலித் தகரத்தினுல் வேய்ந்து 4 பக்கங்களும் தகரத்தினுல் அடைத்த 80 அடி நீளமுள்ள மண்டபம் விற்பனைக்குண்டு. தொழிற்சாலை, களஞ்சியசாலை, அரிசி ஆலை, கருஜ் அமைப்பதற்கு மிகச்சிறந்தது. இலகுவாக கழற்றுவதற்கு ஏற்றமுறையில் அமைக்கப்பட்டது.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;-
உரிமையாளர்: ராஜ் சினிமா
ஊர்காவற்றுறை. (6665)



# 89 A/L மாணவர்கட்கு

**ஆரம்பம்: 17-9-88**
**துரித மீட்டல் வகுப்பு**
**பௌதிகவியல்**
**SAT & SUN — 4.00 p. m.**

ஆசிரியர்:
**ரவீந்திரநாதன், B. Sc.**
**3-ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**
(C 203)



# VACANCIES IN SAUDI ARABIA

1. ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners } 400 SR
2. எயர்போட் கிளீனர்ஸ் Airport Cleaners } 400+100

வயதெல்லை 21 - 49 வரை

இரண்டு வாரத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.

# T. V. TRAVELS & TOURIST

Brown Road,
(Railway Station Front)
KOKUVIL.
(C/208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாரதியார்**

''பயிற்றுக்குச் சோறிட வேண்டும்.
இங்கு வளரும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல் கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்''

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ''நூற்றாண்டு விழா நினைவு வெளியீட்டை'' பெற்றுக்கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்

**மில்க்வைற்**, யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

17 - 09 - 1988 சனிக்கிழமை

**வல்லிபுரக் கோவில் தேர்த்திருவிழாவில்**
**24-09-1988**

**மில்க்வைற் - சகாய விற்பனை**

மில்க்வைற்தயாரிப்புகள் ரூபா. 20/க்கு வாங்குவோருக்கு பொலித்தீன் பையில் அழகிய கிருஷ்ணர் ஸ்ரிக்கர் உட்பட பயன் தரும் மரங்களும் வேறு பல அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதியான பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



தியாகச் செம்மல் திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்டு மரணித்த நல்லூரில் அவரது தியாகத்தை நினைவுகூரும் வகையில் ஆண்களும், பெண்களும் அடையாள உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். ஆரம்ப நாளான கடந்த வியாழக்கிழமை நல்லூர் ஆலய முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம். (படங்கள்: ஜெயம்) (ஒ)

## குருநகர் கடற்பகுதியில் மீன்பிடித்தவர் சூட்டுக்குபலி!

### யுத்த நிறுத்தத்துக்கு முன் நடந்தது

யாழ்ப்பாணம், செப் 17

கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

வேலன் யாக்கோ (வயது 56) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

யுத்த நிறுத்தத்துக்கு முந்திய நாளான கடந்த 14 ஆம் திகதி பகல் குருநகர் இறங்கு துறைக்குச் சமீபமாக மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு மரணமானார். (ஒ-10)

## காசியின் சகோதரர் கொலையுண்டார்

மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு தாளங்குடாவில் இந்தியப் படையினரின் முற்றுகையின்போது கவிஞர் காசிஆனந்தனின் சகோதரர் உட்பட இருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினர்.

இம்மாதம் பத்தாம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

வள்ளுவன் எனப்படும் சிவஜெயம் (37), புதார் வாசியான ஸ்ரீ (27) இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

சடலங்கள் மரண விசாரணை இன்றி உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஒ-21)

## ஆரம்ப ஆசிரியருக்கான பயிற்சி நெறி 21இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 17

ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன் பயிற்சி இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

ஆரம்ப ஆசிரியர்களாக புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்களும், முன்னர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெறத் தவறியவர்களும் இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வர்

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டவர்களும், முன்னர் பயிற்சி பெறாதவர்களுமாக 58 பேர் நேற்றுத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.

நேற்றுப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் திங்கட்கிழமை (19ஆம் திகதி) கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்குச் சென்று தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தெரிவித்துள்ளார், (ஒ-10)

## மினிபஸ்...

அஞ்சலி செலுத்துமுகமாகவே சேவைகளை நடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை திலீபனின் தியாகத்தை எடுத்துக் கூறும் சுவரொட்டிகளும் சமாஜசார்பில் ஒட்டப்படவுள்ளன. (ஒ-10)

## பேச்சு நடத்தும்........

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும்.

### வரவேற்பராம்

இந்திய விசுவாசமான மன நிலையில்பேச்சு வார்த்தை ஒன்றை ஆரம்பித்து அதன் மூலம் பிரச்சினைக்கு விசுவாசமான தீர்வு ஏற்படுமானால் அந்தத் தீர்வை தாம் வரவேற்பதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் அண்மையில் என்னிடம் தெரிவித்தார்.

விடுலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை நான் ஏற்கனவே இந்தியத் தரப்பினருக்குத் தெரிவித்துவிட்டேன்.

எனவே விசுவாசமான மன நிலையுடன் கூடிய ஒரு பேச்சுவார்த்தையே இப்போது தேவைப்படுகிறது.

### 3 ஆம் திகதியன்று

இதேவேளையில் கால வரையறையற்ற ஒரு யுத்த நிறுத்தத்தையும் அதனோடு இணைந்த பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தியத் தரப்பினருக்கு கடந்த மூன்றும் திகதி கடிதம் மூலம் அறிவித்துவிட்டேன்.

பேச்சுவார்த்தைகளின் போது முரண்பாடுகள் ஏற்பட்டால் தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளைத் தடையின்றி மேற்கொள்வதற்கு வசதியாகவே கால வரையறையற்ற யுத்த நிறுத்தம் கோரப்பட்டது.

இதேவேளையில், பேச்சு வார்த்தைகளின் போது இரு பகுதியினருக்கும் ஒரு நடுவராக இருந்து அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்,

முக்கிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன் அவசியமான பட்சத்தில் ஓர் ஆயத்த நிலையை ஏற்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட பேச்சுவார்த்தை ஒன்று ஏற்பாடு செய்யப் படுமாயின் அதில் கலந்து கொள்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

பேச்சுவார்த்தைகளின் போது ஏற்படும் இக்கட்டான நிலைமைகளைச் சமாளிப்பதற்காக இரு பகுதியினருக்குமிடையில் மத்தியஸ்தம் வகிப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

என்னுடைய இந்த நிலைப்பாடுகுறித்து நான் இந்தியத் தரப்பினருக்கும் தெரிவித்துள்ளேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-ஐ)

## முல்லைத்தீவு மாவட்ட ஊரடங்கில் தளர்வு

### பஸ் சேவையும் ஆரம்பம்

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தகையோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் மேலும் சில மணி நேரம் தளர்த்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கான போக்குவரத்துச் சேவைகளும் நேற்று முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன.

ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி முதல் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வந்தது. அதை அடுத்து அப் பகுதிகளில் பலத்த தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஊரடங்கு உத்தரவை தளர்த்தக்கோரி அங்கு பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும்நடத்தப்பட்டன.

இதன் காரணமாக 30ஆம் திகதியில் இருந்து இரண்டு மணிநேரம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு வந்த போதிலும் போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை.

எனினும் இந்திய அரசின் யுத்த நிறுத்தத்தை அடுத்து அங்கு காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணிவரை ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருப்பதாக அறியவந்துள்ளது. (ஒ-10)

## 25இல் பட்ஜட்

கொழும்பு, செப், 17

1989 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிதிஅமைச்சர் நைனா மரைக்கார் அடுத்த மாதம் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## ஒலிம்பிக் இன்று

24ஆவது ஒலிம்பிக் போட்டி இன்று தென் கொரியத் தலைநகரான சோலில் ஆரம்பமாகிறது.

159 நாடுகளைச்சேர்ந்த 9,627 வீரர்கள், வீராங்கனைகள் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

இவர்களில் 7, 150 பேர் ஆண்கள். பெண்கள் 2, 477 பேர். (ஒ-எ)

## கடைசிச் சந்தர்ப்பம்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைச் செய்தாக வேண்டும்,

கடைசிச் சந்தர்ப்பமான இதனைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு அமைதியை ஏற்படுத்துவதே அவர்களின் கடமை.

நாட்டில் ஏற்படப் போகும் அரசியல் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகளைப் பலப்படுத்த வேண்டியது தமிழர் அமைப்புக்களின் பொறுப்பாகும்.

அரசமைப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்திலும் மாகாண சபைச் சட்டத்தின் கீழான வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்விலும் காணப்படும் குறைபாடுகளை நிவிர்த்தி செய்ய வேண்டிய தேவையை தமிழர் விடுதலைக் கூட்டணி அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இக் குறைகள் நிவிர்த்தி செய்யப்படுவது குறித்து இந்திய அரசும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மகிழ்ச்சி அடைகிறது.

பழையதை மறந்து சகல தமிழ் அமைப்புக்களும் ஒன்றுபட்டு இணைக்கப்பட்ட வடக்குக் - கிழக்கு மாகாணத்தில் உண்மைப் பிரதிநிதித்துவம் கொண்ட அரசாங்கம் ஒன்றை அமைக்கச் சாதகமான முறையில் உதவ வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சகல தமிழர் அமைப்புக்களையும் வேண்டுகிறது- இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (அ-எ-3)

## ஐ.சோ. அணி தேர்தலில் போட்டியிடும்

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய சோஷலிச அணி போட்டியிடும்.

இலங்கை மக்கள் கட்சியின் பொதுச் செயளாளர் வை. பி. டி. சில்வா இதனைத்தெரிவித்தார்.

''ஜனாதிபதித் தேர்தலில் எமது அணிபோட்டியிடாது என்று வெளியான செய்தி ஆதாரமற்றது. உண்மைக்குப் புறம்பானது'' என்று அவர் கூறினார்.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றுக் கொள்கைகளைக் கொண்ட ஒரே ஒரு தேசியக்கட்சி எமதே என்று அவர் சொன்னார். (ஒ-எ)

## வவுனியா......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வின் பிறந்தநாளான இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்திருந்ததை அடுத்தே இந் நிலை ஏற்பட்டுள்ளதாக அறியவருகிறது. (ஒ-10)

## புலிகளுடன்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அதன்மூலம் வெகு சுலபமாக ஏற்பட வாய்ப்புண்டு என பிரஸ்தாப வட்டாரங்கள் கருதுகின்றன என்றும் தெரிய வருகிறது.

இதேவேளையில் பூஸாவிலுள்ள எஞ்சிய தமிழ் அரசியல் கைதிகள் சகலரதும் விடுதலையைத் துரிதமாக்குவதற்கான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெலிஓயாத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் குறித்தும் இந்திய அரசாங்கத்தின் கவனத்துக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எஞ்சிய தமிழ் அரசியல் கைதிகளின் துரித விடுதலை ஒரு நம்பிக்கையான சூழ்நிலையை சம்பந்தப்பட்டவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்று இந்தியத் தரப்பில் கருதப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

மேற்கூறப்பட்ட அம்சங்களைப் பரிசீலனை செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து இந்திய அரசாங்க வட்டாரங்களில் தீவிரமான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. (அ-ஐ-10)

## அந்தியேட்டி அழைப்பு



**திருமதி நேசம்மா நடராசாச் செட்டியார்**

1 - 9 - 88 இல் அமரத்துவமடைந்த திருமதி நேசம்மா நடராசாச் செட்டியார் அவர்களின் அந்தியேட்டி இன்று 17 - 9 - 88 சனிக்கிழமையும் வீட்டுக்கிருத்தியம் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இல. 276, பருத்தித்துறைவீதி, நல்லூரிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவற்றில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(6659)

## யுத்த நிறுத்த மீறல் இல்லை

கொழும்பு செப் 17

வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் எதுவித மீறல் சம்பவங்களோ, அசம்பாவிதங்களோ நிகழவில்லை.

இவ்வாறு இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார். (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா நவரட்ணம்

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி இராசம்மா நவரட்ணம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற P. W. D Overseer நவரட்ணத்தின் அன்பு மனைவியும், இராசரட்ணம் (சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), சிவசுப்பிரமணியம் (சவூதி அரேபியா), தெட்சணாமூர்த்தி (பாதுகாப்பு பரிசோதகர் மக்கள் வங்கி, வவுனியா). ஆகியோரின் அன்புத்தாயாரும், முன்னைநாள் பண்டாரவளை பிரபல வர்த்தகர் இராசையாவின் அருமைச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 17 - 09 - 1988 சனிக்கிழமை காலை 10-மணியளவில் வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந- இராசரட்ணம்
சித்தன்கேணி.

'' ஊர்மணியம்ஸ் ''
சித்தன்கேணி.

(6556)

## சின்னத்துரை - விஜயகுமார் (ஆனந்து)

சின்னத்துரை - விஜயகுமார் (ஆனந்து) 13- 9- 88 இல் சுவிஸ்லாந்தில் அகால மரணமாகிவிட்டார். இவர் சின்னத்துரை, காலஞ்சென்ற மங்கையற்கரசி (பூமணி) யின் அன்பு மகனும் சரவணபவானந்தன் (பிரபா ஸ்ரோர்ஸ் நல்லூர்மார்க்கட், கல்வியங்காடு) அவர்களின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பே. சின்னத்துரை

புலவனார் வீதி.
கல்வியங்காடு.

(6673)

## வேலுப்பிள்ளை புஷ்பநாயகம்

முன்னாள் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க உத்தியோகஸ்தரும் தற்போது ஓமான் வடிகால் சபை உத்தியோகஸ்தருமான திரு. புஷ்பநாயகம் அவர்கள் 6 - 9 - 1988 அன்று ஓமானில் காலமாகி விட்டார்.

இவர் சுலோஜனாதேவியின் அன்புக் கணவரும், டிலக்ஷியின் அருமைத் தந்தையும், திருமதி மகேஸ்வரி வேலுப்பிள்ளையின் அன்பு மகனும், திரு, திருமதி பொன்னம்பலத்தின் அன்பு மருமகனும், அகிலநாயகி, துவாரகாதேவி, விவேகானந்தன் (Commercial Bank of Ceylon Ltd, Colombo) காலஞ் சென்ற மகேந்திரராஜா (People's Bank Chunnakam) Dr. விபுலானந்தன் (Canada) தனலக்ஷ்மி, கருணைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணம் (Engineer, National Water Supply) லலிதா காலஞ்சென்ற துரைராஜசிங்கம், பரமேஸ்வரன், ஜோதி லக்ஷ்மி காலஞ்சென்ற உமாதேவி, Dr. மனோகரி (Canada) சிவலிங்கம் ராஜமனோகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 18 - 9 - 1988 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கோப்பாய் தெற்கு புதுவளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி. சு. புஷ்பநாயகம்

(6677)

## லூசியா மாகிரேட் இரத்தினம்

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 173, வேம்படி வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான லூசியா மாகிரெட் இரத்தினம் அவர்கள் 15-9-88 அன்று காலமாகி விட்டார்.

அன்னார், காலஞ்சென்ற ச. பஸ்தியாம்பிள்ளையின் (ஹார்கில்ஸ்) அன்பு மனைவியும், மலர், இராணி, மெனிக்கா (சிஸ்ரர் மாங்குளம்), ஜெயமணி, லூட்ஸ் துரை (சுவிஸ்லாந்து), ராஜினி ஆகியோரின் தாயாரும், ஞானப்பிரகாசம் (ஓவசியர்), காலஞ்சென்ற S. F. சந்தியாபிள்ளை (ஆசிரியர்), யோன் பிள்ளை (சிறுப்பர்), யூலியர், சுவாமிநாதர் (பொறியியலாளர்-கொழும்பு) ஆகியோரின் மாமியாருமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உறவினர், நண்பர்கள் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
173, வேம்படி வீதி. அ. ஞானப்பிரகாசம்

(6676)

## திரு. K. துரைராசா

மாசியப்பிட்டியைச் சேர்ந்த திரு K. துரைராசா காலமானார், இவர் காலஞ்சென்ற கனகசபை விசாலாட்சியின் மகனும், சிறி ஜெயராசா, W. G. ரவீந்திரராசா, W. G. கிருபானந்தராசா, நகுலேஸ்வரராசா, சற்குருராசா (Canada) ஆகியோரின் தந்தையும், கொழும்பு நடராசா, முரசுமோட்டை நல்லநாதன் ஆகியோரின் மைத்துனரும், அஜித் குடும்பத்தினரின் மாமனாரும் ஆவார். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம். அன்னாரின் ஈமக்கிரியைகள் அளவெட்டி மயானத்தில் நடைபெறும்.

(6678)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Saturday 17th September 1988

நவநாகரிகத்திற்கேற்ப
★ பிறிடைம் ★ பாட்லி
★ றிமோட் கொன்ரோல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.



★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் &பிளவ்ஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# மனித வாழ்வினை அழிக்கும் கோபம் பாவச் செயல்களின் தாய் - தந்தை

வழக்கம் போல் அன்றைய தினமும் அவர்கள் கூடினார்கள். கூட்டம் சிறிதாக இருந்தாலும் பிரச்சினைகள் பெரிதானவைகளாகவே விவாதிக்கப்படுவதுண்டு.

பெண்கள் கூட்டம் அது. ஓர் அம்மா முதலில் அன்றைய பேச்சினைத் தொடங்குகிற மாதிரி, மற்றோர் அம்மாவைப் பார்த்து கொஞ்சம் சிரித்துக்கொண்டே ''உங்கள் வீட்டுக்காரருக்கு ஒரு நாளைக்கு எத்தனை தடவை கோபம் வரும்?' என்று கேட்டார்கள்.

அந்த அம்மையார் தான் துணிச்சலாகவும் தாராளமாகவும் எப்போதும் மனம் விட்டும் பேசுகிறவர்.

அந்தக் கேள்வி அனைவரையும் உற்சாகப்படுத்தியதாக அமைந்தது.

அன்றைய உரையாடல்கள் கோபத்தைப் பற்றியதாகவே இருந்து முடிந்தது என்றே கூறவேண்டும்.

### எத்தனை தடவை கோபம் வரும்?

கேள்வி கேட்ட அம்மையாரைப் பார்த்துப் பதில் வந்தது.

''எங்கள் வீட்டுக்காரருக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவை கோபம் வரும்!'' என்று கணக்காக அம்மா ஒருத்தி பதில் சொன்னாள்.

''ஐயோ, பாவம் மன நிம்மதியாகவே இருக்காதே, எப்படியோ காலம் போய்க் கொண்டிருக்க வேண்டும்.''— இப்படியாக இரண்டொரு பெண்மணிகள் அலுத்துக் கொண்டும் சமாதானப்படுத்திக் கொண்டும் பேசிக்கொண்டனர்.

''உங்கள் கணவருக்கு எப்போதெல்லாம் கோபம் வரும்'' என்று இன்னொரு பெண்ணைக் கேட்டபோது, அவர் புன்முறுவலோடு ''வாரத்திற்கு ஒரு முறை தான் வரும்'' என்று சொல்ல மற்றப் பெண்கள் கொஞ்சம் ஆறுதலோடு சிறு சிரிப்புச் செய்தனர்.

''எங்கள் வீட்டுக்காரருக்கு மாதத்துக்கு ஒரு முறைதான் கோபம் வரும்'' என்று நடுத்தர வயதான அம்மா சம்பீரமாகக் கூறி, மற்றவர் பாராட்டுதலைப் பெற்றவள்போல முகஜாடையால் தெரிந்து கொண்டு அசைந்து உட்கார்ந்தாள்.

''நீங்கள் என்னமோ சொல்ல நினைக்கிறீர்கள்போல் தோன்றுகிறதே'' என்று அழகு அதிகமான அம்மாவைப் பார்த்து மூத்த அம்மையார் கேட்டார்.

### வருடத்துக்கு இரண்டு தடவை

''எங்கள் வீட்டுக்காரருக்கு வருடத்திற்கே இரண்டு தடவைதான் கோபம் வரும்'' என்று பதில் பிறந்தது. இதனைக் கேட்டு எல்லாப் பெண் மணிகளும் கைதட்டிப் பாராட்டினார்கள்.

''எவ்வளவோ புண்ணியம் செய்த அம்மையார்; வீடு எப்போதும் மகிழ்ச்சிகரமாகவே இருக்கும்'' என்று ஆனந்தமாகப் பெண்கள் எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

சில சின்னப்பெண்கள் அந்த அம்மாளின் பாதங்களைத் தொட்டுக்கூட கும்பிடுகிற மாதிரி மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு நடந்துகொண்டிருந்ததைப் பார்த்து 'வருடத்துக்கு இரண்டு தடவை கோபம் வரும்' என்று சொன்ன அந்த அம்மாள் எல்லோரையும் பார்த்து ''முழுசாக நீங்கள் இன்னும் கேட்கவில்லையே'' என்றாள்.

எல்லோரும் அந்த அம்மையாரை உற்றுப் பார்த்தார்கள்.

அவள் சொன்னாள்: ''எங்கள் வீட்டுக்காரருக்கு வருடத்துக்கு இரண்டு தடவை தான் கோபம் வரும். ஆனால் ஒரு தடவை வந்தால் அது ஆறு மாதங்களுக்கு இருக்கும்''—என்றாள்.

பெரிய அதிர்ச்சியே அந்தக் கூட்டத்தினைக் கவ்விக்கொண்டது போல் ஆயிற்று.

நேரம் ஆகிவிட்டபடியால் அம்மையார்கள் அனைவரும் வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

கோபமே அன்றைய பேச்சாக முடிந்தது.

நாயகனுக்குக் கோபம் வராமல் பார்த்துக் கொள்வதில் நாயகிக்குப் பெரும் பங்கு உண்டு.

### நாயகன் கோபம் நாயகி காரணம்

''கோபமே பாவங்களுக்கு எல்லாம் தாய் - தந்தை'' என்று ஞானவான்கள் பாடிச் சென்றுள்ளனர்.

ஒரு பழமொழி உண்டு,

'கோபத்திலே கோபுரவாசலில் தலை நுழையாது; குண்டு சட்டியிலே கை நுழையாது'— கோபம் கண்களை அவ்வளவு தூரம் மறைத்துவிடும் என்பதாகும்.

'கோபம் வந்தால் நான் மனுஷன் இல்லை' என்று சிலர் இன்னது பேசுகிறோம் என்று தெரியாமலே பேசுவார்கள்.

ஒருவனை அரக்கனுக்குவது இக்கோபம் என்பது வெளிப்படையாகும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் குடும்பம் நடத்த பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் ஒருவன், கோபத்தில் தன் மனைவியைப் பார்த்து 'நான் யார் தெரியுமா?' என்று கேட்கிறான். இனிமேல் தான் தெரிந்து கொண்டு குடும்பம் நடத்துவான் போலும்!



### சினம் பற்றி அப்பர்

அப்பர் சுவாமிகள் கோபத்தினைப்பற்றிக் கூறும்போது 'சினம் எனும் சரக்கை ஏற்றி' என்று இந்தக் கோபத்தினைக் கடலில் கொண்டுபோய்த் தள்ளவேண்டும் என்றார்.

கோபத்தின் கொடுமையை விளக்கமாகப் பேசுகின்ற பகவான் கிருஷ்ணபிரான் பகவத் கீதையில் அர்ஜுனனுக்குக் கூறுகிறார்:

'முறையே சினத்தால் மோகம் உண்டாம்
மோகத்தாலே மறதி உண்டாம்,
மறதியாலே மதிநாசம்,
மதிநாசத்தால் அழிவானே!'

இவ்வாறு மனித வாழ்க்கையில் அழிவினைக் கொடுப்பது கோபமே அன்றோ!

### வள்ளுவர் கருத்து

கோபம் என்பது ஒருவனை மற்றவன் அழிப்பதற்குக் காரணமாகும் என்று மட்டும் கூறி நிறுத்தாமல், அவனையே அந்தக் கோபம் அழித்துக்கொல்லும் என்று ஆசிரியர் வள்ளுவர் கூறுகின்றார்.

'ஒருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் தன் உள்ளத்தில் கோபம் வராமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்; அவ்வாறு இல்லையெனில் அக்கோபமே அவனை அழித்துவிடும்?

'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்!',

நல்லறிஞர்களுடன் சேர்தல், ஞானவான்களாகிய மகான்களைத் தரிசனம் செய்தல், மறைநூல்களைக் கற்றல், நிறைமொழியினை உள்ளத்தில் வைத்துத் தியானம் செய்தல், இன்ன பிறபண்புகள் தீயகுணங்களைப் போக்கி இன்பமளிக்கும் என்பதாகும் ★

- திருக்குறள் வி. முனுசாமி -

---

கருத்துக் கலசம்
வழூரா

## குழந்தைக் கல்வி

கல்வி மனித வாழ்வுக்கு ஆதாரமானது. கல்வி அறிவு இல்லாதவன், அதனைப் பெற்றுக் கொள்ளத் தவறியவன், மனிதனாக மதிக்கப்பட முடியாதவன்.

கல்வி வளம் பெறும் முயற்சி வாழ்க்கை முழுவதும் தொடரப்பட வேண்டிய ஒன்று. ஆரம்பக்கல்வியைத் தொடங்கிய நாள் முதல், ஒரு மனிதன் இறக்கும் வரை பயின்று கொண்டு, படித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் அறிவாளி ஆக வாய்ப்பு உண்டு.

கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வி என்று எண்ணுவது தப்பிதம். ஏட்டுக் கல்வியோடு அனுபவமும், ஆற்றலும் சேரும்போது தான் ஒருவன் அறிவு பெறுகிறான். ஏட்டைத் தொட்டுப் பார்க்காதவர்களும், பல்கலைக்கழகத்தின் படிகளைக் காணாதவர்களும் பெரும் அறிஞர்களாகத் திகழ்ந்திருக்கின்றார்கள்; சிந்தனையாளர்களாக விளங்கி உள்ளார்கள்.

இக்காலக் கல்வி பெரும்பாலும் ஏட்டுக் கல்வியாகவே உருவெடுத்துள்ளது. இந்தக் கல்வி முறையிலும் சரி, எந்தக் கல்வி முறையிலும் சரி ஆரம்பக் கல்வி குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இளம் வயதில் இடப்படும் அத்திவாரம் தான் வாழ்க்கை முழுவதும் வளரப் போகின்ற நீண்டு நிலைக்கப் போகின்ற அறிவுத் தேடலுக்கு அத்திவாரம். அத்திவாரம் வைரமானதாக இல்லாவிட்டால் கட்டடம் ஆட்டம் காணும் என்பது நிச்சயம்.

ஆகையால் ஆரம்ப வகுப்பு மாணவருக்குக் கல்வியூட்டுவதில் அதிக கவனமும் அக்கறையும் காட்டப்பட வேண்டும். கல்வியைப் பெற வேண்டும், வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் ஆரம்பக் கல்விக் காலத்திலேயே தோற்றுவிக்கப்பட வேண்டும். தனித் தனி மாணவரின் உளவியல் தன்மைகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ற விதத்தில் குழந்தைக் கல்விப் போதனை இடம்பெற வேண்டும்.

குழந்தைக் கல்விக் காலம் தான் அறிவு அரும்பாகும் வேளை. பிஞ்சு மனம் பசுமையானது. அதில் வேண்டியதை மட்டுமே படியச் செய்தல் வேண்டும். வேண்டாதவை படிய அனுமதித்துவிட்டால் ஆபத்து அதிகம்; பாதிப்பு அதிகம். சம்பந்தப்பட்ட மாணவனுக்கு மட்டுமல்ல; சமூகத்துக்கும் தான்!

எனவே குழந்தைக் கல்வி உரிய முறையில், சரியான வழியில் ஆற்றுப்படுத்தப் பட்டுப் போதிக்கப்பட வேண்டிய ஒன்று. மிகக் கவனமாகவும், பக்குவமாகவும் கையாளப்பட வேண்டியது. இதனைக் கல்விப் பகுதியாரும், பெற்றோரும் மனதில் கொள்ள வேண்டும். ★

---

# களம் வேறு - கருத்து ஒன்று

## இரு மொழிப் புலவர்களின் பொது நோக்கு

சார்ள்ஸ் மைக்கேய் (1814 – 1889) ஸ்கொட்லந்து நாட்டுப் புலவர் மிகவும் உற்சாக உணர்வுடைய கவிதைகளை இவர் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்.

இவர் எழுதிய டீ நதிக்கரை ஆலையாளன் (Miller of the Dee) என்ற கவிதை மிகவும் சிறப்பு வாய்ந்தது.

தங்கத் தாத்தா என்று அழைக்கப்படுபவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

ஈழத்துத் தமிழ்ப் புலவர்களில் மிகவும் பிரபலமானவர்.

சிறுவர்களுக்காக இவரால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது 'சிறுவர் செந்தமிழ்' என்னும் நூல்.

இவரின் கவிதைகளும் உற்சாகமானவை.

இவரது கவிதைகளில் 'மனம் நிறைந்த செல்வன்' எனும் கவிதை உண்மையில் 'மாவலிக் கங்கைக் கரை ஆலையாளன்' என்று கூறக் கூடியதாகவும் உள்ளது.

இவ்விருவரின் கவிதைகளின் களம் வேறுபட்டாலும் கருத்தால் ஒன்றுபட்டது.

சார்ள்ஸ் மைக்கேயின் 'டீ நதிக்கரை ஆலையாள'னில்...

''ஆலையாளன் உற்சாகமாகப் பாடிக் கொண்டே மாவரைத்துக்கொண்டிருக்கிறான். அப்போது இங்கிலாந்து நாட்டு மன்னன் வருகிறான்.

''ஆலையாளனின் மன மகிழ்ச்சியைக் கண்டு மன்னன் புழுங்குகின்றான். உற்சாகமாகப்பாடும் காரணத்தை மன்னன் கேட்கிறான்.

ஆலையாளன் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கிறான். விளக்கத்தை மகிழ்ச்சியுடன் ஏற்ற மன்னன் கூறுகிறான்:

'உனது மாத்தேய்ந்த தொப்பி என் முடிக்குச் சமானம். உன்னுடைய ஆலை எனது இராஜ்ஜியத்தின் விலை பெறும்.

உன் போன்ற உறுதி, தன்னம்பிக்கை, திருப்தி ஆகிய நற்குணங்கள் நிறைந்த மனிதர்களால் இங்கிலாந்து பெருமைப்படுகின்றது.''

—இப்படி மன்னன் கூறிச் செல்கிறான்.

தங்கத் தாத்தாவின் 'மனம் நிறைந்த செல்வனிலும்' மாவலியாற்றங்கரையில் மாவரைத்துச் சீவனம் செய்யும் ஆலையாளன் ஒருவன் வருகிறான்.

அவனும் ஒருநாள் உற்சாகமாகப் பாடியபடி மாவரைத்துக் கொண்டு இருக்கிறான்.

அப்போது கண்டியரசன் வருகிறான். ஆலையாளன் மகிழ்ச்சி கண்டு அரசனின் மனம் புழுங்குகின்றது.

ஆலையாளனின் மகிழ்ச்சிக்கான காரணத்தை [illegible] கண்டியரசன் கேள்விக்கு மேல் கேள்வி கேட்கிறான்.

இறுதியில் கண்டியரசனும்—

''உன் பனையோலைத் தொப்பி எனது முடிக்குச் சமானமானது அல்ல. உன் குடிசை என் அரண்மனையின் மேன்மையுடைத்தது''— என்று கூறிச் செல்கிறான்.

இருகவிதைகளிலும் உள்ள சிலவரிகளைப் பார்ப்போம்.

Miller of the Dee இல் ஆலையாளனின் பல்லவியாக அடிக்கடி கீழ்வரும் வரி வருகிறது:-

'I envy nobody no. not I and nobody envies me'

- உதங்கா -

'மனம் நிறைந்த செல்வனில்'......

'அங்கொருவ ரோடுமியான் அழுக்காறு கொள்ளேன் அயலாரு மென்மீதி லழுக்காறு கொள்ளார்'

இவ்விரு வரிகளும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன.

அதேபோல் அரசன் Hal. Miller of the Dee இல் கூறுகிறான். 'Thou' rt wrong my Friend 'said old King Hal

'Thou' rt wrong as wrong can be'

மனம் நிறைந்த செல்வனில்......

[illegible] கொள்ளார்கள் என்றால் அதுமுழுதும் தவறுன்மேல் அழுக்காறுகொள்வேன்.

சார்ள்ஸ் மைக்கேய் மேலும் சொல்கிறான்:-

'The miller Smiled and doff'd his Cap'

தங்கத் தாத்தா கூறுகிறார்:

'தலையிலிருந்த பனையோலைத் தொப்பிதனைக் கழற்றிச் சற்றே புன்சிரிப்புடனுந் .....

இப்படியே வரிக்குவரி இரு பாடல்களிலும் ஒற்றுமையுள்ளது.

சார்ள்ஸ் மைக்கேய் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

தங்கத் தாத்தா 20 ஆம் நூற்றாண்டில் தனது வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்தவர்.

ஆற்றின் சக்தியால் மாவரைத்தல் நம்நாட்டில் இருந்த தாகச் சான்றுகள் கிடையா.

மேலும் கி. பி. 1659 முதல் 1679 வரை கண்டியரசனின் கைதியாக இருந்தவர் ரொபர்ட் நொக்ஸ் (Robert Knox) என்பவர்.

இலங்கை மக்கள் மாவரைப்பதற்கு திரிகைக் கல்லையே உபயோகித்து வந்ததா ரொபர்ட் நொக்ஸ கூறியிருக்கிறார்.

இரு புலவர்களும் ஒரு விஷயத்தைத் தத்தம் நாட்டுச் சூழல்களுக்கேற்ப பாடியிருக்கின்றனர். எனினும் நடைமுறைச் சாத்தியங்களுடன் இதனை ஆராயும் பணியை வாசகர்களிடம் விட்டுவிடுகின்றேன். ★

---

# பத்தாயிரம் கவிதை பாடுவேனே!

முத்தமிழே தாயேநீ
முதிர்ந்தாலும் இளையவளே!
கத்தும் அலைகடலுன்
காலடியில் தமிழ்ச்சங்கம்
சொத்தாக வைத்தவற்றை
சுவையென்று தின்றாலும்
சத்திழந்து போகாத
செந்தமிழே நீவாழ்க!

தமிழ்பேசி னல்மட்டும்
தமிழன்நான் ஆவேனே!
அமிழ்தேநீ எந்நாளும்
அல்லற்குள் வாழ்வேனே!
உயிர்நீயாய் இருக்கையிலே
உணர்வின்றிப் போவேனே!
குயிலாக நின்புகழைக்
குரலெழுப்பிப் பாடேனே!

பித்தன்நான் தாயேஉன்
பிஞ்சுமகன்; நின்னடியில்
பத்தாயிரம் என்ன
பதினாயிரம்பாக்கள்
சித்தமிருந் தாலுந்தன்
செல்வாக்கு எனக்கிருந்தால்
செத்துவிடும் முன்னாலே
செய்துவைத்து வாழ்த்துவனே!!

—செ. குணரத்தினம்—

---

ரவி: ராஜா! உனக்கு எந்தப்படைக்குப் பயம்? இலங்கைப்படைக்கா? - இந்தியப் படைக்கா?

ராஜா: இரண்டுக்குமே இல்லையடா! இந்த ஓப் 'படை' க்குத்தான் ஒரே பயம்.

- சோ. முரளி
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா



சஞ்சீவி சிறுகதை

நானும் அரவிந்தனும் ஒரே ரூமில் ஒன்ருகவே தங்கி இருக்கும் நண்பர்கள். நான் ஒரு கம்பனியில் வேலைபார்க்கிறேன். அவனுே பாங்கில் வேலைபார்க்கிருன்.

அவனிடம் எப்போதும் ஒரு ரான்சிஸ்டர் ரேடியோ இருக்கும். அவன் ரூமில் இருக்கிருன் என்பதற்கு அடையாளமாக ரேடியோ எப்போதும் பாடிக்கொண்டிருக்கும்.

இரண்டுநாட்களாக அரவிந்தன்வேலைக்கு மட்டம் போட்டுக்கொண்டு ரூமுக்குள்ளேயே இருந்தும் ரேடியோ பாடவில்லை. இன்றுடன் மூன்று நாட்களாகிவிட்டது.

எதற்கும் ஒரு எல்லைவேண்டும் அல்லவா......? எனக்குப் பற்றிக் கொண்டுவந்தது. அறைக் கதவைப் படீர் எனத் திறந்துகொண்டு உள்ளே சென்றேன்.

இரண்டு நாட்களாக எந்தக் கோலத்தில் இருந்தானே அதே நிலையில்தான் இன்றும் தன் கட்டிலில் குப்புறக்கிடந்தான். றேடியோ தேடுவாரற்று ஒருமூலையில் இருந்தது.

'டேய் அரவிந்...துன்பம் எல்லோருக்கும் வருவதுதான், அதுக்காக அதை ஒரேயடியாக யாராவது கொண்டாடுவார்களா..? நீயும் ஒரு ஆம்பிளையா...? எழும்படா...!!

உரிமையுடன் அதட்டியபடியே குப்புறக்கிடந்த அரவிந்தனை புரட்டி நிமிர்த்திய எனக்கு அவன்கண்களிலிருந்து நீர் வழிந்து தலையணையையே நனைத்து இருப்பதைப் பார்த்ததும் எனக்கே அழுகை வந்துவிட்டது. அவன் மறுபடியும் குப்புறப்படுத்துவிட்டான். அதற்குமேல் நான் அவனைத் தொல்லைப்படுத்தவில்லை.

தனக்கு ஏற்ற மனைவி இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எந்தவொரு ஆடவனின் இதயத்திலும் ஒரு படம் இருக்கும்.

அரவிந்தன் மனதிலும் தனக்கு வரப்போகிறவள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கற்பனைச் சித்திரம் வரைந்ததில் ஆச்சரியமில்லை.

அவனுக்குப் பேசிவந்த பெண்களில் ஜானகியே முதலாவது பெண். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அருகில் உள்ள முருகன் கோயிலுக்குப் போவாள் என்பதை அறிந்துவிட்டான்.

'டேய் ரமணு...!...வாடா அவளைப் பார்த்துவிட்டு வருவோம்...'

நானும் துள்ளிக்கொண்டு அவனுடன் சென்றேன். முதலிலேயே போட்டோவைப் பார்த்தபடியால் ஜானகியைக் கண்டுபிடிப்பதில் அவ்வளவு சிரமம் ஏற்படவில்லை.

'பெண் எப்படிப் பிடிச்சிருக்கா...?

அவன் மூக்கைச்சுளித்தான்.

'ஏண்டா... கொள்ளை சீதனத்துடன் பெண் கிடைக்கிருள் வேண்டாம் என்று கோட்டை விடப்போறியா?'

'டேய் ரமணு... நான் கட்டப்போறது எனக்குப்பிடித்த மனைவியையேதவிரபணத்தை அல்ல. எனக்குப் பிடித்தமானவளைக் கண்டுபிடித்துவிட்டேன் என்ருன். அவளிடம் ஒருசதம்கூட இல்லாவிட்டாலும் பரவாயில்லை; நான் அவளைப் பூமாதிரி,... ...ராசாத்திமாதிரி,தங்கம்மாதிரி—'

பிதற்றிக்கொண்டே போனவனை நிறுத்தடா... நிறுத்தடா...என்றுசொல்லி அன்று நிறுத்திவைத்தபின் இன்று வரையில் 24 பெண்களைப் பார்த்துவிட்டோம். ஆமாம்... கூடவே நானும் இருப்பேன்.

அவன் அப்பாவுக்குக்கூடச் சலிப்புவந்துவிட்டது. இவனுக்கு இனி நான் பெண் பார்க்கமாட்டேன். இவனே தேடிச் சிங்களத்தியைக் கொண்டுவந்தால் என்ன... பறங்கியைக்கொண்டுவந்தால் என்ன...எனத் திட்டினுர். தன்மகன் அப்படியான காரியங்களில் இறங்கமாட்டான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை அவருக்கு.

காரணம் அவனுக்குக்காதல் கல்யாணம் என்ருலே பிடிக்காது. எனவே தன் கடமையை உணர்ந்து மேலும் பெண்பார்க்கும் படலத்தில் இறங்கினுர்.

எனக்கோ ஒரேயடியாகச் சலித்துவிட்டது. இருபத்து நான்காவது பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தபின் நான் சொன்னேன்.

'டேய் அரவிந்...! உன் மனசுக்குப்பிடிச்ச பெண் இந்த லோகத்திலே இல்லை. விண்ணில் இருந்துதான் ஒரு தேவதை இறங்கி வரவேணும் இனிமேல் பெண்பார்க்கும் படலத்துக்கு என்னை இழுக்காதே...நீயும் உன் கல்யாணமும்...'

சற்றுகோபமாகவே சொல்லிவிட்டேன். அவனே இரண்டு வாரம் கழித்து மறுபடியும் என்னை வேருெரு பெண் பார்க்கவரும்படி அழைத்தான். நான் ஒரேயடியாக மறுத்தேன். அவன் விடவில்லை. நான் மறுபடியும் கோபமாக,

'டேய் அரவிந்...! நல்லா மனதில் வைச்சுக்கொள், இது இருபத்தைந்தாவது பெண் நீ பார்க்கிருய்... இவளைப் பிடிச்சுதோ... பிடிக்கவில்லையோ, கட்டிக்கொள்... இல்லையென்ருல் பெண் பார்க்கும் படலத்துக்கு வெள்ளிவிழாக் கொண்டாடிவிட்டு நிறுத்திவிடு...'

சொல்லிவிட்டு அவனுடன் கிளம்பினேன்.போகும்போது,

இம்முறை எந்த இடம்...? கேட்டேன் வேண்டா வெறுப்பாக...

'கேள் ஒரு கம்பனியில் 'ரைப்பிஸ்டாம்' அவள் பெயர் பானு. அவள் வேலைவிட்டு வரும்போது பஸ்ஸ்ராண்டில் வைத்துப் பார்க்கப்போகிருேம்.

'வேலைவிட்டு வரும்போது காஞ்சுபோய்வருவாள், அந்த நேரத்திலே அவளை நீ பாத்துவிட்டு வேண்டாமென்று சொன்னியோ...'

சொல்லியவண்ணம்பஸ்ஸை விட்டு இறங்கியவனை நானும் பின்தொடர்ந்தேன். பஸ்ஸ்ராண்டில் ஒரே கூட்டம். நாங்கள் கோப்பாய் பஸ்நிலையத்தை நோட்டம் விடுகிருேம். அவள் அந்தபஸ்ஸில் தான் போவாளாம்.

ஐந்துநிமிடம் 10நிமிடமாகி அரைமணித்தியாலம் கழிந்துவிட்டது. போட்டோவில் உள்ள பெண்ணைப் போல யாரையுமே காணேும். எனக்கு சலித்துவிட்டது.

டேய்... அரவிந்... எனக்கு அஞ்சேமுக்காலுக்கு ஒரு ப்ரோக்கிராம் இருக்கு...நான் போறன் என்றபடி ஒரு அடி எடுத்து வைத்த என்னைத் தடுத்து நிறுத்திய அரவிந் சற்றுதொலைவிலுள்ள புடைவைக்கடையைச் சுட்டிக்காட்டினுன்.

பார்த்தேன், இரண்டு பெண்கள் கைகளில் பார்சலுடன் கடையை விட்டு

**- அல்லி -**

இறங்கி வருவது தெரிந்தது. அதில் ஒருத்தி நிச்சயமாக நாம்தேடும் பானுவேதான்.

'ச்சா...சும்மா சொல்லக் கூடாது அழகென்ருல் இது வல்லவோ அழகு... கருநீல நிறத்தில் போடர்போட்ட மெல்லிய நீலநிறச்சேலை கட்டி அவள் ஆடி அசைந்துவரும்போது உண்மையிலேயே தேவலோக மங்கையரை பானுவை வைத்துத்தான் இந்தக் கவிஞர்கள் வர்ணித்தார்களோ என்று சொல்லும் வண்ணம் அழகுத் தேவதையாகநடந்து வந்தாள்'

நான் மெதுவாக அரவிந்தைத் திரும்பிப் பார்த்தேன்.

அவன் முகத்தில் விவரிக்க முடியாத ஒரு இன்பவெள்ளம் கரைபுரள்வதைக் கண்டேன்.

மறுபடியும் திரும்பி அவளைப் பார்த்தேன். மிகவும் கிட்டவாக அவள் வந்து விட்டாள். ஆனுல் அரவிந்தோ இன்னமும் அவளையே பார்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டு முதுகில் ஒரு போடு போட்டேன்.

'நடுத்தெருவில் நின்று கொண்டு விழி பிதுங்கப் பார்க்கிறியே......? அவள் கவனித்தால் உன்னைப்பற்றி என்ன நினைப்பாள்?'

என்று சொன்னதும் தான் அவன் தன் நிலைக்கு வந்து 'எனக்கு இவளைப் பிடிச்சுவிட்டது ரமணு'

ஒரு அசட்டுச் சிரிப்புடன் கூறினுன். அதை நீ சொல்லத் தேவையில்லை. உன் முாமும் நிலையுமே சொல்கிறதேம்..... சரி... சரி... இந்தளவில் இன்று போதும் வா...'

அவனை இழுத்துக்கொண்டு அடுத்த பஸ்ஸிலேயே ரூமுக்கு வந்து விட்டேன்.

அரவிந் அன்று தொடக்கம் சந்தோஷமாகவே இருந்தான். விடிந்ததும்,

'இந்தப் பெண்ணை எனக்கும் பிடித்து விட்டது. மேற்கொண்டு காரியங்களைப் பார்க்கவும்'

என அரவிந்தன் ஒரு தந்தியைத் தன தாப்பனுருக்குக் கொடுத்தான். தந்தி கிடைத்த அன்று அவன் அப்பா வந்து விட்டார். வந்தவர் பெண்ணின் தகப்பனுரோடு கலந்தாலோசித்துவிட்டு,

'வருகிற புதன்கிழமை நல்ல நாள். அன்றே பெண்ணை வீட்டில் போய்ப் பார்ப்போம்'என்ருர். அரவிந் நாட்களை எண்ணிப் பார்த்தான். இன்னும் ஐந்து நாட்கள் இருப்பது ஐந்து யுகமாகத் தோன்றியது அவனுக்கு. அதற்குள் இல்லாத கற்பனைகளை எல்லாம் செய்து விட்டான்.

புதன்கிழமை மாலை 4 மணிக்கு சொல்லி வைத்த மாதிரி அரவிந்தும் அவன் அப்பாவும் பானுவின் வீட்டு ஹோலில் அமர்ந்திருந்தனர். அவன் போகும்போது நான் விளையாட்டாக,

'அரவிந்...... தொடர்ந்து 25 முறை பெண்பார்க்க நான் வந்தேன். இம்முறையும் நான் வருவேன் என்றேன்.

'டேய் இம்முறை மட்டும் வந்துவிடாதே, காரணம், இவளை எனக்குப் பிடிக்கவில்லை, அவளைத்தான் நான் கட்டிக்கொள்வேன் என்று பானு சொல்லிவிட்டால் அது வெம்பாய்ப் போய்விடும், என்னுலே தாங்கவே முடியாதடா'

கெஞ்சினுன். நான் சிரித்துக் கொண்டே வழியனுப்பி வைத்தேன்.

பானுவை அழைத்துக் கொண்டு அவள் அம்மா ஹோலுக்கு நுழைந்தவள் மற்ற ஆசனத்தில் பானுவை அமர்த்தி விட்டாள். பானுவை அரவிந்தன் பார்த்துக் கொண்டு இருந்தான். பானு நிமிர்ந்து அரவிந்தனைப் பார்த்து ஒரு புன்முறுவலைப் படரவிட்டு திரும்பிக் கொண்டாள். அரவிந்தனுக்கு ஏழு உலகங்களும் தன் காலடியில் வந்துவிட்டமாதிரிப் பெருமை. சிறிது நேரத்தில் பானு [illegible] அரவிந்தன் மற்றவர்களைப் போல மறுமொழியை நாளை சொல்கிறேன், கடிதத்தில் தெரிவிக்கிறேன் என்று சொல்லாமல், உடனேயே தன் சம்மதத்தை தந்தைக்குத் தெரிவித்து விட்டான். பானுவின் தந்தையோ,

எங்களிடம் வீடு இல்லை, காணியும் கொஞ்சக் காசும், நகையும்தான் இருக்கிறது' ... என இழுத்தார். அதற்கு அரவிந்தனின் அப்பா,

'அதைப்பற்றிப் பரவாயில்லை, இவனுக்குப் பெண் பிடித்ததே பெரிய காரியம். இவனுக்காக நான் அலைந்த அலைச்சல் கொஞ்ச நஞ்சமல்ல,பானுவை25ஆவது பெண்ணுகப் பார்த்திருக்கிருன்... எனச் சொல்லி சந்தோஷத்தில் சிரித்தார். பின் நல்ல நாளாகப் பார்த்துக் கல்யாணத்தை வைத்து விடலாம். விடைபெற்ருர் அரவிந்தனின் அப்பா.

நேராக ரூமுக்கு வந்தார்கள். அரவிந்தனின் அப்பா தான் வீட்டுக்குப் போய் ஆக வேண்டிய காரியங்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி விட்டு உடனேயே பஸ் எடுத்தார்.

ஒரு வாரம் எப்படியோ மறைந்து விட்டது. அரவிந்தன் தன் அப்பாவின் கடிதத்தைப் பார்த்த வண்ணம் இருந்தான். எட்டாம் நாள் இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று அவன் அப்பா எழுதியது.

சட்டென அதை உடைத்துப் படித்தான். அவன் முகம் சந்தோஷத்தில் விரிந்தது.

'என்னடா கல்யாண எழுத்துக்கு நாள் குறித்தாகி விட்டதோ......'

'நீயே படித்துப் பார்'

சிரித்தபடியே கூறிக் கொண்டு கடிதத்தை நீட்டினுன். வாங்கிய கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். 'வருகிற பத்தாம் திகதி நல்ல நாளாக இருக்கிறபடியால் அன்றே எழுத்தை வைத்து விடலாம். எனவே இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு வரவும்'

என எழுதியிருந்தார். இதற்குள் அரவிந் அடுத்த கடிதத்தைப் படித்து முடித்து விட்டுப் பேயறைந்தவன் போல இருப்பதைக் கண்டேன்.

அரவிந்...! என்ன... ஒரு மாதிரியாக இருக்கிருய். கடிதத்தில் என்னதான் எழுதியிருக்கு... யார் எழுதியது...? நானும் பார்க்கலாமா......?

கேள்விகளையே கேட்டுக் கொண்டிருக்கும் என்னிடம் பதிலாகக் கடிதத்தையே நீட்டிவிட்டு தலையணையில் முகம் மறைத்துப் படுத்துவிட்டான்.

நான் கடித்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

அன்புள்ள அரவிந்தனுக்கு,

பானு எழுதிக் கொள்வது. சுருக்கமாகவே நான் இக்கடிதத்தை எழுத நேர்ந்த காரணத்தைக் கூறிவிடுகிறேன். அதற்கு முதல் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் எங்கள் கம்பெனியில் வேலைபார்க்கும் வேறு ஒருவரைக் காதலிக்கிறேன். எங்கள் இருவர் உறவையும் பிரிக்கும் நினைவுடனேயே அப்பா வேறு வேறு கல்யாணங்கள் எல்லாம் பார்த்தார்,

சீதனப் பிரச்சினையால் எல்லாம் குழம்பியது. அது எனக்கு சந்தோஷமாகவே இருந்தது. ஆனுல் நீங்கள் மட்டும் பணத்தைப் பற்றிப் பெரிதுபடுத்தாது என்னைத் திருமணம் செய்யச் சம்மதித்தீர்கள் உங்கள் அன்புக்கு என் நன்றிகள். ஆனுல் அதற்கு இணையான அன்பைத் தரும் நிலையில் நான் இல்லை. அரவிந் இப்போது என் நிலை உங்களுக்குப் புரிந்திருக்கும். என்னைக் கல்யாணம் செய்யும் எண்ணமே உங்கள் மனதில் இருந்து நீங்கியிருக்கும்.

அரவிந் என் மனம் போல வாழவிடுங்கள். இப்படி நான் எழுதியது கூட என் அப்பாவுக்குத் தெரியவேண்டாம். என்னை நிராகரிப்பதன் மூலம் எனக்கு நீங்கள் வாழ்வளிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புடன்
பானு.

கடிதத்தைப் படித்து முடித்த எனக்கு சினிமா பார்ப்பது போல ஓர் பிரமை. இந்தப் பெண்களுக்குத்தான் எத்தனை துணிச்சல்···! ஆனுல் பானு இந்த மாதிரி வெளிப்படையாக நடந்துகொண்டது எனக்கு மிகவும் பிடித்திருந்தது,

அரவிந்துக்குத் தன் உயிரையே யாரோ பறித்துவிட்டது போன்ற ஒரு உணர்வில் செயலிழந்து படுத்துக் கிடந்தான். நானும் குழப்பவில்லை.

அவன் இருக்கும் நிலையில் ஏதாவது விபரீதச் செயலில் இறங்கி விடுவானே என்ற மனப்பயத்தில் அன்று வேலைக்கு மட்டம் போட்டுவிட்டு அவனுடன் தங்கிவிட்டேன்.

பொழுது போக்குக்காக மேசையில் கிடந்த ''ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது'' கதைப் புத்தாத்தைப் படிக்க ஆரம்பித்தேன். பதினைந்தாம் அத்தியாயம் நான் படித்துக் கொண்டு இருக்கும்போது அரவிந்தன் ''லெட்டர் பாட்டை'' எடுத்து ஏதோ கிறுக்கிவிட்டு அவன் அப்பாவின் பெயருக்கு அனுப்பி வைத்தான்.

மூன்று நாட்கள்வரை அவன் யாரிடமும் சரியாகப் பேசவில்லை. நானும் அவனைக் குழப்பவில்லை. மூன்ரும் நாள் அவன் அப்பா துள்ளிக் கொண்டு வந்து அரவிந் முன்னுல் நின்ருர்.

டேய் அரவிந்...!... கல்யாண எழுத்துக்கும் நாள் குறிச்சபின் அந்தப் பெண்ணை எனக்குப் பிடிக்கவில்லை எண்டு குழப்பிறியே... அந்தப் பெண்ணின் மனம்தான் என்னபாடுபடும்... யோசித்துப்பாத்தியா...?... அறிவுகெட்டவனே... பொம்பிளை எண்டால் என்ன கீரைக்கட்டு எண்டு நினைச்சியோ...?...

திட்டியவண்ணம் இருந்தவரிடம் பானு எழுதிய கடிதத்தை நீட்டினுன் அரவிந். அவர் என்ன என்ற தோரணையில் அவனைப் பார்க்க,

படித்துப் பார்த்துவிட்டு என்னைத் திட்டுங்கப்பா என்ருன் பரிதாபமாக. பெரியவர் கடிதத்தைப் படித்துவிட்டுத் தன் மகனை அனுதாபத்துடன் நோக்கினுர். அப்போதுதான் அவன் முகத்தில் கவலைரேகைகளைக் கவனித்தார்.

''அரவிந்...!... நீ கவலைப்படாதே நான் உனக்கு இதைவிடத் திறமான பெண்ணுத் தேர்ந்தெடுத்துத் தருகிறேன். இவளை வேண்டாம் என்று உடனேயே எழுதிவிடுகின்றேன்.

சொல்லிவிட்டு இருக்கையை விட்டெழுந்து பஸ் நிலையம் நோக்கி நடந்தார். அரவிந்தனிடம் பழைய கலகலப்புக் குறைந்து இருந்தாலும் அது இன்னும் ஒரு வாரத்தில் சரியாகிவிடும் என்று நான் எண்ணிக் கொண்டு இருந்த வேளையில் மறுபடியும் பானுவின் கடிதம் வந்தது.

அன்புள்ள அரவிந்துக்கு,

பானு எழுதிக் கொள்வது என்னை நீங்கள் நிராகரித்ததன் காரணமாக சலிப்புற்ற அப்பா எங்களுக்கு சுதந்திரம் தந்துவிட்டார். எங்கள் கல்யாணம் கூட வருகிற பத்தாம்திகதி. எனக்கு வாழ்வளித்த உங்களை நான் என்றுமே மறக்கமாட்டேன்.

அன்புடன் — பானு

என எழுதப்பட்டு கூடவே கல்யாணக் கார்டும் இருந்தது அதில் சங்கர் — பானு என எழுதப்பட்டிருந்தது. அரவிந்தனை நிமிர்ந்து பார்த்தேன் கண் கலங்கியிருந்தது. சமாளித்துக்கொண்டு எழுந்து அறையை விட்டு நடக்கத் தொடங்கினுன். போனவன் வருவான் வருவான் என்று பார்த்தே அலுத்துவிட்டது:

அவனைத் தேடிக் கொண்டு எங்கெல்லாமோ அலைந்துவிட்டு இரவு ஒன்பது மணிக்கு ரூமுக்கு வந்து பார்த்தேன். தன் கட்டிலில் உறங்கிக் கொண்டு இருந்தான் அரவிந்தன். அப்படி அன்று படுத்தவன்தான் சரியாகச் சாப்பிடாமலும், வேலைக்குப் போகாமலும் குப்புற விழுந்து விழுந்து படுத்தான்.

அரவிந்தைப் பார்க்கப் பார்க்க அந்தப் பானுவின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சீ... ஏன் தான் பெண்ணுகப் பிறந்து தொலைத்தாளோ...? இந்தக் கல்யாணக்கார்டை ஏன் அனுப்பினுளோ...? என்று ஒரு கணம் நினைத்த எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

பழைய நினைவுகளில் இருந்து மீண்ட நான் மறுபடியும் கட்டிலில் கிடந்த அரவிந்தைத் திரும்பிப் பார்க்கிறேன். அதே நிலையில்தான் படுத்திருந்தான். இவனை இப்படியே விட்டுவிடக் கூடாது. ஏதாவது ஒரு வழிக்குக் கொண்டுவரவேண்டும். சுற்றுமுற்றும் பார்த்தேன். மேசையில் ஒரு கடிதம் உடைக்கப்பட்ட நிலையில் இருந்தது.

கூடவே ஒரு பெண்ணின் போட்டோ அவளது விலாசம். இந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டுப் பிடித்திருக்கா என்று எழுது எனக் கடிதத்தை எழுதியிருந்தார்: அவன் அப்பா.

எனக்கு ஒரு பிடி கிடைத்த மாதிரி இருந்தது. குப்புறக் கிடந்த அரவிந்தனை உருட்டி,

''டேய் அரவிந்... எழும்படா, அப்பா அனுப்பிய போட்டோவில் உள்ள பெண்ணைப் பார்க்கலாம்.'' என எழுப்பினேன். அரவிந் எழுந்துவிட்டான். நான் சந்தோஷத்தில் அண்டைக்குப் புதிதாக ஒரு மெல்லிய மஞ்சள் 'ஷேர்ட்' வேண்டினியே அதைப் போட்டுக்கொண்டு வா... என்றேன். அவன் ஒரு விரக்திப் புன்னகையுடன்,

ரமணு...! நீ அண்டைக்குச் சொன்னதுபோலவே பானுவுடனேயே பெண்பார்க்கும் படலத்திற்கு நான் வெள்ளி விழாக்கொண்டாடிவிட்டேன். இனிமேல் நான் எந்தப் பெண்ணையுமே பார்க்கப் போவதில்லை''

கூறிவிட்டு குளியல் அறைக்குள் புகுந்து படீர்...எனக் கதவைச் சாத்திக்கொண்டான்.

நான் எதுவுமே சொல்லத் தோன்ருது பிரமை பிடித்த நிலையில் உட்கார்ந்திருந்தேன்.

★



'அந்த ஆபிஸ்லை லஞ்ச் டைம்லதான் வேலை கூடநடக்கும்'

'ஏன் அப்படி'

லஞ்ச் டைம்தான் லஞ்சம் டைம். அதைக் கொடுத்து வேலையை முடிச்சுடலாம்'

★

'மாப்பிள்ளை தண்ணி போடறதில்லை பார்ட்டியிலே சும்மா சிப்பண்ணுவார்னு சொன்னியே, எப்படி இருக்கிருர்'

'இப்போ கசிப், கசிப் என்றலைருர்'

– முகுந்தன்

## கவித்துளி

### ஏன் என்னைப் பார்த்தாய்?

உன்னைப்
பார்த்த பொழுது
ஏங்கினேன்
நீ
என்னை(ப்)
பார்க்க மாட்டாயா?
என்று.

நீ
என்னைப்
பார்த்த பொழுது
ஏங்கினேன்
நீ
என்னுடன்
கதைக்க மாட்டாயா?
என்று!

நீ
என்னுடன்
கதைத்தபொழுது
ஏங்கினேன்
நாம்
அடிக்கடி
சந்திக்கக் கூடாதா?
என்று.

நாம்
அடிக்கடி
சந்தித்தபொழுது
ஏங்கினேன்
நாம் வாழ்க்கையில்
இணைய மாட்டோமா?
என்று.

இணைந்து
ஒன்ருக வாழ்ந்த
பொழுது
ஏங்கினேன்
நீ
ஏன் என்னைப்பார்த்தாய்?
என்று.

–சாவ. சண்முகதாசன்



## வாசகர் தராசு

### 'சஞ்சீவி' பித்தனுனேன் என்னைத் தொடர்கிருள்

சஞ்சீவி கடந்த மூன்று வாரங்களாகப் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் பவனி வருகிறது.

அதை வேண்டி ஆவலுடன் வாசிக்கும் பித்தனுனேன்.

20-8-88 சஞ்சீவி இதழிலே 'லண்டன் அனுபவம்' என்ற தலைப்பில் 'ஆங்கிலேயர் தேடி வந்து பேசுகிருர்கள்; தமிழரோ காணுதவர்போல் நடிக்கின்றனர்' என்ற திரு. நா. மாணிக்க இடைக்காடரின் கட்டுரையே இக் கடிதத்தை எழுத என்னைத் தூண்டியது.

அவர் எழுதியதுபோல் லண்டனில் உள்ளவர்கள் அப்படித் தான்.

பிரான்ஸில் உள்ளவர்களும் தாளுக வந்து பேசமாட்டார்கள்.

நாமாகப் பேசினுல் பின்பு வீட்டுக்கு உணவு அருந்த அழைக்கும் வரை பேசுவர்.

ஜேர்மனியில் உள்ளவர்களோ தாமாகவே 'நீங்கள் யாழ்ப்பாணமா?' எனக் கேட்டு வீட்டுக்கே அழைத்துப் போவர்.

தங்களுடைய பத்திரிகைகள் தினந்தோறும் இங்கு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

வண்ணைபூரான்,
பிரான்ஸ்.

எனக்கு மிகவும் பிடித்த பத்திரிகை 'சஞ்சீவி'யே.

சனிக்கிழமை எப்போது வரும், சஞ்சீவி எப்போது கைக்கு வரும் என்ற ஆவலில் உள்ளேன்.

தினமும் 'சஞ்சீவி' வேண்டும் என்று ஆவல்படும் வாசகன் நான்.

சுந்தரசிங்கம் சிவானந்தஜோதி,
வல்லியானந்தம் வீதி,
துன்னலை வடக்கு, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருமீன்-ஈரான்

எட்டு ஆண்டுகளாக நடந்துவந்த ஈரான், ஈராக் யுத்தம் முடிவடைந்து விட்டது அல்லவா!

இதை நினைவுகூரும் வகையில் ஈராக்கில் உள்ள பஸ்ரா நகரில் நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்படுகிறது.

இராணுவ வீரன் ஒருவன் ஒரு கையில் தேசியக்கொடியைப் பிடித்துக்கொண்டு மறு



கொமேனி

கையில் உள்ள கத்தியால் சுருமீவன் தலையில் குத்துவது போன்று இந்தச் சின்னம் அமைக்கப்படுகிறது.

ஆக்கிரமிப்பு, அத்துமீறல் குணமுள்ள சுருமீன் ஈரானைக் குறிக்கிறதாம். ★

## வடதுருவத்தில் ஒரு சாதனை!

கடும் பனிப்பிரதேசமான வட துருவத்தை அடைந்த ஒரு இளைஞர் சாதனை புரிந்து இருக்கிறார்.

அவரது பெயர் ஸ்டீபன் பெயஸ்டோன் வயது 27 பிரான்ஸைச் சேர்ந்த இவர் கனடாவின் வடமேற்குக் கரையில் இருந்து இவர் புறப்பட்டார்.

25 நாட்களாக தன்னந்தனியாகப் பயணம் செய்து வட துருவத்தை அடைந்தார். அங்கிருந்து வானொலிச் செய்தி அனுப்பினார்.

வட துருவத்தில் அனைத்தும் பனக்கட்டியாக இருக்கிறதாம்.

குளிர்நிலை 0 டிகிரிக்கும் 10 டிகிரிக்கும் குறைவாக இருக்கிறதாம். ★

# இந்தியர்களின் உடலில் அதிக அளவு டீ.டீ.ரி.

மேற்குநாட்டு மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியர்களின் உடம்பில் அதிகளவு டீ.டீ.ரி (D.D.T), லின்டேன் ஆகிய கிருமிநாசினிகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலுள்ள தொழிற்சாலை சுகாதாரத்திற்கான தேசிய நிலையம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றிலிருந்து இந்த திடுக்கிடும் தகவல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியக் கிராமங்களிலும், நகரங்களிலும் வசிக்கும் மக்கள் வருடம் ஒன்றுக்கு சராசரியாக 90 மில்லி கிராம் டீ.டீ.ரி. யையும், 20 மில்லி கிராம் லின்டேனையும் உட்கொள்கின்றனர் என்று இந்த ஆய்விலிருந்து தெரியவந்திருக்கிறது.

இந்தியாவில் தற்போது இரண்டு லட்சம் தொன் கிருமிநாசினிகள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. இவற்றுள் டீ.டீ.ரியும், லின்டேனும் 55 சதவீதமாகும்.

மரக்கறி குறிப்பாக இலையுடன் கூடிய மரக்கறிவகைகளில் டீ.டீ.ரியும், லின்டேனும் தெளிக்கப்படும்போது அவற்றை இலகுவில் அகற்றிவிடுவது கடினமாகும்.

இந்த உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கு முன் அவை கழுவப்படும்போதும் அந்தக் கிருமிநாசினிகள் இலை சார்ந்த மரக்கறிவகைகளிலிருந்து அகன்றுவிடுவதில்லை.

மக்கள் இவற்றை உண்ணும்போது அந்த இரண்டு கிருமிநாசினிகளுமே அவர் அறியாமலேயே உடம்புக்குள் சென்றுவிடுகின்றது என்று நிபுணர்கள் தெரிவித்திருந்தார்.

இந்திய மக்களின் உடம்புக்கும் இவ்விதமாகவே அதிகளவு டீ.டீ.ரியும், லின்டேனும் புகுந்துவிடுகின்றன.

இதனால் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள்கூட பாதிக்கப்படுகின்றன.

ஆண் பெண் பாகுபாடின்றி அனைவரது உடம்புக்குள்ளும் இந்தக் கிருமிநாசினி உணவு மூலம் உட்செல்வதால் தாய்ப்பாலிலும் இவை கலந்துவிடுகின்றன.

டீ.டீ.ரி மனிதனுடைய மத்திய நரம்புத் தொகுதியை தாக்கக்கூடிய ஒரு நச்சுப் பொருள் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்; (ஐ)

(நன்றி: பஹேஸ்)

# அரசியல்வாதிக்கு ஏன் 'ஆளுயர' மாலை அணிவிக்கப்படுகிறது?

கலைஞர் கருணாநிதி முதல்வரான சமயம் அவர் கலந்துகொண்ட கூட்டத்தில் அவருக்கு மாலை அணிவிக்க ஏராளமானபேர் முண்டியடித்தார்கள். ஏற்கனவே அறிமுகமான தொண்டர்களைத் தவிர இதுவரை பார்த்திராத புதுமுகங்களும் நிறையப்பேர் பெரிய பெரிய மாலைகளை வைத்துக்கொண்டு நின்றனர்.

அத்தகைய புதியவர்களில் ஒருவர் மேடைஏறி மைக் முன் வந்து 'நமது முதல்வருக்கு இந்த ஆள்உயர மாலையை அணிவிக்கிறேன் என்றுகூறி அம்மாலையைக் கருணாநிதி முத்தில் போட்டார்.

கருணாநிதி சிரித்தபடியே அம்மாலையைக் கழுத்திலேயே இருந்து கழற்றிய வண்ணம்—

''இது ஆள் உயர மாலை தான். அதேசமயம் இதை எனக்கு அணிவித்த அந்த 'ஆள்உயர' இந்த மாலையை எனக்கு அவர் அணிவித்திருப்பார் என்று நான் எண்ணவில்லை! என்று அவர் கூறியதும் கூட்டத்தில் பெரும் சிரிப்பொலி எழும்பியது. ★



கருணாநிதி

## நொருங்கிய விமானத்தில் 'நொருங்காத' ஆசாமி

பிஷப் பிராட், வயது 36. நான்கு குழந்தைகளின் தந்தை. இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.

சமீபத்தில் ஒரு விமானத்தை இவர் ஓட்டிச் சென்றார். விமானமோட்டி ஒருவர் மட்டுமே செல்லக்கூடிய விமானம் அது.

1,900 அடி உயரத்தில் வானில் அது பறந்தபோது அதில் திடீர் கோளாறு உண்டானது.

நேராகப் பூமியை நோக்கி வந்த அது ஒரு மேடான பகுதியில் மோதி 3 பகுதிகளாக சிதறி ஓடியது.

மூன்றாக நொருங்கிய விமானத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து அலுங்காமல், குலுங்காமல் எழுந்து வந்தார் விமானமோட்டி பிராட்.

அவருக்குச் சிறு சிராய்ப்புக் காயம் மட்டுமே உண்டாகி இருந்தது.

நொருங்கிய சில பாகங்களைக் கையில் தூக்கியபடி அவர் போட்டோவுக்கு 'போஸ்' கொடுத்தார்.

நொருங்கிய விமானத்தில் நொருங்காத ஆசாமி என அவருக்குப் பெயர் கிடைத்துவிட்டது. ★

# எவரெஸ்ட் உச்சியில் இருந்து 3 வாரங்களுக்கு ஒளிபரப்பு!

எவரஸ்ட் மலை உச்சியில் இருந்து மூன்று வாரங்களுக்கு நேரடி ஒளிபரப்பு நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 24 ஆம் திகதியில் இருந்து இந்த ஒளிபரப்புச் சேவையை பிரெஞ்சு டெலிவிஷன் நிலையம் ஒன்று ஆரம்பிக்கும்.

8,848 மீட்டர் (29,198 அடி) உயரமான எவரெஸ்டின் உச்சியை அக்டோபர் மாதம் அடையவுள்ள ஐந்து மலையேறும் குழுக்களின் நடவடிக்கைகள்,

நேபாள நாட்டைச் சுற்றியுள்ள மலைத்தொடர் பற்றி விவரணச்சித்திரம் ஆகியன இந்தஒளிபரப்பில் இடம்பெறவிருக்கிறது.

ஸ்பெயின், செக்கோஸ்லவேகியா, நியூசிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியநாடுகளைச் சேர்ந்தவர்கள் தெளிவாக இந்த ஒளிபரப்பைப் பார்க்கலாம்.

ஒளிபரப்பைச் செய்வதற்கான 25 தொன் உபகரணங்களை தூக்கியே மலை உச்சிக்குக் கொண்டுபோகப்படவுள்ளன.

காரணம் இவ்வுபகரணங்களை ஹெலிக்கொப்டர்மூலம் கொண்டுபோய் மலை உச்சியில் இறக்கமுடியாததே.

ஹெலிக்கொப்டர் 6 ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு மேலே (20 ஆயிரம் அடி) பறக்கமுடியாது.

மலையேறும் ஒளிபரப்புக் குழுவில் 6 மலையேறுபவர்கள், 60 தொழில்நுட்பவியலாளர்கள், 400 ஷெர்பாக்கள் இருப்பர்.

சென்ற மே 5 ஆம் திகதி ஜப்பானியகோஷ்டி ஒன்று எவரஸ்ட் உச்சியில் இருந்து நேரடி ஒளிபரப்புச் செய்தது.

மலைதன் எவரெஸ்ட் உச்சியில் காலடிவைத்த 35 ஆவது வருட நிறைவை ஒட்டி இந்த ஒளிபரப்பு நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் கீழே:



## 'பார்வை'யை ஏன் நெருப்பாக்கினன்?

வானத்து மீன்களை  
விழியாக்கி...  
அந்த வண்ண நிலாவையே  
முகமாக்கி...  
வானவில்லை  
இடையாக்கி..  
வட்டமேகத்தை  
மார்பாக்கி  
வசந்த தென்றலை  
மேனியாக்கி...  
இத்தனை அழகோடு  
உன்னைப் படைத்தவன்  
பார்வையை  
மட்டும்—ஏன்  
'நெருப்பாக்கினன்'

— மதுப்பித்தன்

# டைனோஸர் மிருகம் கண்டம் விட்டு கண்டம் சென்று வாழ்ந்ததா?

## சீனாவிலும் எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

ஓணான் வடிவத்தில் ராட்சத தோற்றம் உள்ள விலங்குகள், டைனோசர் இவற்றின் இனம் இன்று பூண்டோடு அழிந்து விட்டது.

டைனோஸர் மிருகம் சீனாவிலும் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தது எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மாதம் இறுதிவாரத்தில் சீன, கனடிய நாடுகளின் ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று சீனாவின் கோபி பாலைவனத்தில் ஆறு சிறிய டைனோஸர் மிருகங்களின் எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தது.

ஏழரைக் கோடி ஆண்டுகளாக இவை புதையுண்டு கிடந்தன என்று ஆராய்ச்சியில் தெரியவந்தது.

இவற்றில் ஐந்து எலும்புக்கூடுகள் டைனோசர் குட்டிகளுடையவை ஆகும். அவை ஒரே இடத்தில் புதையுண்டு கிடந்தன.

புழுதிப் புயல் காரணமாக அவை ஒரே இடத்தில் உயிரோடு சமாதியாகி இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த எலும்புக்கூடு ஒவ்வொன்றும் செம்மறியாட்டு எலும்புக்கூடு அளவுக்கு இருக்கிறது.

பூரண வளர்ச்சியடைந்த டைனோஸரின் எடை 3 ஆயிரம் ருத்தல் வரை இருக்கும்.

'டைனோஸரின் பழக்க வழக்கங்கள் நாம் நினைத்தமாதிரி அல்ல: மிகவும் குழப்பகரமானவையாக இருந்திருக்கின்றன'-இப்படி அல்பர்ட்டா மியூசியத்தின் உதவி இயக்குனர் பிலிப் கியூரி தெரிவித்தார்.

கடந்த மாதம் நடுப்பகுதியில் சீனாவில் டைனோஸர் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை, சீனாவில் டைனோஸர் இனம் இருந்து அழிந்து போயிற்று என்பதை நிரூபிக்கிறது.

டைனோஸர் உலகில் 6½ கோடி முதல் 25 கோடி வருடங்களுக்கு இடையில் வாழ்ந்துள்ளது.

சீனாவில் டைனோஸர் வாழ்ந்தது பற்றிய ஆராய்ச்சியை ஏனைய நாட்டு ஆராய்ச்சியாளர்கள் இதுவரை காலமும் நடத்த முடியாமல் இருந்தது.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னரே சீனா, ஏனைய நாட்டு ஆராய்ச்சியாளர்களை இதற்கு அனுமதித்தது.


வடஅமெரிக்கா முன்னர் ஆசியாக்கண்டத்துடன் நிலத்தால் இணைக்கப்பட்டிருந்தது. இப்போது பெரிங் நீரிணை இரண்டு கண்டங்களையும் பிரிக்கிறது.

வடஅமெரிக்காவில் இருந்து டைனோஸர் ஆசியாவுக்கு நிலத்தால் இரண்டு கண்டங்களும் இணைக்கப்பட்டிருந்த சமயம் வந்திருக்க வேண்டும் என்று சீன-கனடிய குழு கண்டறிந்துள்ளது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட டைனோஸர் எலும்புக்கூடு ஒன்று வட அமெரிக்காவில் வாழ்ந்த டைனோஸருடையதை ஒத்திருந்ததாகத் தெரியவந்துள்ளது:

இதில் இருந்து டைனோஸர் மிருகம் கண்டம் விட்டுக் கண்டம் பயணம் செய்யக்கூடியது ஒன்று என்பதும் எந்தக் கால நிலைக்கும் தன்னைச் சமாளித்துக்கொண்டு வாழக்கூடியது என்பதும் இதனால் தெரியவந்திருக்கிறது. ★

ஆதாரம்: நியூஸ்வீக்



# நீண்ட விமானப் பயணமா? மாரடைப்பு வரலாம்!

விமானத்தில் நீண்ட தூரம் தொடர்ந்து பயணம் செல்கிறவர்களுக்குக் காலில் இரத்தம் உறைந்து மாரடைப்பு ஏற்படலாம் என்று டாக்டர்கள் கூறுகின்றார்கள்.

பெரும்பாலும் சிக்கன வகுப்பில் பயணம் செல்கிறவர்களுக்கே அதிகமான பாதிப்பு ஏற்படுகிறது.

அதுவும் பயணத்தின் போது மது, சிகரெட் பிடித்தால் பாதிப்பு அதிகமாகும்.

கால்களை அசையாமல் வைத்து இருப்பதால் இப்படி ரத்தம் உறைகிறது.

இதைத் தடுக்கக் கால்களை அசைக்கவேண்டும். எழுந்து நடக்கவேண்டும் என்று டாக்டர்கள் கூறுகின்றார்கள். ★

## சூரியன் பற்றிய ஆராய்வுக்கு 100 கோடி

சூரியனின் உட்பகுதியை ஆராய இங்கிலாந்து விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் திட்டம் தீட்டி உள்ளது.

இதற்காக ரூபா 100 கோடி செலவிடப்படும்.

1995 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.

சூரியனின் உட்பகுதியை ஆராய்வதுடன் அதனால் பூமியின் காந்தவிசை, சுற்றுப்புறம் ஆகியவற்றில் மாறுதல் ஏற்படுவதற்கான காரணமும் இந்தக் திட்டத்தில் கண்டறியப்படும் ★

### பளபளப்பாக வேண்டுமா?

பயிற்றம்பருப்பு மாவுடன் உலர்ந்த நெல்லிக்கனியின் பொடியையும் கலந்து, உடலில் தேய்த்துக்குளித்து வந்தால், சருமம் மழமழப்பாகி நன்றாய் பளபளத்துக் காட்டும். ★

# தண்ணீர்க் குழாயும் ஓர் இசைக்கருவியே!

எத்தனையோ இசைக் கருவிகள் உள்ளன.

அதில் உண்டாகும் இசையையும் கேட்டிருக்கிறோம்.

ஆனால் மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ஜெர்ட் என்பவர் வைத்திருக்கும் இசைக் கருவியையும் அதில் உண்டாகும் இசையையும் நாம் பார்த்தும் கேட்டும் இருக்கமாட்டோம்.

அப்படி என்ன புதுமையான இசைக்கருவி என்கிறீர்களா? கேட்டால் சிரிப்பீர்கள்.

அது ஒரு சாதாரண பழைய தண்ணீர்க் குழாய்தான்.

இந்தக் குழாய் மூலமாக இசைகள் உண்டாக்கி நிகழ்ச்சி நடத்திவரும் இவர் தற்போது கனடா நாட்டில் வசித்துவருகிறார்.

விரைவில் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தனது 'தண்ணீர்க்குழாய்' மூலமாக இசை நிகழ்ச்சி நடத்தத் திட்டமிட்டிருக்கிறார். ★

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

## தெரிந்த பெயர் தெரியாத விவரம்

# மின்காந்த அலைகளைக் கண்டுபிடித்த ஹேர்ட்ஸ்

உலக நாடுகளில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளையும் விம்பிள்டன் டென்னிஸ் பந்தயங்களையும் நேர்முக வர்ணனையாக ரேடியோவில் கேட்கும்போதும், டெலிவிஷன் மூலமாகப் பார்க்கும் போதும், ஆகாய விமானங்களிலும், கப்பல்களிலும் பயணம் செய்து போகவேண்டிய இடத்துக்குப் பத்திரமாகப் போய்ச் சேரும்போதும், ஹைன்ரிச் ஹெர்ட்ஸ் (Heinrich Hertz) என்ற ஜெர்மன விஞ்ஞானியை நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

அவர் 1888 - ஆம் ஆண்டில் ரேடியோ அலைகள் எனப்படும் மின்காந்த அலைகளை உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். மின்காந்த அலைகள் கண்டுபிடிக்கப்பட்டிராவிட்டால் உலகமே முற்றிலும் வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

ஹெர்ட்ஸ் ஹாம்பர்கில் பிறந்து, 37 - ஆவது வயதில் பான் நகரில் 1894 – இல் காலமானார். அவர் மின்காந்த அலைகளைக் கண்டுபிடித்த போது, அவை உலகின் எதிர் காலத்தை வடிவமைப்பதில் இவ்வளவு முக்கிய பங்கு வகிக்கப் போகின்றன என்று கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்.

### தற்செயல் கண்டுபிடிப்பு

மின்காந்த அலைகளை அவர் கண்டுபிடித்தது ஒரு தற்செயலான நிகழ்ச்சியே. அவருடைய ஆய்வகத்தில் மெல்லிய கம்பியாலான இரண்டு வளையங்கள் அருகருகே கிடந்தன. இரண்டு வளையங்களிலும் கம்பிகள் வெட்டிவிடப்பட்டிருந்தன. வெட்டு முனைகளுக்கிடையில் மின்பொறி மூலமாக மின்சாரத்தைப் பாயச்செய்ய முடியுமா என்று கண்டுபிடிக்க ஹெர்ட்ஸ் முயற்சி செய்து கொண்டிருந்தார்,

லெய்டன் ஜார் [Leydenjar] என்ற கருவியிலிருந்து மின்சாரத்தை அவர் ஒரு வளையத்திலிருந்து இடைவெளியில் மின்பொறி தோன்றியது. அதே சமயத்தில் பக்கத்தில் கிடந்த வளையத்திலிருந்த இடைவெளியிலும் மின்பொறி உண்டாயிற்று!

முதல் வளையத்தில் மின்காந்த அலைகள் தோன்றிப் பரப்பப்பட்டன எனவும், இரண்டாவது வளையம் அவற்றை வாங்கியது எனவும் ஹெர்ட்ஸ் உணர்ந்தார். அவர் வளையங்களைப் பெரிய அளவுகளில் அமைத்துச் சோதனைகளைத் தொடர்ந்து செய்தார். அலைப்பரப்பி வளையத்தின் பின்னால் உலோகப் பிரதிபலிப்பான்களை வைத்து மின்காந்த அலைகளிருப்பப்பட்ட திசையில் செலுத்தமுடியும் என அவர் காட்டினர்.

### ஒளி அலைபோல.....

மற்ற நாடுகளிலும் பல விஞ்ஞானிகள் மின்காந்த அலைகளைப்பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தனர். இங்கிலாந்தில் மைக்கேல் ஃபாரடே கிளார்க் மாக்ஸ்வெல் ஆகியோர் மின்காந்த அலைகள் ஒளி அலைகளைப்போலவே நடந்துகொள்கின்றன என்று கூறினீர்கள். ஆனால் அவர்களால் அதற்குச் செயல்ரீதியான சான்று எதையும் காட்டமுடியவில்லை. ஹெர்ட்ஸ் காலமானதற்கு இரண்டு ஆண்டுகள் கழித்து அலெக்சாந்தர் போபோவ் (Alexander Popov) என்ற ரஷியரும், குக்லியெல்மோ மார்க்கோனி (Guglielom Marconi) என்ற இத்தாலியரும் பலமைல தொலைவுக்கு மின்காந்த அலைகளை அனுப்ப முடியும் என்று நிரூபித்தனர். ஆங்கிலத் தொழிலதிபர்களின் உதவியுடன் மார்க்கோனி தனது கண்டுபிடிப்பை ஒரு வர்த்தகத் தொழிலாக வளர்த்து 1901 -ம் ஆண்டில், அட்லாண்டிக் கடலில் செல்லும் ஒரு கப்பலில் முதன் முறையாகக் கம்பியில்லாத் தந்திச் சாதனத்தை நிறுவினார்.

1870 – 71–ஆம் ஆண்டுகளில் பிரான்சுக்கும் பிரஷ்யாவுக்கும் இடையே போர் நடந்தது 'ராய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனத்தின் ஸ்தாபகரான பாரன் பால் ஜூலியஸ ராய்ட்டர். ஜெர்மனியர்களால் முற்றுகையிடப்பட்டிருந்த பாரிஸ் நகரிலிருந்து புறாக்களின் கால்களில் செய்தி ஓலைகளைக் கட்டி லண்டனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அந்த நூற்றாண்டு முடிந்தவுடனேயே புறாக்களுக்குப் பதிலாகக் கம்பியில்லாத் தந்தி முறை வந்துவிட்டது. ரேடியோ வால்வுகள் கண்டுபிடிக்கப்பட்டு நேர்த்தி செய்யப்பட்ட பிறகு ரேடியோ வெற்றிகரமாக முன்னேறத் தொடங்கியது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையைத் தாக்கும் பூச்சிகளும் நோய்களும்; அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்

(1) வாழைக் கிழங்குத் துளைப்பான் (Banana Rhizome Weevil)

இது ஓர் நீள்மூஞ்சி வண்டு இதன் பெயர் கொஸ்மோ பொலிற்றஸ் சோடிடஸ் (Cosmopolitus Sordidus). முதிர்வண்டு 12.5 மி. மீற்றர் நீளமானது. இதன் தலையின் முன்பக்கம் ஊசிபோல் நீண்டு காணப்படும். அதன் நுனியில் வண்டின் வாய்ப்பகுதி காணப்படும்.

புதிதாக வெளிவரும் வண்டு செங்கபில நிறமுடையது. சிறிது நேரத்தின் பின் இதன் நிறம் கறுப்பாக மாறுகின்றது. இதன் செஞ்சுறையின் மேற்பகுதியில் சிறு புள்ளிகள் காணப்படும். இதன் நடமாட்டம் இரவு நேரங்களில் தான் காணப்படும். ஆனால் பகல் நேரங்களில் இவ் வண்டுகள் மடல் உள் கிடக்கும். அல்லது உக்கிய மர அடியில் அல்லது குப்பை கூழங்களுக்கடியில் ஒளித்து இருக்கும். சுமார் இருவருடங்களுக்கு உயிர் வாழக்கூடியன.

பெண்முதிர் வண்டு பொதுவாக இரவு நேரங்களில் கிழங்குக்குள் மண்ணுக்கு சிறிது மேலாகக் காணப்படும் கிழங்குப் பகுதியைக் கடித்து துவாரம் செய்து அதன் உள் வெண்மையான தனது முட்டைகளை இடுகின்றன.

முட்டைகள் தனித் தனியாக இடப்படுகின்றன. முட்டை 2 மி. மீற்றர் நீளமானதால் இலகுவில் எம் கண்ணுக்குப் புலப்படா. பொரிக்கும் குடம்பிகள் (Grubs) கிழங்கைத் துளைத்து உள் நோக்கிச் செல்லும். குடம்பிக் காலம் 3-6 கிழமைகளாகும்.

முழு வளர்ச்சியடைந்த குடம்பி 12.5 மி.மீற்றர் நீளமுடையதாக இருக்கும் இதன் உடம்பில் கால்கள் இருக்கமாட்டா, தலை செங்கபில நிறமுடையது.

கூண்டுப் புழுக் காலத்தை துளைக்கப்பட்ட பாதைகளிலே கழிக்கின்றன. கூண்டுப் புழுக் காலம் 6-8 நாட்கள் பின்வண்டாக தோன்றுகிறது.

**தாக்கத்தின் விளைவுகள்:-**

1. வேர் தண்டுக்கிழங்கை வெட்டிப்பார்த்தால் உட்பகுதி துளைத்து சுரங்கங்கள் போல காணப்படும். சுரங்கங்கள் கறுப்பாகவோ அல்லது கபில நிறமாக இருக்கும். இதனால் இதற்கு நன்றாக இருப்பின் காய்த்து இறந்துவிடும்.

2. வளர்ந்த மரங்களின் கிழங்குகள் தாக்கப்பட்டால் தோன்றும் குலைகள் மிகச்சிறியதாக இருக்கும். கடுமையாகத் தாக்கப்பட்ட மரங்கள் காற்றடிக்கும் வேளைகளில் சரிந்து விழுந்துவிடும். இதனால் விளைவு பாதிக்கப்படுகின்றது.

**கட்டுப்பாடு:**

★ வண்டினால் தாக்கப்படாத வேர் தண்டுக்கிழங்குகளை நடுகைக்கு தெரிந்து பாவித்தல்வேண்டும்.

★ சுத்தமான பயிர்ச்செய்கை முறையை கையாளல். அதாவது தாக்கப்பட்ட நடுகைப்பொருள்கள், குப்பை கூழங்களைத் தரையில் விடாது எரித்து அழிக்கவேண்டும். இதனால் இனப்பெருக்கம் தடைப்படுகிறது.

★ பொறி வைத்தல்:- வாழையின் தண்டைத் துண்டு துண்டங்களாக அல்லது கிழங்கைத் துண்டங்களாக வெட்டித் தோட்டத்தில் வெவ்வேறு இடங்களில் வைப்பதனால் முதிர்வண்டுகள் பகல் நேரங்களில் இத் துண்டங்களின்கீழ் பதுங்கிக் காணப்படும். அப்படியாகக் காணப்படும் முதிர்வண்டுகளைப் பொறுக்கி அழித்துவிடல்வேண்டும். ஆனால் கிழமைக்கு ஒருமுறை கிழங்குத் துண்டங்களைமாற்றி வைத்தல்வேண்டும்.

★ தடுப்புமுறையால் (Quarantine) மூலம் பிற இடங்களுக்குத் தாக்கப்பட்ட நடுகைப்பொருட்களை எடுத்துச் செல்வதைத் தடை செய்து கட்டுப்படுத்தலாம்.

**இரசாயனமுறை**

★ கப்சாபூரன் 3% குறுனல் - 10 மரங்களுக்கு ஒரு இருத்தல் என்ற வீதம் இட்டு மண்ணுடன் கலந்து விடல் வேண்டும்.

**திரண்ட தண்டு முனை (Bunchytop)**

இதுவோர் வைரஸ் நோய். இவ்வைரஸ் பென்ரலோனியா நைக்ரோநேவோஷா எனப்படும் வாழை ஏபிட் (அளுக்கணவன்) பூச்சியினால் பரப்பப்படுகின்றது. இக் காவியான ஏபிட் ஓர் நோயுள்ள தாவரத்தின் சாற்றைக் குறைந்தது 17 மணித்தியாலம் உறுஞ்சுமாயின் வைரஸ் நோயைக் கடத்தும் இயல்பைப் பெறுகின்றது. இதன் பின் இக் காவி ஓர் ஆரோக்கியமான தாவரத்தை அடைந்து 1½-2 மணித்தியாலம் கலச்சாற்றை உறுஞ்சுமாயின் வைரஸ் புதிய தாவரத்தைச் சென்றடையும். மழைக்காலத்திலும்தான் கூடுதலாக ஏபிட் தாவரத்தின் நடு இலைக்காம்பின் அடியைச் சுற்றிக்காணப்படும்) வளர்ந்த



தாவரங்களில் இந் நோய்த் தாக்கம் ஏற்படும்போது குட்டிகளில்தான் தெளிவான தாக்கத்தைக் காணக்கூடியதாக இருக்கும்.

**தாக்க அறிகுறி**

★ இளந் தளிர்களின் கீழ்ப் பரப்பில் உள்ள நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதியிலும், காம்பிலும் கடும் பச்சை நிறமான கீறுகள் தோன்றும். இதன் பின் தோன்றும் இலைகள் குன்றிப் பெருக்காது சிறியனவாக இருக்கும். இப்படியாக அடிக்கடி தோன்றும் இலைகள் இவ்வாறு வளர்வதனால் தண்டின் நுனிப் பகுதியில் குழுமித் திரள்கின்றன. இதனால் இந்நோய்க்கு திரண்ட தண்டுமுனை எனப்படும்.

இந் நோய் தாக்கப்பட்ட இலைகள் வழக்கத்தை விட நேராகவும், அதன் ஓரங்கள் வெளிறி சுருண்டும் காணப்படும். இவ் வாழைகள் 2560 — 600 செ. மீ. கூடுதலாக வளர்வதில்லை.

★ பிரதான தண்டில் உண்டாகும் குலைகள் வளர்ச்சி குன்றி சிறியனவாகப் பேணப்படும்.

4. இந்நோய் தாக்கப்பட்ட தாவரத்தின் பங்கு, பற்றி நியா போன்றவற்றில் தாக்கம் ஏற்படும் வேர்கள் அழுகிக் காணப்படும்.

**கட்டுப்பாடு**

1. நோயுற்ற தாவரங்களில் இருந்து நடுகைப் பொருட்களைப் பெற்று நடல் வேண்டும்.

2. நோய்த் தாக்கத்தின் அறிகுறி காணப்பட்டவுடன் அதிலிருவாகக் கொல்லுகின்ற எம். சி. பி ஏ. அல்லது 2-4 டி. போன்ற களை நாசினியைத் தாவரத்தின் உள் ஊசி மூலம் செலுத்தி அழித்தல் வேண்டும். அத்தோடு ஊடுருவிச் செல்லக்கூடிய பூச்சிநாசினி ஒன்றையும் சேர்த்து ஏற்றினால் வைரசைக் கடத்தும் இயல்புடைய ஏபிட்சைக் கொன்று நோய் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

3. எதிர்ப்புச் சக்தியுள்ள கப்பல் வாழையை நடவும்.

**3. பூசணி சித்திர வடிவு நோய் (Cucumber Mosaic)**

இந்நோய் ஓர் வைரஸ் நோய். இது பென்ரலோனியா நைக்ரோநேர்வோஷா, ஏபிஸ் கொஸிப்பி, மைசஸ் பேசிக்கே போன்ற ஏபிட் காவிகளினால் பரப்பப்படும். இந்நோய் நோயுற்ற விருந்து வழங்கித் தாவரங்களில் இருந்து விதைகளுக்குப் பரப்பப்படுகின்றன. ஆனால் நோயுற்ற வாழையில் இருந்து நோயற்ற வாழைக்குப் பரப்புவதில்லை.

**தாக்க அறிகுறி:-**

நோயின் காரணமாக தாவரத்தின் இலைப்பரப்பில் மஞ்சள் நிறம் தோன்றி ஓர் சித்திர வடிவு இயல்பைத் தோற்றுவிக்கும்.

சில சமயங்களில் நடுநரம்பின் ஒரு பக்கத்தில் அல்லது இரு பக்கத்திலும் உள்ள இலைப்பரப்பு அரைகுறையாக விரித்தலடைந்த தோற்றத்துடன் காணப்படும்.

சில சமயங்களில் திரண்ட தண்டுமுனை நோய் ஏற்படுவது போன்று போலித் தண்டு முனையில் திரண்டு காணப்படும். ஆனால் இலைகளின் வளர்ச்சி குன்றுவதில்லை.

கடுமையாகத் தாக்கப்பட்டால் இலை மடல்கள் அழுகிய நிலை அடைந்து கீழ் நோக்கிச் சென்று கிழங்கின் மேல் அரும்பைத் தாக்கி அழுகிக் காணப்படும்.

**கட்டுப்பாடு**

1. நோயற்ற உறைகுத் துண்டுகளை நடுகைக்குப் பாவித்தல் வேண்டும்.

2. இந் நோயின் பிறவிருந்து வழங்கித் தாவரங்கள் ஆகியவற்றை வாழைத் தோட்டங்களில் நடுவதைத் தவிர்க்கவும்.

3. நோயுற்ற தாவரங்களுக்கு ஊசி மூலம் எம். சி. பி. ஏ. போன்ற களை நாசினிகளைச் செலுத்துவதன் மூலம் விரைவில் அழித்து விடலாம்.

4. தாக்கப்பட்ட பயிரை உடனடியாக அகற்றி விடல் வேண்டும். ★

- க. பத்மநாதன் -
(மாவட்ட விவசாய செயலகம், முல்லைத்தீவு)

# பெண்களுக்கு சில ஆலோசனைகள்

பெண்மணிகளுக்கு மிகவும் கவலைதருகிற விஷயம் அவர்களுடைய வயது கூடிக்கொண்டே போவதுதான், இயற்கைக்கு இந்த விஷயத்தில் இரக்கமே கிடையாது.

நவநாகரிகப் பெண்கள் எப்போதும் தமது உண்மையான வயதைக் குறைத்துச் சொல்லவே விரும்புகிறார்கள். 40, 50 வயதாகிவிட்டால் அது ஏதோ வெளியேசொல்ல வெட்கப்படவேண்டிய விஷயம்போல எண்ணுகிறார்கள்.

ஆனால் நவீன ஆய்வுகள் நடுத்தர வயதுள்ள பெண்களுக்கு ஆறுதல் தரும் விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றன. இளம் பெண்களுக்கு மேலும் மகிழ்ச்சிதரும் செய்திகளையும் அவை கூறுகின்றன.

ஒல்லியாக இருந்தால்தான் அழகு என்று நினைத்துக்கொண்டு பல பெண்கள் நல்ல சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவதில்லை.

உடற்பயிற்சி செய்தால் மென்மையும் நளினமும் போய்விடும் என்பதற்காகப் பலர் உடலை அலட்டிக்கொள்வதில்லை.

மாதவிடாய் நிற்கும் தருவாயில் இந்தத் தவறுகள் பெண்களுக்குத் தொல்லையை உண்டாக்கக்கூடும்.

மாதவிடாய் நிற்பது[Menopause]என்பது ஒருபெண்ணின் சூலகம் [Ovary] முட்டைகளை உற்பத்தி செய்வதை நிறுத்தி விடுவதாகும். இது 46 முதல் 55 வரையான வயதுகளில் ஏற்படலாம்.

**உடல் உபாதைகள்**

அந்தநேரத்தில் வீட்டில் பல பிரச்சினைகள் நிலவக்கூடும். நடுத்தரவயதில் உளவியலாகவும் உடலியல் தன்மையிலும் பிரச்சினைகள் ஏற்படும்.

வயதானவர்களுக்கு மரியாதை தரும் மரபு இருப்பதால் பெண்களுக்கு வயதாகிவிடுவதைப் பற்றி அதிகமான கவலை ஏற்படுவதில்லை.

மாதவிடாய் நிற்கும்போது 25 வீதம் பெண்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படும். உடம்பு திடீர் திடீரென்று சூடாகும். பிறப்புறுப்புக்களிலும், சிறுநீர்ப் பைகளிலும் எலும்பு அமைப்புக்களிலும் மாற்றங்கள் ஏற்படும். உடலில் எஸ்ட்ரோஜன் [Estrogen[ என்ற ஹார்மோன் சத்து குறைவதால் இந்தக் கோளாறுகள் ஏற்படுகின்றன.

எஸ்ட்ரோஜன் சத்தை உடலில் செலுத்தி இந்தக் கோளாறுகளைத் தவிர்க்கலாம். ஆனால் இந்தச் சிகிச்சை முறையைப் பலரும் எதிர்க்கிறார்கள். அது புற்றுநோயைத் தூண்டிவிடக்கூடும் எஸ்ட்ரோஜனை புரோஜெஸ்டின் (Progestin) என்ற ஹார்மோனுடன் இணைத்து மிகச்சிறிய அளவுகளில் உட்செலுத்தி நல்ல பயன்பெறலாம் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சில பெண்களுக்கு ஹார்மோன்களால் புற விளைவுகள் ஏற்படக்கூடும்.

வயதானவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்படுவது சகஜம். அதற்கு ஒஸ்டியோபோரோசிஸ் (Osteoporosis) என்று பெயரிட்டிருக்கிறார்கள். 'எலும்பு நலிதல்' என்று அதைத் தமிழில் சொல்லலாம். எலும்பு உருவாகக் கல்சியம் அவசியம்.

பெண்களுக்குக் கல்சியச் சத்து கூடுதலாகத் தேவை. இளம் பெண்கள் பிரசவத்தின்போதும் பாலூட்டும் போதும் கல்சியத்தை இழக்கிறார்கள்.

பெண்கள் மாதவிடாய் நிற்பதற்குச் சில ஆண்டுகள் முன்பிருந்தே தினமும் 1000 முதல் 1500 மில்லிகிராம் வரை கல்சியத்தை உட்கொண்டு வந்தால் அவர்களுக்கு எலும்பு நலிதல் வராது. மாதவிடாய் நின்றதும் எஸ்ட்ரோஜன் குறைந்து எலும்புகளும் தேயத் தொடங்கும். அப்போது பெண்கள் தினமும் 1500 மில்லிகிராம் கல்சியத்தை உட்கொள்ள வேண்டும். ஒரு டம்ளர் பாலில் 300 மில்லிகிராம் கல்சியம் கிடைக்கும்.

சிறு வயதிலிருந்தே தேகப் பயிற்சி செய்து எலும்புகளை வளர்த்துக் கொண்டு விட்டால் மாதவிடாய்க்குப் பின் தோன்றும் எலும்பு இழப்புகளைச் சமாளிக்க முடியும்.

முதிய பெண்மணிகள் தேகப் பயிற்சி செய்தால் எலும்பு இழப்புக் குறையும். நடப்பது, மெல்ல ஓடுவது, டென்னஸ், சைக்கிள் ஓடுவது போன்ற தேகப் பயிற்சிகளே போதும்.

அத்துடன் அவர்கள் தமது அட்ரினலின் சுரப்பிகளைத் தூண்டிவிடக்கூடிய காரியங்களையும் செய்து அதிலிருந்து அதிக அளவில் எஸ்ட்ரோஜனை வெளிப்படவைக்கலாம்.

இவற்றுடன் நல்லசத்துள்ள உணவுகளும், ஒழுக்கமான வாழ்க்கை முறையும்கூட முதுமையில் ஏற்படும். எலும்பு நலிதலைத் தவிர்க்க உதவும்.

சில பெண்களுக்கு மாதவிலக்கு நின்ற பிறகு உடல் சூடாகித் திடீர் திடீரென்று எரிச்சல் தோன்றும். இதற்கு என்ன காரணம் என்று மருத்துவர்களுக்கே தெரியவில்லை சில பேருக்கு ஓரிரு ஆண்டுகளில் இது நின்றுவிடும். வேறு சிலருக்குப் பத்து ஆண்டுகளுக்கு மேலும் நீடிப்பதுண்டு.

சாப்பாட்டினாலோ, பழக்க வழக்கங்களினாலோ, மன நிலையினாலோ இவை ஏற்படலாம் பருத்தியாடைகளை அணிவது, ஒழுங்காகத் தேகப் பயிற்சி செய்வது, மது அருந்தாமை, மனத்தையும் உடலையும் தளரவிடும் ஆசனங்கள் செய்வது போன்றவற்றால் இத்தகைய அறிகுறிகளைக் குறைக்கலாம்.

ஒரு குளிர்ச்சியான இடத்தில் இருப்பது போன்ற ஓர் எண்ணத்தை உண்டாக்கிக்கொள்வதும், குளிர்ந்த நீரைப் பருகுவதும் உதவும். மனக்கவலைகளையும் உளைச்சல்களையும் தவிர்ப்பது நல்லது

சில பெண்கள் இரவில் தூங்கும்போது திடீர் திடீரென்று உடம்பு சூடாகி வியர்த்துக் கொட்டி எழுந்து விடுவார்கள். இரவு உணவைத்தவிர்ப்பதும், தூங்கப்போவதற்கு முன் மனத் தளர்வு செய்து கொள்வதும் இவர்களுக்கு நன்மை தரும். குளிர்ந்த நீரால் அல்லது பனிக்கட்டிகளால் ஒத்திக் கொள்வது நல்ல பலனளிக்கும்.

**சிறுநீர்ப்பையில் சிக்கல்**

மாதவிடாய் நின்ற பிறகு சில பெண்களுக்குச் சிறுநீரை அடக்குவது சிரமமாக இருக்கும். பிறப்புறுப்புக்களைச் சுற்றியுள்ள தசைகள் பலவீனப்பட்டுப் போவதால் இது தோன்றுகிறது. பிறப்புறுப்புத் தசைகளை விரைவாகச் சுருக்கித் தளர வைப்பது, மெதுவாகச் சுருக்கித் தளரவைப்பது போன்ற பயிற்சிகளின் மூலம் இந்தக் கோளாற்றைச் சரிப்படுத்தலாம் என்று கெகெல் (Kegel) என்ற மருத்துவர் கண்டுபிடித்திருக்கிறார்.

எஸ்ட்ரோஜன் பற்றாக்குறை காரணமாகப் பிறப்புப்புழை உலர்ந்து போவதும் நமைச்சல் ஏற்படுவதும் சில பெண்களுக்கு ஏற்படும். அதனால் உடலுறவு துன்பம் தருவதாக இருக்கலாம். நமைச்சல் நிற்க தேங்காயெண்ணெய், வாஸலைன், எஸ்ட்ரோஜன் கிரீம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

**மனக் கோளாறுகள்**

மாதவிடாய் நின்ற பிறகு பல பெண்கள் மன உளைச்சல், மறதி, சிடுசிடுப்பு ஆகியவற்றால் அவதிப்படுவார்கள். மற்ற வீட்டுக் கவலைகளும் அவர்களுக்கு மனக் கோளாறுகளை உண்டாக்கலாம்.

மாதவிடாய் நின்று போவதை ஏதோ பெரிய விபத்து என்று எண்ணாமல், அதை ஒரு தொல்லை விட்டதாகவே எண்ணிச் சந்தோஷப் படலாம்.

உணவுப் பழக்கங்களைச் சீர் செய்துகொண்டு, ஒழுங்காக உடற்பயிற்சி செய்வதன்மூலம் மன உளைச்சலைத் தவிர்க்கலாம்.

ஏதாவது ஒரு பணியில் அல்லது சேவையில் முழு மனதுடன் ஈடுபடுத்திக்கொள்வது உதவியாக இருக்கும். வயதாகிவிட்டது என்று எண்ணிப் பெண்கள் தம்மை அழகு படுத்திக் கொள்வதை நிறுத்தி விடக்கூடாது.

பல பிரபலமான பெண்கள் மாதவிடாய் நின்ற பிறகே பல அரும்பெரும் சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். ★




## பேனாவின் சுயசரிதை

தம்பி என்னைப் பார் நான் ஏன் இந்த மூலையில் கிடக்கிறேன்? ''என்னால் எந்த வித பயனும் இல்லையாம்''

இப்படிச் சொல்லித்தான் என்னை வைத்திருந்தவர் இந்த மூலையில் வீசி எறிந்தார்.

தம்பி நான் கொழும்பில் ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். என்னுடன் என்னைப் போன்று ஆயிரக்கணக்கான சகோதரர்களும் பிறந்தனர்.

எங்களை எல்லாம் அழகான பெட்டிகளில் அடுக்கி தொழிற்சாலையின் விற்பனைப் பிரிவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அங்கிருந்து ஒரு கடைக்கு அனுப்பி வைக்கப்பட்டோம். அந்தக் கடைக்காரன் எங்களை வெளியே எடுத்தான்.

அப்போது நான் விடுதலை ஆகிவிட்டேன் என்றும் என் விருப்பப்படி எங்கும் திரிந்து அழகான காட்சிகள் காணலாம் என்று கற்பனை பண்ணினேன்.

கடைக்காரன் என் மேலுள்ள தூசியைத் தட்டி மெருகேற்றி அழகாக அடுக்கி வைத்தான்,

ஆகா... என்ன அழகாக எல்லோர் கண்களிலும் படும்படியாக நான் கம்பீரமாக இருந்தேன்.

ஒரு நாள் சிறுவன் ஒருவன் பணம் கொடுத்து என்னை வாங்கினான்.

வாங்கியவன் மிகவும் ஆசையோடும் அன்போடும் தன் சட்டைப் பையினுள் வைத்துக் கொண்டான்.

அவனுக்கு புதிய பேனா கிடைத்ததில் பெருமை. எனக்குப் புதுவாழ்வு கிடைத்ததில் பெருமை

அவன் எங்கு சென்றாலும் என்னைத் தன் சட்டைப் பையில் வைக்கத் தவறுவதே இல்லை. தன் நண்பர்களிடம் என்னைக் காட்டி எனது அருமை பெருமைகளைக் கூறுவான்.

நானும் எனது எஜமானுக்கு கீழ்ப்படிந்து அவன் சொற்படி சரியாகவே நடப்பேன். அதில் நான் பெருமை அடைந்தேன்.

ஒரு நாள் அச்சிறுவன் மிக வேகமாக ஓடினான். ஓடிய வேகத்தில் என்னால் சட்டைப் பைக்குள் இருக்க முடியவில்லை. துள்ளி விழுந்தேன். எனது நாக்கு உடைந்துவிட்டது. என்னை எடுத்துப் பார்த்தான்.

எனது நிலைமையை அறிந்து கொண்டான். தூக்கி எறிந்தான்.

ஐயோ... தம்பி ..! என்னை இப்ப ஒருவரும் கவனிப்பதில்லை. அதனால் தான் உன்னைக் கூப்பிட்டேன் உன்னிடம் எனது சுமையை இறக்கி விட்டேன்.

நாக்கு உடைந்தபின் பேனாவின் வாழ்க்கையும் முடிந்து விடும் என்ற உண்மையை அறிந்துகொண்டேன்.

—இ. சதீஸ்குமார்—
ஆண்டு 7. E
K. H. C.

## விடுகதை

1. சுற்றுவது போலத் தெரியும் உண்மையில் சுற்றாது, அது என்ன?
2. உள்ளே சீனிக்கட்டு வெளியே நார்க்கட்டு அது என்ன?
3. கிள்ளலாம், கடிக்கலாம், இரத்தத்தைக் கீழே துப்பலாம் அது என்ன?
4. தரையில் தவளாதவள், தண்ணீரில் மிரளாதவள் அவள் யார்?
5. ராணி மகள் வெளிச்சமாய் இருப்பாள் அவள் யார்?
6. பூத்தபின் காய்க்கும், காய்த்தபின் பூக்கும் அது என்ன?

## விடைகள்

1. தலைச்சுற்று.
2. தேங்காய்.
3. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு.
4. மீன்.
5. விளக்கு.
6. பருத்தி.

தொகுப்பு:
கிருஷ்ணமகேந்திரலிங்கம்

## தெரிந்து கொள்ளுங்கள்

1. காளை மாடுச் சண்டையை தேசிய விளையாட்டாக கொண்டநாடு எது தெரியுமா?
– ஸ்பெயின்

2. லண்டனிலிருந்து வெளிவரும் 'லண்டன் டைம்ஸ்' எப்பொழுது முதலில் வெளியாகியது தெரியுமா?
–1785 ஆம் ஆண்டில்

3. முதன்முதலாக பேசும் படம் வெளியிடப்பட்டது எப்போது?
–1927 ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் திகதி

4. உயிரினங்களில் கண்களை மூடாமல் தூங்கும் உயிரினங்கள் எவைதெரியுமா?
–மீன்,பாம்பு [இவைகளுக்கு கண் இமைகள் இல்லை]

5. முதன்முதலாக பியானோவை அமைத்தவர் யார்?
–கிறிஸ்டோபோரி என்ற இத்தாலியர்.

தொகுப்பு:
செல்வி நா. சந்திரிக்கா
தொண்டமானாறு]




## கந்தன் கருணை பெறுவோம்

கோயிலுக்குப் போவோம்
கும்பிட்டு மகிழ்வோம்
ஆவின் பாலை எடுப்போம்
அபிஷேகமும் செய்வோம்!

பூக்கள் தேடிப் பறிப்போம்
பூஜை செய்யக் கொடுப்போம்
அப்பன் புகழ் பாடுவோம்
அவனருளைப் பெறுவோம்!

சேவல் கொடி பிடிப்போம்
சேர்ந்து நாமும் துதிப்போம்
காவடியும் எடுப்போம்
கந்தன் கருணை பெறுவோம்!

- குமார் தனபால் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படங்களில் ஆபாசம்!

அறிவு ஆக்கமும் தரும், அழிவும் தரும். அறிவியலும் அப்படித்தான்.

அறிவியல் சார்ந்த திரைப்படம் சில பயன்கள் தரினும், பல கேடுகளையும் தருகிறது. திரைப்படத்துறையின் செல்வாக்குப் பல துறைகளையும் பாழடித்து வருகிறது.

பல ஆண்டுகளாக கட்சிக்கு உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்துத் தொண்டாற்றி நலிந்தவன் அப்படியே இருந்து சாகிறான்; ஆனால் எவ்வித அரசியல் பணி



1950 இல் காதல்

யும் செய்தேயிராத நடிகன், திடீரென்று அரசியலில் ஈடுபட்டுத் தலைமை பெறுகிறான்.

**பத்திரிகை தரும் விளம்பரம்**

செய்திகளைத் தரவந்த இதழ்கள், நடிகர்களின் வாழ்க்கை பற்றிய செய்திகளைத் தருவதில் போட்டியிடுகின்றன.

நடிகனின் நகம் எவ்வளவு நீளம் என்பதிலிருந்து எந்த நடிகையின் பின்புறம் எப்படி என்பது வரை பொது அறிவு வினாக்கள் படங்களுடன் வருகின்றன.

கருத்துப் படத்தால் அன்றுட அரசியல், சமூகக் கருத்துக்களைப் பாமர மக்களுக்கும் பரப்பிய இதழ்கள் இன்று கவர்ச்சிப் படத்தால் அன்றுடப் புதுமுக நடிகைகளின் உடலழகைப் படித்த, படிக்



1988 இல் காதல்

காத அனைத்து மக்களிடமும் பரப்புகின்றன.

சல்விக்கூடங்களில், ஏன் பல்கலைக்கழகங்களிலும் நடிகர்களைப் பற்றிய வினாக்கள் இடம் பெறுகின்றன. பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும் அரசியல், சமயப் பேச்சாளர்களும் திரைப்படத்து ஆபாச நகைச்சுவைகளையும் நடிகர்களின் தனிவாழ்வுச் செய்திகளையும் பேசி வருகின்றனர்.

திருமண வீடுகளில் அதிகமாகத் திரைப்படப் பாடல்கள் ஒலித்தன. இப்போது அரசியல் மேடைகள், தமிழ் இலக்கியக் கூட்டங்கள், கல்விக் கூடங்கள், பேருந்து நிலையங்கள், தனியார் கடைகள் பேருந்துகள் ஆகியவற்றில் திரைப்படப்பாடல்கள் ஒலிக்கின்றன. கோயில்களில் திரைப்படப்பாடல்கள் ஒலிக்கப்படுவதோடு திரைப்படங்களும் திரையிடப்படுகின்றன.

வன்முறை, காமம், கொலை, சுற்பழிப்பு ஆகியவற்றை மிக எளிதாக நாடு முழுவதும் இவை பரப்பி வருகின்றபோது சாந்தியம், சட்டம், ஒழுங்கு, அறம், நேர்மை, குடும்பக்கட்டுப்பாடு பெண்கள் பாதுகாப்பு, பெண்கல்வி ஆகியவை தோல்வியடையவே செய்யும்.

காதலியைக் கொலைசெய்வது, பள்ளி மாணவன் மாணவியைக் காதலிப்பது, மனைவியை எரிப்பது, மக்கள் தொண்டரைக் கொலை செய்வது, காவல்துறையினரைக் கொல்வது, சட்டத்தின் கண்ணில் மிளகாய்ப் பொடி தூவுவது, கொள்ளையடிப்பது, வழிப்பறி செய்வது முதலியன திரைப்படங்களில் எளிதாகக் கற்றுத்தரப்படுகின்றன!

திரைப்படத்தில் ஆபாசம் களையப்படவேண்டிய ஒன்று. அதுகூட ஓரிரு நொடிகளில் மறையக்கூடிய, கொட்டகைக்குச் சென்று பார்க்கும் சிலரை மட்டுமே கெடுக்கும் காட்சி. அதனைச்சுவரொட்டிகள்மூலம் நிலையாகக் காணவைப்பது மிகவும் இழிவானதாகும்.

> திரைப்படங்களில் ஆபாசம் பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது. எழுதியவர்: இறையரசன்

சாலை விபத்துக்களுக்கு இவை முக்கிய காரணமாகின்றன. பாலுணர்வுக் காட்சிகளும், உடைகுறைந்த பெண் படங்களும் யாரும் குடும்பத்தோடு தெருவில் செல்லமுடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றன. வயதான பெரியவர்கள், மதிப்புக்குரிய அலுவலில் இருப்போர், திரைப்படம் பார்க்காதவர்கள், பெண்கள், கல்வி பயிலும் மாணவ மாணவிகள், வயதுக்கு வராதவர்கள், குழந்தைகள் என அனைவர் கண்ணிலும் இந்தக்காட்சிகள் படுகின்றன.

**எதிர்க்கவேண்டும்**

'யார் எப்படிப்போனால் என்ன? என்ற ஒதுங்கல் மனப்பான்மையும், 'நம்மால் என்ன செய்யமுடியும்? என்ற தாழ்வு மனப்பான்மையும் தீமைகளை வளர்க்கும் தீமைகளை எதிர்க்கும் திறனற்றவர்களாய் விருப்பமற்றவர்களாய், நாம் வாழ்ந்தால் எதிர்காலச் சமுதாயம், பண்பாடு, நாகரிகம் ஆகியவை அழியும். உடனடியாக இத்தீமைகளை அழிக்க நல்லமனம் படைத்தவர்கள் ஆவன செய்ய வேண்டும். ★

# அரசியல்வாதி பட இயக்குனராகலாம்! வலம்புரிஜான் எம். பி. கருத்து

பத்திரிகை ஆசிரியராகவும், மாநிலங்கள் அவை உறுப்பினராகவும் இருந்து வரும் வலம்புரி ஜான், இப்போது திரைப்பட இயக்குனராகவும் மாறி இருப்பது தெரிந்த செய்தியே!

'அது அந்தக் காலம்' என்ற பெயரில் அவர் கதைவசனம் எழுதி இயக்கிவரும் படத்தின் படப்பிடிப்பு ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தது. கிட்டத்தட்ட படம் முடிவடையும் நிலையில் காட்சிகளை மும்முரமாகப் படமாக்குவதில் வலம்புரி ஜான் ஈடுபட்டிருந்தார்.

மெல்ல அவரிடம் பத்திரிகை ஆசிரியர்... நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், இலக்கிய எழுத்தாளர், மேடைப் பேச்சாளர், இப்படி பல வேலைகளைக் கவனத்துக் கொண்டு இந்நிலையில் திரைப்பட இயக்குனராகவும் ஒரு புதுப்பணியை இழுத்துப் போட்டுக் கொண்டு உங்களால் எப்படி செயல்பட முடிகிறது?'

'இப்போது நீங்கள் குறிப்பிட்ட ஐந்து பணியுமே தனித்தனியான ஐந்து மாறுபட்ட வேலைகள் என்று எனக்குத் தோன்றவில்லை. என்னைப் பொறுத்தவரை இவை ஐந்து வித வேலைகளே அல்ல! ஒரே வேலை தான். ஏனெனில் பத்திரிகை, நாடாளுமன்றம், எழுத்து, பேச்சு, இயக்குதல் இவை அனைத்துமே நமது சிந்தனையின் ஒவ்வொரு விதமான வெளிப்பாடுதானே. நமது சிந்தனையை பத்திரிகையில் ஆலோசனையாகவும், நாடாளுமன்றத்தில் கேள்விகளாகவும், இலக்கியத்தில் கட்டுரையாகவும், மேடையில் பேச்சாகவும், இயக்கும்போது காட்சிகளாகவும் வெளிப்படுத்துகின்றோம். மற்றப்படி சிந்தனை ஒன்றுதானே. அதன்படி என் வேலையும் ஒன்றுதானே!'

என்று அவருக்கே உரிய பாணியில் வலம்புரி ஜான் புதிய விளக்கம் தந்தார்.

'சரி... நீங்கள் இதுவரை கட்டுரை, கவிதை, கதை என்று எழுதியிருக்கிறீர்கள். உரையாடல் எழுதும் அனுபவம் சமீப காலமாகத்தானே உங்களுக்கு இருக்கிறது. இந்தக் குறைந்த கால அனுபவத்தைக் கொண்டு சிறந்த முறையில் திரைப்பட உரையாடலை அமைக்க முடியும் என்று நம்புகிறீர்களா?' என்பது அடுத்த கேள்வி!

'நீங்கள் ஒன்றை மறந்துவிட்டீர்கள்! எனக்கு மேடை சொற்பொழிவில் சுமார் இருபது ஆண்டு அனுபவம் இருக்கிறது. தமிழக டில்லி மேலவைகளில் பேசிய அனுபவமும் உண்டு. பெரிய அறிஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்குகளில் உரை நிகழ்த்திய அனுபவமும் உண்டு. மேலும் பட்டணங்களில் இருந்து சிறு சிறு பட்டிகள் வரை பலவகையான மனிதர்களைப் பார்த்து, அவரவருக்குப் புரிகிற மாதிரியும், ஏற்றார் போலவும் பேசிய அனுபவங்களும் உண்டு. இதன் மூலம் எந்தெந்த மக்களுக்கு எது எதைச் சொல்ல வேண்டும்! எப்படி எப்படி சொல்ல வேண்டும் என்ற அனுபவ அறிவு எனக்கு நிறைய ஏற்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பலவிதமான மக்களின் ரசனைக்கேற்ப என்னால் உரை எழுத முடியும். மற்றத் திரைப்பட எழுத்தாளர்களுக்கு மக்கள் ரசனை என்பது ஒரு அனுமானம்! ஆனால் எனக்கோ அனுபவம்! அதனால் நான் உரையாடல் இலக்கியத்தில் சிறந்த சாதனை புரிவேன்' என்று மிகுந்த நம்பிக்கை தொனிக்கக் கூறினார் வலம்புரி ஜான்.

'சரி...... உங்களிடமுள்ள இயக்குனர் தகுதி பற்றி?' என்று இழுத்தபோது அவர் இடைமறித்துப் பேசலானார்.

'ஒரு பிரேமில் நாம் அடக்கிய காட்சியின் தன்மைக்கேற்ப பின்னணி இசை, வசனம், நிகழ்ச்சியின் தொடர்பு இவை எல்லாம் தானே ஒரு இயக்குனரின் திறமையைப் புலப்படுத்தும். இந்த அடிப்படை அறிவோடுதான் நான் ஒவ்வொரு காட்சியையும் படமாக்க முனைந்திருக்கிறேன். எனது சிந்தனையையும், தன்னம்பிக்கையையும் துணைகொண்டு நான் ஈடுபட்ட வேலைகள் எதிலும் இதுவரை தோற்றதில்லை!' என்று வலம்புரி ஜான் அழுத்தமாகக் கூறினார். (எ—4)

**சென்னையிலிருந்து தி. மேனகன்**

# துணுக்கு

திரை இசைத்துறையில், தனக்கென ஒரு பாணி அமைத்து ஆயிரக்கணக்கான திரைப்பாடல்கள் பாடி ரசிகர்களின் மனதில் நீங்காத இடம் பிடித்த ஏழிசை அரசர் டி. எம். சௌந்தரராஜன் அன்றைய திரை இசையைப் பற்றியும். இன்றைய திரை இசையைப் பற்றியும் மனம் திறந்து கருத்துத் தெரிவித்தார்.

வசதிகள் குறைவான அந்தக் காலத்தில் வனப்பான குரல் ஒன்றையே மூலதனமாக வைத்துப் பாடல்களை வளப்படுத்தினோம். நடிகர்களுக்கு ஏற்றவிதத்தில் குரலிலும் வேறுபாடுகளைக் காட்டிப் பாடல்களைப் பாடிக் காண்பித்தோம்.

இன்று இசைக்கருவிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பாடலைப் பாடும் பாடகனுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

இசைக்கருவிகளின் அளவுக்கு மீறிய இரைச்சலில் பாடகனின் குரல் கூட அடிபட்டுப்போகும் அவல நிலையைத்தான் இப்போது காண முடிகிறது.

இப்படி சௌந்தரராஜன் சொன்னார்.

★ ★ ★

சில இசை அமைப்பாளர்களின் இசை அமைப்பில் இசைக்கருவிகளின் ஆக்கிரமிப்பினால் பாடல் வரிகள் புலப்படுவதில்லை. நாம் என்ன பாட்டு எழுதினோம் என்பதே நமக்கு மறந்து போகிறது. நாலே நாலு இசைக்கருவிகளினால் பாடலைச் சிறப்படையச் செய்வதில்தான் இசை அமைப்பாளரின் திறமை இருக்கிறது. நாற்பது இசைக்கருவிகள் உபயோகித்து என்ன பயன்? பாடலைப் புரிய வைக்காத இசை ஓர் இசையா?

**'சிகப்புத்தாலி' படப் பாடல்கள் காஸட் வெளியீட்டு விழாவில் கவிஞர் வைரமுத்து.**

★ ★ ★

பராசக்தி படம் வெளியாவதற்குச் சில தினங்களுக்கு முன்பு சிவாஜி கணேசனுக்குத் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து உணவருந்தப் போகும் நேரம் லேட்டாக வந்தார் எம். ஜி. ஆர்.

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எம். ஜி. ஆரைப் பார்த்து சிவாஜி சொன்னார், 'அண்ணே இந்த கூட்டு, கோட்டு போட்டுக்கிட்டு ஏண்ணே அக்ட் பண்ணப் போறீங்க? கத்தி எடுத்தீங்கன்னு கை கொட்டி மக்கள் ரசிக்கும்போது'! எம். ஜி. ஆர். முகத்தில் மாறுதல் தெரிந்தது. விடை பெற்றுக் கொண்டு போகும்போது 'கணேசு என்னைப்பார்த்து என்ன கேட்டது பார்த்தீங்களா? ஊம் பார்க்கிறேன்' சிவாஜியின் வார்த்தைகள் எம். ஜி. ஆர். மனதில் ஆழமான சவாலுக்கு அஸ்திவாரமாக அமைந்தது.

தொகுப்பு: — ரஞ்சன் —

**வெள்ளித் திரையில்**

கையிலே கமரா ஏந்தி
காரிகை இவள் கண் சிமிட்டுவது ஏன்...?



கமராவைக் கையில் பிடித்து எவரும் படம் எடுக்கலாம்...

.... ஆனால் கலையம்சத்துடன் தரமான படம் பிடிப்பது என்பது ஒரு கலை. எல்லோராலும் அது முடியாது.

அது போலவே...

படச்சுருள்களைக் கழுவுதல், பிரதி செய்தல் என்பனவற்றையும் எல்லோராலும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும், தரமாகவும் செய்து தர முடியாது.

✶ உயர்ந்த தொழில் நுட்பத்துடனும், நுணுக்கத்துடனும் படச்சுருள்களை நவீன கம்பியூட்டர் மூலம், நேரில் பார்ப்பது போன்று மின்னும் தெளிவான கலர் போட்டோ பிரதிகளாக்கித் தருவதற்கும்-

✶ படச்சுருள்களை முற்றிலும் இலவசமாகக் கழுவுவதற்கும்-

✶ ஒரு பிரதிக்கு ரூபா 4-75 மட்டுமே செலுத்தி -

✶ மூன்று முதல் ஐந்து நாட்களில் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம்:

'ஷப்ரூ' 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா நாட்களிலும் படச்சுருள்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுஞ்செழியனின் புதிய இலக்கியம்:

# "உதிர்ந்த ரோமமும் உதிராத திமிரும்"

'நெஞ்சிலே நச்சுத் தேளைக் கொண்டிருக்கும் ஒரு கொடிய பெண்ணின் தடித்த நாக்கு' கொடுக்காக இருந்து, பிற நல்லவர்களை எப்பொழுதும் கொட்டிக் கொண்டே தான் இருக்கும்' என்றொரு பழமொழி, நமது நாட்டில் இருந்து வருகிறது:

அந்தப் பழமொழிக்கு நூற்றுக்கு நூறு, முழுக்க முழுக்க, அப்படியே எடுத்துக்காட்டாக இப்பொழுது இருந்து வருபவர் ஜெயலலிதா.

ஆறு ஆண்டுகாலம் மட்டுமே கழகத்தின் மேல்தட்டில் இடர்ப்படாமலிருந்து, இனிய போக்கில், அரசியல் நடத்தி வந்தார் என்ற ஒரு தகுதியைத் தவிர, வேறு அரசியல் இயக்கத் தலைவருக்கான எந்த ஒரு இன்றியமையாத் தகுதியையும் பெறுமல், இயங்கி வரும் ஜெயலலிதா, பொறிகலங்கி, நெறி மயங்கி, அறிவு அழிந்திட்டுக் கீழ்த்தரமான சொற்களாய் ஏசியிருப்பது, அந்த அம்மையாரின் தரம் எவ்வளவு கெட்டுப்போய்க் கிடக்கிறது என்பதைக் காட்டுவதாகும்.

அண்மைக் காலத்தில் அம்மையார் வாயிலிருந்து உதிர்ந்த ஏச்சு முத்துக்கள், 'குரைக்கின்ற தெருநாய்கள்', 'துரோகிகள்', 'நாதியற்றவர்கள்', 'பேடிகள்', 'எலிகள்', 'ஊழல் பேர்வழிகள்', 'காட்டிக் கொடுத்தவர்கள்'. 'சதிகாரர்கள்', பேசும் பேசுவோர்', 'உதிர்ந்த தலைமயிர்கள்' போன்றவையாகும்.

ஜெயலலிதா அம்மையாரின் தலைமேல் இருக்கின்ற 'மயிர்கள்' உதிர்ந்து கொண்டு தானிருக்கின்றன என்பதை, தெள்ளத் தெளிவாக ஊருக்கும், உலகத்திற்கும் அவர் உணர்த்தியுள்ளார்.

ஆனல், அவரது தலைக்குள்ளே இருக்கின்ற 'திமிர்கள்' இன்னமும் உதிராமல் தான் இருக்கின்றன என்பதை அவரது ஏச்சுக்களும், பேச்சுக்களும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

ஜெயலலிதா 'பேதை' 'பெதும்பை' பருவங்களையெல்லாம் விட்டு நகர்ந்து

> நால்வர் அணியை உதிர்ந்த ரோமங்களுக்கு ஜெயலலிதா ஒப்பிட்டுப் பேசியிருந்தார். அதனைப்பலமாகக் கண்டித்து 'உதிர்ந்த மயிரும் உதிராத திமிரும்' என்ற தலைப்பில் நெடுஞ்செழியன் வெளியிட்ட அறிக்கையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகிறது.

'அரிவை' 'தெரிவை' பருவங்களையெல்லாம் கடந்து, 'மங்கை' 'மடந்தை' பருவங்களையெல்லாம் தாண்டி, இன்றைய நிலையில், 'பேரிளம் பெண்', அம்மையார் பருவம் என்ற பெயரில் உலாவிக் கொண்டிருக்கிறர்.

ஒரு பெண்ணின் நாற்பது வயதிற்குள் முதல் ஆறு பருவங்களும் முடிவடைந்து விடுகின்றன. நாற்பது வயதுக்கு மேல், இறுதிப் பருவமான 'பேரிளம் பெண்' வந்து சேருகிறது. இந்தப் பருவத்தில் தான், ஒரு பேரிளம் பெண்ணிடம் அடக்கம், அமைதி, பொறுமை, பண்பு, மதிப்பு, மரியாதை போன்றவை உலகத்தாரால் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஜெயலலிதா இப்பொழுது இந்தப் பருவத்தில் தான் இருந்து கொண்டிருக்கிறர். தலையிலிருந்து தலைமயிர்களை உதிர்த்துக்கொண்டே இருப்பதைப்போல, இந்தப் பேரிளம் பெண் தம் நற்பண்புகள் அனைத்தையும் உதிர்த்துவிட்டு, எவரையும் தூக்கி எறியும் 'கொண்டிக் குதிரை'யின் தன்மையை ஒத்து, ஆட்டம் போட்டுக்கொண்டிருக்கிறர்.

தலையிலுள்ள மயிர்கள் தாமாக உதிர்ந்து விழுவதற்கும், அம்மையாரே, தம் தலைமயிர்களைப் பிடுங்கி, வீசி எறிவதற்கும் செயல் தன்மைகளிலே வேறுபாடு உண்டு.

மயிர்கள் தலையிலிருந்து தாமாகவே உதிருகின்றன என்றல், இதற்குக் காரணம் மயிர்களிடத்திலே காணப்படக்கூடிய குறைபாடாகும். அந்த அளவுக்கு மயிர்களின் அடிக்கால் பகுதிகள் வலிவற்று இருக்கின்றன என்று பொருள்.

அம்மையார் தலையிலிருந்து மயிர்கள் நான்கையோ அல்லது பலவற்றையோ பிடுங்கித் தூக்கி வீசி எறிகிறர் என்றல், அதற்குக் காரணம், அம்மையாருக்கு 'மனநோய்' மிகவும் முற்றி இருக்கிறது என்றுதான் பொருள்படும்.


ஜெயலலிதா

தலையிலுள்ள கூந்தல், மயிர்கள் உதிர்ந்து விழும்போதோ, அல்லது, உதிர்க்கப்படும் போதோ, எந்த ஒரு பெண்ணும் கவலைப்படுவதில்லை என்னும் கருத்துப்பட பெண்மைப் பண்பை அடியோடு மறந்து வாழும் ஜெயலலிதா, சொற்களை உதிர்த்திருக்கிறர்.

நீண்டு வளர்ந்த, அழகிய கூந்தலை உடைய பெண்கள், தம் தலையிலிருந்து மயிர்கள் உதிரத் தொடங்கினல், அதனல், தலையில் வழுக்கை விழுந்து விடுமோ, நாளடைவில் தலை மொட்டையாகி விடுமோ என்று வருந்தி, பெரும் கவலைக்கு ஆட்பட்டு மயிர் புளைப்பதற்கும் கூந்தல் வளர்வதற்கும் ஏற்ற தைலங்களைத் தடவி, தலை மயிர்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதைத்தான் பெரிதும், எங்கணும் பார்க்க முடியும்.

மைடுதலைச் செய்து கொண்டு, பெண்கள் கோயில்களுக்குச் சென்று, தம் அழகிய கூந்தல் மயிர்களை மொட்டையடித்து உதிர்க்கும் போதும், விதவை நிலை அடையும்போது பெண்கள் தம் கூந்தல் மயிர்கள் முழுவதையும் இழக்கும் போதும், தண்டனைக்குள்ளாகும் பெண்கள் தம் கூந்தல் மயிர்களை உதிர்க்க வேண்டிய நிலை ஏற்படும் போதும், துறவுக்கோலம் பூணும் பெண்கள் தம்கூந்தல் மயிர்களை இழக்கும்படி நேரிடும் போதும், அப்படிப்பட்ட பெண்கள் பெரிதும் கவலைக்கும் உள்ளாகத் தான் செய்கிறர்கள்.

ஆனல், தம் மானம்-மதிப்பு-மரியாதை-மாண்பு ஆகிய எதைப்பற்றியும் கவலைப்படாத அம்மையார் வேண்டுமானல், அவருடைய தலையிலிருந்து மயிர்களெல்லாம் உதிர்ந்து போவதைப் பற்றிக் கவலைப்படாமலிருக்கலாம்.

பெண்களின் உதிர்ந்த அல்லது உதிர்க்கப்பட்ட அழகிய கூந்தல் மயிர்களை எடுத்து, அவற்றிற்கு எண்ணெய் தடவி, 'இடிமயிர்' என்ற பெயராலும், 'பொய்முடி' என்ற பெயராலும், 'டோபா' என்ற பெயராலும் பெண்கள் பலர் தங்களை அலங்காரம் செய்து கொள்ளவே செய்கின்றனர். ஜெயலலிதா இதற்கு விதிவிலக்கு ஆகவே இல்லை. மேற்குறிப்பிட்ட 'உதிர்ந்த மயிர்களால் ஆன புனைமுடி'களைச் செல்வியார் தம் தலையில் வைத்துக்கொண்டு அவ்வப்போது 'இளிச்சவாயராகவே' (சிரித்தவாயாராகக்) காட்சியளித்திருக்கிறர் என்பது எல்லோர்க்கும் தெரியும். (எ-4)

## தமிழகத்திலிருந்து தி. மேனகன்

## வலை

கூரையின் உட்புறத்தில் இருந்த அந்தச் சிலந்தி அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து வலை பின்னியது. இதைப் பார்த்துக்கொண்டு நின்ற ஏனைய பூச்சிகள் எல்லாம் ஒன்று கூடி ஏதோ குசுகுசுத்தன, சிலந்திக்கும் பைத்தியம் பிடித்து விட்டதென அவை தீர்மானித்து அங்கு வராத பூச்சிகளுக்கும் தகவலைத் தெரியப்படுத்திச் சொல்லத் தொடங்கின.

## உருவகக் கதை

சிலந்திகள் வேலையை ஒழுங்காகச் செய்துவிட்டு எங்கோ மறைந்து கொண்டது.

சிலந்தியைக் காணப் பல பூச்சிகள் வந்து சேர்ந்தன.

சிலந்தியைக் காணவில்லை. வலை மட்டும் காற்றில் அசைந்தவாறு மின்னிக் கொண்டிருந்தது.

வலையின் பளபளப்பில் பூச்சிகள் மயங்கிப்போய், அந்த வலைக்குள் ஓடி விளையாட எண்ணிச் சென்று திரும்ப முடியாது தவித்துக் கொண்டிருந்தன.

எங்கோ ஒரு மூலையில் பார்த்துக்கொண்டிருந்த சிலந்தி தனது வலையில் வீழ்ந்த பூச்சிகளை உண்ணத் தொடங்கியது.

- வளவை வளவன் -




# முதலீடு செய்ய மகத்தான வாய்ப்பு...

கம்பனிப் பங்குகளில் முதலீடு செய்ய விரும்பும் இலங்கை மக்களுக்கு இதோ ஓர் உன்னத வாய்ப்பு.

சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பங்குகள் இப்பொழுது பொதுமக்களுக்குத் துரித கதியில் விற்பனையாகின்றன.

சீ.ரீ.சீ. ஈகிள் காப்புறுதிக்குப் பின்வரும் நன்கு பிரசித்தமான நிறுவனங்கள் பக்கபலமாக உள்ளன.

★ பிரதமபங்காளியான சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட் இலங்கையிலுள்ள மிகப் பெரிய, மிக லாபகரமாக இயங்கும் தனியார் நிறுவனங்களுள் ஒன்றகும். ஐக்கிய இராச்சியத்தின் ஈகிள் ஸ்டார் குரூப் வழங்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் சீ.ரீ.சீ. ஈகிள் நிறுவனத்தை அமைத்து நிதிச் சேவைகளிலும் காலெடுத்து வைத்துள்ளது.

★ இலங்கை கொமேர்ஷல் வங்கி லிமிட்டெட் இந்த நாட்டிலுள்ள மூன்றவது பெரிய சுதேச வங்கியாகும்.

★ ஜேம்ஸ் பின்லே அன்ட் கம்பனி (கொழும்பு)லிமிட்டெட் காப்புறுதித் துறையில் நிறைந்த அனுபவம் வாய்ந்தது.

★ பங்கு நிதிகளின் நிறுவன அமைப்பாகிய மூலதன அபிவிருத்தி – முதலீட்டுக் கம்பனி லிமிட்டெட் பின்வரும் பிரதான பங்காளிகளைக் கொண்டுள்ளது.
இலங்கை அரசாங்கம்
இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இலங்கை வங்கி
மக்கள் வங்கி

எமக்குத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்கும் ஈகிள் ஸ்டார் குரூப் ஐக்கிய இராச்சியத்தில் நிலைகொண்டுள்ள ஒரு மிகப் பெரிய காப்புறுதிக் கூட்டு நிறுவனமாகும். தற்கால வாழ்க்கைத் தேவைகளுக்கு உகந்த பொது மற்றும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களை ஏற்படுத்திய ஒப்பற்ற பெருமையும் அதனைச் சாரும்.

பங்கு விண்ணப்பப் படிவம் கிடைக்குமிடங்கள் :

★ சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
★ சிலோன் டுபாக்கோ கம்பனி, அதன் கிளைகள், களஞ்சியங்கள், பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள்.
★ இலங்கைக் கொமேர்ஷல் வங்கியும் அதன் கிளைகளும்
★ ஹட்டன் நஷனல் வங்கியும் அதன் கிளைகளும்
★ கொழும்பிலுள்ள பிரபல வங்கிகள்
★ பங்குத் தரகர்கள்

நீண்ட கால, இடைக்கால அடிப்படையில் மூலதனம் பெருக்கவும் சிறந்த இலாபம் பெறவும் இப்போதே விண்ணப்பிக்கவும்.

**ஒரு பங்கு ரூ. 10/– வீதம் 20 லட்சம் சாதாரண பங்குகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.**

பங்குப் பட்டியல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்.**
ஈகிள் ஹவுஸ் 75, குமாரன் ரத்னம் வீதி, கொழும்பு 2
தொலைபேசி : 21670/21679/80/81
ரெலெக்ஸ் : 22849 CTCE CE, ஃபக்ஸ் : 547620

JWT CEI 2671


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவா! உன்னைப் போற்றுகிறேன்

1. இறைவா எந்தன் ஆண்டவனே
நானே உன்னைத் தேடுவனே
வரண்டு காய்ந்து நீரற்று
காணும் நிலத்தில் நான்நின்று
உன்னைக் காணத் துடிக்கின்றேன்
இதய தாகம் எடுக்கின்றேன்

2. உந்தன் பலமாம் வல்லமையை
அத்தோ டுந்தன் மேன்மைதனை
பார்க்க உந்தன் சோயிலுக்குள்
போக வேண்டும் என்றெனக்குள்
ஆசை கொண்டு துடிக்கின்றேன்
அதனை உளத்தில் பதிக்கின்றேன்

3. உந்தன் அன்பும் ஆதரவும்
என்னில் இங்கே நின்றுலவும்
எந்தன் அரிய உயிரைவிட
எனக்குத் தருமே நன்மைபல
இறைவா உன்னைப் போற்றுகிறேன்
போற்றித் துதிகள் சாற்றுகிறேன்

4. எந்தன் வாழ்வு உள்ளவரை
இங்கு எந்தன் கைகள்தமை
உயர்த்தி உன்னைக் கும்பிடுவேன்
உனக்கே துதிகள் என்றிடுவேன்

5. அதனால் எனக்குத் திருப்திவரும்
உள்ளம் நன்றாய் நிரம்பிவிடும்
நல்லா னந்தக் களிப்பதனால்
உன்னைத் துதிப்பேன் விழிப்புறநான்

6. இறைவா எந்தன் மனம்நிறையும்
வண்ணம் உதவி அத்தனையும்
செய்தாய் எந்தன் விண்ணவனே
அவற்றை என்றும் மன்னவனே
எண்ணி இரவில் விழித்திருப்பேன்
படுக்கைப் பாயில் நினைத்திருப்பேன்

7. உந்தன் செட்டை நிழலின்கீழ்
இருக்கும் நான்உன் துணையொன்றால்
கொள்வேன் என்றும் பேரின்பம்
சொல்ல முடியா வானின்பம்

8. உன்னைப் பற்றிப் பிடிக்கின்றேன்
இதயத் தாலே பிடிக்கின்றேன்
நெருங்கி உந்தன் பின்னாலும்
வந்தே பிடிப்பேன் எந்நாளும்
உந்தன் வலது கரந்தானே
என்னைக் காக்கும் பலமாமே

9. என்னைக் கொல்லச் சதிசெய்தோர்
நரகக் குழிக்குப் பலியாவார்

10. கூர்மை வாளாம் பட்டயத்தால்
அவர்கள் வீழ்வார் நிச்சயமாய்
வீழ்ந்து அவர்கள் மாழ்வார்கள்
நரிகட் கிரையாய் ஆவார்கள்

11. மன்னன் நானே மகிழ்கொள்வேன்
இறையின் பெயரில் களிகூர்வேன்
அவரை நம்பும் உயிரெல்லாம்
பூரித் திடுமே உலகெல்லாம்
ஆனால் பொய்யர் வாயெல்லாம்
அடைக்கப் படுமாம் நாளெல்லாம்

வேதாகமம் சங்கீதம் 63.

கவிதை வடிவம்: நவாலியூர் சி. என். செல்லத்துரை

# கடவுளை எங்கெல்லாம் தேடி அலைகின்றோம்?

கஸ்தூரிமான் தனது தொப்பூழில் விளைவதுதான் கஸ்தூரி என்று அறியாமல் அதன் வாசனையால் ஈர்க்கப்பட்டு அதைத் தேடிக் காடு எங்கும் அலைவதுபோல் மனிதன் தன்னுள்ளேயே இருக்கும் தெய்வாம்சத்தை உணரத்தெரியாமல் எங்கெங்கோ கடவுளைத் தேடி அலைகின்றான்.

கிருஷ்ண பக்தர் ஒருவர் பகவானைத்தேடி க்ஷேத்திரம் க்ஷேத்திரமாக அலைந்து திரிந்தாராம். பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தனம், துவாரகா, மதுரா என்று எங்கெல்லாமோ திரிந்து விட்டு விரக்தியுடன் வீடுவந்து சேர்ந்தார். அப்போது அவருள்ளே இருந்து ஒரு குரல் கேட்டது. 'அன்பனே, நான் இங்கேயே உன் இருதயத்திலேயே இருக்கின்றேன். நீயோ என்னை வேறெங்கெல்லாமோ தேடுகிறாயே' என்றது அக்குரல்.

கீதையில் பகவான் இவ்வாறு கூறுகிறார். 'உள்ளது ஒன்றே என்று உறுதிகொண்டு, எல்லா உயிர்களிலுமிருக்கின்ற என்னைப்போற்றும் யோகி எப்பாங்கில் இருப்பினும் என்னிடத்து இருப்பவன் ஆகிறான்.' (அத்: 6-சு.31)

'பரம்பொருள் ஒன்றே என்ற உண்மையான ஞானம் வாய்த்தவன் இறைவன் வெகு தூரத்தில் இருப்பதாகக் காண்பதில்லை. 'அவன்'என்று எட்ட இருப்பதுபோல் அல்லாது 'இது' என்று இங்கே அவனுடைய உள்ளத்திலேயே இருப்பதாக அவன் உணர்கிறான். இறைவன் எல்லாரிடத்திலும் இருக்கிறான். ஆகவே, தேடுபவர்களுடைய காட்சிக்கு அவர்களிடமே அவன்தென்படுகிறான்,' என்று இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அருளினார்.

'ஊனுக்குள் நீ நின்று உலாவினதைக் கண்டிடல் நானென்றிருந்து நலனிழந்தேன் பூரணமே'' என்று பட்டினத்தடிகள் புலம்பினார்கள்.

'நான்', 'எனது' என்ற தன் முனைப்புகளை அழித்து எல்லாம் அவன் செயல் என்று தீர்க்கமாக நம்பும் நிலையை நாம் எய்தும்பொழுது பரமாத்மனின் பிரகாசத்தை எமக்குள்ளேயே உணரலாம் என்று கூறப்படுகிறது.

**- அ. குமரகுரு -**

இயேசுபெருமான் 'கடவுளின் இராச்சியம் உங்கள் உள்ளேயே இருக்கிறது' என்று பகர்ந்தார்.

இஸ்லாமுக்கும் இந்துசமயத்துக்கும் பாலமாய் விளங்கிய மகான் கபீர், 'கிழக்கே காசி, மேற்கே மெக்கா, உன் இருதயத்தே இராமனையும் அல்லாவையும் ஒன்றாகக் காண்பாய்' என்று அறைகூவினார்.

குளத்துநீரின் மேற்பரப்பில் படர்ந்துள்ள பாசியையும் தூசியையும் விலக்கியவுடன் நிர்மலமாக உள்ளே அடித்தளம் தெரிவதுபோல், மனத்திலுள்ள அழுக்குகளைப் படிப்படியாக நீக்கிவர பரம்பொருளின் பேரொளியை எம்முள்ளேயே உணரலாம்.

உலகெங்கும் வியாபித்திருக்கும் ஒளி சூரியனில் இருந்து வருவதுபோல் எல்லாஜீவராசிகளிலும் சூட்சுமமாக இருந்து வரும் பிரக்ஞை (Consciousness) பரமாத்மனின் பரிசுத்த உணர்வில் இருந்தே வருவது. இதையே தாயுமானவர், 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே, தேஜோமய ஆனந்தமே' என்று அழுதுவிழுது தொழுது வழுத்தினர். ★

# எண்ணங்களே காரியங்கள் ஆகின்றன காரியங்களே அனுபவங்களை சேகரிக்கின்றன

ஒரு பையனைத் தந்தை கேட்டார்:

'தம்பி! மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?'

பையன் சொன்னான்:

'அது ஆச்சரியமில்லை, அப்பா; தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்துக் குழம்பாகிறதே, அதுதான் ஆச்சரியம்!'

இறைவா! மனிதனுக்கு நீ எண்ணங்களை வைத்ததில் ஆச்சரியமில்லை. அந்த எண்ணங்களிலேயே அவன் வெந்து வெந்து அழிகிறானே, அது தான் ஆச்சரியம்!

எண்ணங்களே காரியங்கள் ஆகின்றன! காரியங்களே அனுபவங்களைச் சேகரிக்கின்றன. நிகழ்ச்சிக்குப் பின்னாலும் நினைவுகள், விளைவுக்குப் பின்னாலும் விளக்கங்கள்.

நீயே ராமாவதாரத்தில், பொய்மான் எது? உண்மைமான் எது?—என்று தெரியாமல் சீதையைப் பறிகொடுத்தாய்,

கற்பின் செல்வி அகலிகை —உண்மைக்கணவன்,போலிக் கணவன் என்றபேதம் தெரியாமல் கற்பைப் பறிகொடுத்தாள்.

சூதாடியபின் புத்திபெற்ற தருமன்; சூதாட்டத்திலேயே உதவிக்கு வராமல், காரியங்களை முற்றவிட்டு, பாண்டவர்களைக் காடுபோகவைத்து, பாஞ்சாலியைத் துகில் இழக்க விட்டு, போர்க்களத்தில் வெற்றிதேடித்தந்த உன் கிருஷ்ண அவதாரம்;


சீதையைச் சிறையெடுத்த பின்னரே, முறையறிந்த இராவணன்;

தாசிவீடு சென்று ஆடிக்களித்த பின்பே, தன்புத்திக்கு மீண்டகோவலன்;

—அனுபவம் எத்தனை பேருடைய படங்களைத் தன் மாளிகையில் மாட்டி வைத்திருக்கிறது.

அனுபவங்களைக் கொள்முதல் செய்வதில் அவதாரங்களே தப்பவில்லை என்றால், மனிதர்கள் எம்மாத்திரம்?

உபநிடதக் கதைகள் எல்லாம் அனுபவத்தின் மகிமையைக்கூறும் ஓவியங்கள் அல்லவா?



**- கவிஞர் கண்ணதாசன் -**

எண்ணங்கள் எப்பொழுதுமே சீரான வழியில் சென்றால் அனுபவங்கள் இல்லை என்றால், மனிதன் வெறும் ஜடம்.

ஆகவேதான், எண்ணங்களில் நொந்து நொந்து அவன் அனுபவங்களைப் பெற வேண்டும் என்பது உன் ஆணை போலும்!

பிறரது அனுபவங்களில் இருந்து பாடம் பெற்ற பிறகாவது, சுயதரிசனம் பூர்த்தி ஆகிவிடுகிறதா?

இல்லை! சுயமாகவும் கொள்முதல் செய்ய வேண்டும்:

முனிவனுக்குத் தன் மனைவி அகலிகை மீது ஏற்பட்டு இருந்த சந்தேகத்தைத் தீர்த்து வைத்த ராமன், உத்தரகாண்டத்தில் தன்மனைவியின் மீதே சந்தேகப்படவில்லையா?

கோபியர்களின் சேலைகளை மறைத்து வைத்து விளையாடிய கோபாலன், அதே சேலையைப் பாஞ்சாலி இழந்தபோது பதறவில்லையா?


'சுயதரிசனம்' என்பது அவதாரங்களுக்கும் தேவைப்பட்டது. அனுபவங்களைக் கொள்முதல் செய்ததன் மூலமே அது நிறைவேறியது.

நெய்யையே ஆகாரமாகக் கொண்ட எறும்பு அந்த நெய்யிலே விழுந்துவிட்டால், அதற்கு அதுவே மரணப்படுக்கை ஆகிவிடுகிறது.

தேனையே உணவாகக் கொண்ட தேனீ, தேன் குடத்தில்விழுந்துவிட்டால்,அதுவே அதன் சமாதி ஆகி விடுகிறது.

ஆகவே, அனுபவங்கள் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுகின்றனவே அன்றி, அவை புதிய அனுபவங்களாக இல்லை. ★

## சொற்சிலம்பம்



போட்டி இல. 87

சொற்சிலம்பம் இல: 87
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 21-9-1988**

**இடமிருந்து வலம்**

1. பனை, 6. நடனத்தின் ஒரு பிரிவு (மாறியுள்ளது) 7. அஹிம்சாவாதி (குழம்பிய நிலையில்), 8. யுகங்களில் ஒன்று (மாறி நிற்கிறது), 9. இப்படிக் கனவும் உண்டு, 11. அன்பு, 12 யாழ்ப்பாணத்தில் இது அதிகம், 13. ஊதியம் (குழம்பியுள்ளது), 15. நிலை, 16. 'கழி' சேர்ந்தால் மாதத்தின் பெயர், 17, 'தை' சேர்ந்தால் ஒரு பறவை 20. பிரணவ மந்திரம் (மாறிவருகிறது), 21. பாதுகாப்புச் சாதனம் (மாறி நிற்கிறது), 22. கண் தெரியாதவன் (குழம்பி நிற்கிறான்).

**மேலிருந்து கீழ்**

1. வாழை இனம், 2. ......சசடற (ஒழுங்குபடுத்தவும்), 3. 'ல்' சேர்ந்தால் வெளிச்சம்; 4. பதற்றம் — இறுதி எழுத்து இல்லை (மாறிவரும்), 5. சிலருக்கு இது அதிகம், 7. மனித உறுப்பு, 10. வீடு கட்டத் தேவை, 11. காவிரிப்பூம்பட்டினம் (குழம்பி நிற்கிறது), 12. கணவன், 14. பார்வதி, 15. முருகன், 18. படகோட்டி (மாறி வருகிறான்), 19. வனம், 20. கார் 'ஹோர்ன்' ஒலி (மாறி வருகிறது)

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பிபவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# திருமண அழைப்பை ஏற்கலாமா?




திருமண வைபவங்களுக்குப் போய்வருவதைப் போன்ற தலைவேதனை விவரிக்கமுடியாது. இதில் எனக்கு நேரும் சங்கடங்களை ஏழாக வகைப்படுத்தலாம்.

''யாரடா இந்த வினைதப் பிறவி?'' என்று என்னைப் பற்றி நினைக்கின்றீர்களா? தர்க்க ரீதியான எனது காரணங்களை கொஞ்சம் விபரமாகக் கூறினால் புரிந்துகொள்வீர்கள்.

முதலாவதாக எனது மனைவி புறப்பட எடுக்கும் நேரம். பல நகைகள் பூட்டி, கொண்டைபோட்டு, உடை உடுக்க இரண்டு மணிக்கு மேல் எடுக்கும். அதற்குள் எனக்கு பல அழைப்புகள்.

''இங்கேருங்கோ கிளையப் பெற்ற சாறியை அணிகிறேன். ரேசாப்பு பிடுங்கி வாருங்கோ.''

''சரி இதோ! இலைகளுடன் வாடாத ரோசா''

''இது என் சாறிக்கு மாய்ச் பண்ணுமா; பிங்கலர் பிளீஸ்''

''சொறி டார்லிங் — இதோ கொண்டு வந்துவிட்டேன்.''

''கோபிக்காதேங்கோ, கொஞ்ச எவகிறீன் எடுத்து வாருங்கோ''

''கொண்டையில் கவனமாகக் குத்திவிடுங்கோ''

''நல்ல கொண்டை, ஸ்கூட்டர் எக்ஸ்ராவில் மாதிரி இருக்கு''

''பகிடி வேண்டாம். நான் எப்படி வடிவே டார்லிங்.''

''ஐயோ, பழைய நினைவுகளை ஏற்படுத்தாதீர், வாரும்''

அப்பாடா ஒரு வழியாக மனைவி புறப்பட்டுவிட்டார். ஹெல்மெற் மனைவியின் தலைக்குப் போடமுடியாதே. நேரம் போதமையினால் புறப்பட்டோம் எனது பழைய மோட்டார் சைக்கிளில் விரைவாகப் போவதற்கு ஒரு பிடி பிடித்தேன். சந்தியில் பொலிஸ்! சைக்கிளை ஒரு வெட்டு வெட்டித் திருப்பினேன்.

ஒரு ஒழுங்கை ஊடாகச் சென்றோம். மனைவியின் லக்ரோ கலமைன் பூசிய முகத்துக்கு செம்மண் புழுதி பரவத் தவறவில்லை. மனைவியின் கோபமும், போட்ட சத்தமும் மோட்டார் சைக்கிள் போட்ட சத்தத்தில் அதிகம். எனது காதில் விழவில்லை. நேரத்துக்கு சென்று விட்டோம் என்ற திருப்தி.

மூன்றாவதாக செருப்பு பற்றிய விடயம். கல்யாண வீட்டிற்கு வெறுங்காலோடு போகலாமா? எல்லோரும் காட்டு மிராண்டியைப் பார்ப்பது போல் வெறித்துப் பார்ப்பார்களே! அழகாக அலங்காரம் செய்த பந்தலுக்குள் செருப்போடு போகமுடியாது.

செருப்புகள் ஒரு புறமாகக் குவிக்கப்பட்டிருந்தன. கும்பலோடு கோவிந்தாகோ என்று செருப்பைப் போடுவதா. அதுவும் அந்த செருப்பை சமீபத்தில் தான் 199 ரூபாவுக்கு வாங்கியிருந்தேன். ஒரு கரையில் செருப்பை பதுக்கினேன். திரும்பத் திரும்ப அந்த மூலையை மறந்துவிடாமல் தியானம் செய்துகொண்டிருந்தேன்.

முகூர்த்தம் நடக்கும்போது இனிய நாதஸ்வர இசையை ரசிப்பதா இந்த மனம்? 'ஐயோ செருப்பு, புதுச் செருப்பு' என்றே மனம் கூறிக்கொண்டிருந்தது. போய்ப் பார்க்கலாமா என்று எண்ணினேன்: முடிகிற காரியமா அது. எனக்கும் வாசலுக்கும் இடையில் நூற்றுக்கணக்கான தலைகள். சிறிது நேரம் அடங்கியிருந்தேன்.

மணமகன், மணமகள் கழுத்தில் தாலியைக் கட்ட எழுந்தார். குருக்கள் மந்திரங்களை ஓதி 'ஆகட்டும்' என்று தலையை அசைத்துக் காண்பித்தார். நானும் வாழ்த்துவதற்கு தயாராகி நின்றேன். ஆனால் வீடியோ படம்பிடிப்பவன் ஆயத்தமில்லை என்பதற்காக மணமகன் தாலிக்கொடியைப் பிடித்துக் கொண்டு நின்ற காட்சி எனது மனதை மேலும் குழப்பியது.

தாலி கழுத்தில் ஏறியதும் ஸ்பிறிங் வைத்த பொம்மை மாதிரிக் குதித்தெழுந்து கூட்டத்தை முழங்கையால் இடித்து விலக்கிக்கொண்டு போய்ப்பார்த்தால், அடகடவுளே, என் செருப்புகளில் ஒன்றே ஒன்று தான் இருந்தது.

செருப்புக்குவியலை உற்றுப் பார்த்தேன். எனது திருட்டு விழியைப்பார்த்த சிலர் 'என்ன சங்கதி' என்று விசாரிப்பதுபோல் என்னை முறைத்துப்பார்த்தார்கள்.

அடுத்தது இடப்பிரச்சினை. இப்போது சிக்கனமாக நடத்துவதற்கு சிறியசொட்டசைப் பந்தல்களை குறுகிய இடைவெளியுள்ள முற்றத்தில் அமைத்து விடுவார்கள். ஆனால் அதிகநபர்களை அழைக்கத் தவறமாட்டார்கள். இது நாகரிகமாகிவிட்டது. எங்கள் கிராமத்தில் கல்யாண அழைப்புவந்தால் போயாக வேண்டுமென்ற சம்பிரதாயம் உண்டு.

**— கோண்டாவிலூர் பூ. க. இராசரத்தினம் —**

உட்கார ஓர் இடத்தை நானே முனைந்துதேடிக்கொண்டேன். முகூர்த்தம் நடக்கின்ற பந்தலின் வாசலில் நின்று கொண்டேன். உள்ளே புளி மூட்டைபோல் பிதுங்கிக் கொண்டிருக்கிற கூட்டத்தை மலைப்புடன் பார்த்தேன். என்னை விவாகத்துக்கு அழைத்தவர் மணமகனுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார்.

என்னைக் கண்டுவிட்டார். தனக்கு அருகிலிருந்த காலி இடத்துக்கு அழைத்தார். பல கால் விரல்களை நசுக்கிக் கொண்டு, பல தலைகளைப் பிடித்து அசைத்துக்கொண்டு, பலர் மடியில் தவறி விழுந்தெழுந்து சென்றேன். ஆனால் அங்கும் நிற்கத்தான் இடம் கிடைத்தது. இந்தத்தொல்லைகளிலிருந்து வீடுபோய்ச் சேரலாமென எண்ணினேன். வீட்டுச்சாவி என்னிடமில்லை.

மனைவியை எப்படிக் கூப்பிடுவது என்பது அடுத்த பிரச்சினையாக இருந்தது. பெண்கள் மத்தியில் உட்கார்ந்திருந்தவளைக் கூப்பிடுவதற்கு முயன்றேன். அவளுடைய முதுகு தெரிந்தது. ஒரு பையனைக் கூப்பிட்டேன், என் மனைவியின் அடையாளங்களைச் சொல்லி, சுட்டிக் காண்பித்து அழைத்து வரும்படி ஏவினேன். பரபரப்போடு காத்திருந்தேன்.

சில நிமிடங்கள் சென்றபின் நான் ஜன்மத்தில் பார்த்திராத யாரோ ஒரு புது அம்மணி என் முன் வந்து நின்றாள். அங்க அசைவுகளெல்லாம் நான் சொன்னபடி என் மனைவியைப் போலவே இருந்தன. அந்தப் பெண்ணுக்கும்.

'என்னை யார் என்று நினைத்தீங்க. நான் கல்வி அதிகாரி கனகசபையின் அன்பு மனைவி' என்று முழங்கினாள். அந்த விசித்திரமான பெண்மணியிடம் மன்னிப்புக் கேட்டேன்.

அடுத்தது உதைபந்தின் அனுபவம். 'சாப்பிட வாருங்கள்' அழைப்புக் கிடைத்தது. சாப்பாட்டு நேரமானபடியால் ஒரு பிடி பிடிக்கலாமென்று கையும் கழுவாமல் இடித்தடித்துக் [illegible] இடம். [illegible]யில் இடமில்லை.

'அடுத்த சபைக்கு வாருங்கள்' என்று ஒரு உரத்தகுரல். கல்யாண வீட்டிற்குச் சென்று சாப்பாட்டுக்கு இடம் கிடைக்காமல் திரும்பி வரமுயலும் ஒவ்வொருவருக்கும் நான் சொல்வது என்ன என்பது சுய அனுபவத்திலே தெரிந்திருக்கும்.

சிலர் உள்ளே போகும்படி கூறுவார்கள். சிலர் நம்மை வெளியே துரத்துவார்கள்: வீட்டுக்கு மட்டும் போகவிட மாட்டார்கள். இதுதான் உதைபந்தின் அனுபவம்.

சிறிது நேரம் அமரலாம் என ஆசனங்கள் போடப்பட்ட பகுதிக்குச் சென்றால் அங்கே எனது பாடசாலை அதிபர் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

கலியாணவீடு செல்லுவதற்கு லீவு கொடுக்கவே மாட்டார். நான் மருத்துவமனைக்கு மனைவியைப் பிரசவம் சம்பந்தமான பரிசோதனைக்குக் கூட்டிச் செல்வதாகப் பொய் சொல்லி லீவு எடுத்தேன். அவர் கண்ணில் படாமல் மறைந்தேன்.

வெளியே போய்த் தொலையலாமென்று நானே எனது மனைவிக்கு சைகை காண்பிக்க முடியவில்லை, அவளோ தன் முதுகைக் காண்பித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். என் சைகைகள் அவள் கண்களில் படக்கூடியதாக இருக்கவில்லை.

தவிர அவளுக்கு நான் செய்யும் சைகைகள் வேறு பெண்மணிகளும், அவர்களுடைய கணவர்களும் கண்டுவிட்டால் விபரீதமாக எண்ணிவிடக் கூடும் என்ற பயத்தால் அப்படிச் செய்ய முடியவில்லை.

அழைப்புகளை, அதிலும் திருமண அழைப்புகளை உற்சாகத்தோடு நாம் ஏற்கலாமா என்பது பலருக்கும் இப்போது புரிந்திருக்கும்.

இதற்காக உங்கள் வீட்டில் திருமணவிழா இடம்பெற்றால் அழைப்பிதழ் அனுப்ப மறந்துவிடாதீர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை
17-09-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

# பர்மிய அரசியலில் மீண்டும் ஊ நூ:
# எதிர்ப்புச் சக்திகளுக்கு அடிபணியும் நிலையில் ஆட்சியாளர்

பர்மாவின் புதிய தலைவர் டாக்டர் மொங்மொங்கினால் (Dr. Maung Maung) தெரிவிக்கப்பட்ட ஆகப்பிந்திய சமரச யோசனைகளை எதிர்க்கட்சிகள் நிராகரித்ததை அடுத்து பர்மாவில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் வேலை நிறுத்தங்களும் தொடர்கின்றன.

தினமும் லட்சக்கணக்கான மக்கள் வீதிகளுக்கு வந்து அரசாங்கத்துக்கு எதிரான தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர்.

1986 தேர்தலின் பின்பு பிலிப்பீன்ஸில் பேர்டினன்ட் மார்க்கோஸ் அதிகாரத்தில் இருந்து இறங்க மறுத்த போது திருமதி கொரேசன் அக்கினோவுக்கு ஆதரவாக மக்கள் சக்தி எப்படி வீதிகளில் திரண்டதோ அதே போன்ற ஒரு நிலைமை இன்று எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக பர்மிய நகரங்களில் இருந்து வருகிறது.

### நிலைமை மோசம்

1948 ஆம் ஆண்டு பிரிட்டனிடம் இருந்து பர்மா சுதந்திரம் பெற்ற பின்பு இடம் பெறும் பெருமோசமான கலவரங்களாகத் தற்போதைய கலவரங்கள் கருதப்படுகின்றன.

இதுவரை ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டங்களில் அரசாங்க ஊழியர்களும் படையினரில் சில பிரிவினரும் கலந்து கொண்டுள்ளனர் என்று ரங்கூனில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது பதவியில் இருக்கும் மொங்மொங் அரசு தனது கட்டுப்பாட்டை முழு அளவில் இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் வீழ்ச்சி நெருங்குவதை அடுத்து அரசுக்கு எதிரான சக்திகள் அனைத்தும் ஒன்று திரள ஆரம்பித்துள்ளன.

இதுவரை அமெரிக்காவில் இயங்கி வந்த ஜெனரல் நீவின் அரசுக்கு எதிரான போட்டிப் பர்மிய இயக்கம் ஒன்று தனது தலைமையகத்தை எல்லையில் உள்ள தாய்லாந்துக்கு மாற்றிக் கொண்டுள்ளது.

பர்மாவின் முதலாவது பிரதமரும் முன்னாள் பிரதமருமான ஊ நூ தலைமையில் ஜனநாயகத்துக்கும் சமாதானத்




துக்குமான லீக் என்ற பெயரில் (Leage for Democracy and Peace) புதிய ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி டாக்டர் மொங்மொங் பர்மிய நாடாளுமன்றத்தில் தெரிவித்த புதிய யோசனைகளே தற்போது எதிர்க்கட்சிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சிகளின் முக்கிய கோரிக்கையான பல கட்சி நாடாளுமன்ற முறை ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் மூன்றுமாத காலத்தில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று டாக்டர் மொங்மொங் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் இதனையும் நிராகரித்து இடைக்கால அரசு ஒன்று உடனடியாக நிறுவப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

இடைக்கால அரசின் கீழ் நடைபெறும் பொதுத்தேர்தலே நீதியானதாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

### 18 நாள் மட்டும் பதவி நீடிப்பு

கடந்த ஜூலை 23 ஆம் திகதி ஜெனரல் நீவின் பதவி துறந்த பின்பு கடும்போக்குடைய தனது சகாவான சீன் லுவின் (Sien Lwin) என்பவரைத் தலைவராக நியமித்திருந்தார்.

எதிர்க்கட்சிகளினால் "பர்மாவின் ஹிட்லர்" என்று அழைக்கப்படுபவர் சீன் லுவின். கடந்த காலங்களில் ஜெனரல் நீவினின் கலகத் தடுப்புப் பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்து நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்.

சீன் லுவின் பதவிக்கு வந்ததும் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார். ஜெனரல் நீவினுடன் கடந்த காலங்களில் அதிருப்தி கொண்டிருந்த ஜெனரல் ஓங்கி (Aung Gyi) என்பவரைக் கைது செய்ய உத்தரவிட்டார்.

70 வயதுடைய ஜெனரல் ஓங்கி பர்மாவில் பெரும் மதிப்புடைய ஒருவராகக் கருதப்பட்டு வருகிறார். பர்மா பிரிட்டனின் கீழ் இருந்த போதும் பின்னர் இரண்டாம் உலக மகாயுத்தகாலத்தில் பர்மாவை ஜப்பான் தனது காலனித்துவ நாடாக மாற்ற முயன்றபோதும் அவற்றுக்கு எதிராகப் போராடியவர்.

1962 ஆம் ஆண்டு ஜெனரல் நீவின் புரட்சி மூலம் பர்மாவில் ஆட்சியைக் கைப்பற்றிய சமயம் அதில் முக்கிய பங்கு வகித்தவர்.

ஆனால் ஜெனரல் நீவினின் சோஷலிசக் கொள்கையில் வெறுப்புண்டு ஒரு வருட காலத்தில் அதாவது 1963ஆம் ஆண்டு அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார்.

இவர் கைது செய்யப்பட்ட சம்பவம், இராணுவச்சட்டப் பிரகடனம் ஆகியவை பர்மாவில் கலவரங்களுக்கு மேலும் தூபமிட்டன.

உலக உலா
என்.பி.சீலன்

கலவரங்கள் மிகவும் மோசமடைந்ததை அடுத்து சீன் லுவின் பதவி இழந்தார். 18 தினங்களே அவர் பதவியில் இருக்க முடிந்தது.

### மொங் மொங்

அவருக்குப் பின்பே தற்போதைய தலைவர் டாக்டர் மொங்மொங் நியமிக்கப்பட்டார்.

டாக்டர் மொங்மொங் பதவிக்கு வந்தவுடன் ஆகஸ்ட் 24 ஆம் திகதி இராணுவச்சட்டத்தை நீக்கினார். சிறைகளில் இருந்த அரச எதிர்ப்பாளர்களில் 2700 பேரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

செப்டம்பர் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் விஷேச கூட்டம் கூட்டப்பட்டு பல கட்சி அரசியல் பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் அதற்கு மக்களின் அங்கீகாரம் பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

கடந்த 12ஆம் திகதி நடந்த நாடாளுமன்றத்தின் விஷேச கூட்டத்திலேயே 3 மாதத்தில் பல கட்சி முறையின் கீழ் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் நடைபெறும்வரை ஆட்சியை இடைக்கால அரசு ஒன்றிடம் ஒப்படைக்கக்கோரி [illegible] நடைபெற்று வருகிறது.

அரச எதிர்ப்புச் சக்திகளின் கைபெரும் அளவு ஓங்கி இருப்பதால் இந்தப் போராட்டமும் வெற்றிபெறும் என்றே கருதப்படுகிறது.

அதே சமயம் இராணுவப் புரட்சி ஒன்று ஏற்படும் சாத்தியங்களும் இருந்து வருவதாக பர்மாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும் — எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலான தற்போதைய மோதலுக்கு தீர்வு ஏற்படாத நிலையில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுமானால் மீண்டும் 1962 நீவின் ஆட்சிக்கே நாடு இட்டுச் செல்லப்படும் என்று அஞ்சப்படுகிறது.

### மோசமான பொருளாதார வீழ்ச்சி

பிரதமர் ஊ நூவை புரட்சி மூலம் பதவி நீக்கம் செய்து விட்டு 1962 இல் ஆட்சியைக் கைப்பற்றிய ஜெனரல் நீவினின் பொருளாதாரக் கொள்கைகளே பர்மாவின் இன்றைய வங்குரோத்து நிலைமைக்குக் காரணம். நீவினின் சோஷலிச - பௌத்த - இராணுவ மய கொள்கை 26 வருடங்களின் பின்பு பர்மாவை இன்று அழிவின் விளிம்புக்குத் தள்ளிவிட்டுள்ளது.

பர்மா ஒரு காலத்தில் அரிசியை ஏற்றுமதி செய்துவந்தது. எண்ணெய், இரத்தினக்கல், மரம் (பிரதானமாக தேக்கு) மூலம் பெரும் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கி வந்தது. ஆனால் இன்று அரிசியை இறக்குமதி செய்யும் நிலையில் பர்மா இருந்து வருகிறது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் நாளுக்கு 31 ஆயிரம் பீப்பாவாக இருந்த எண்ணெய் உற்பத்தி தற்போது 18 ஆயிரம் பீப்பாக்களாக வீழ்ச்சி அடைந்து எண்ணெய்யையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பர்மிய ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் தற்போது இல்லை. தொழிற்சாலைகளின் உற்பத்தி 30 சதவீத நிலையிலேயே இருந்து வருகிறது. நாணய நோட்டுக்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். இதனால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருளான நெல்லை அரசுக்கு விற்க மறுக்கின்றனர். அரச களஞ்சியங்கள் வெறுமை அடைய இதுவே காரணம்.

பணவீக்கத்தைத் தடுத்து நிறுத்த ஜெனரல் நீவின் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் புதிய திட்டம் ஒன்றைச் செயற்படுத்தினார். அதுவே அவரது வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

பர்மாவில் மதிப்புக் கூடிய நோட்டுக்களான 25-35-75 கெயட் (Kyat) நோட்டுக்களை அவர் செல்லுபடியற்றதாக்கினார். (ஒரு டாலரின் உத்தியோகபூர்வ நாணயமாற்று விகிதம் 6.29 கெயட்ஸ் ஆனால் கறுப்புச் சந்தையில் இது 45 கெயட்ஸாக இருந்து வருகிறது.)

இந்த நோட்டுக்களை செல்லுபடியற்றதாக்கியது மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நடுத்தர வகுப்பினரே.

நீவின் அரசு பெரும்பாலும் நாட்டின் முழுச்சனத்தொகையின் எதிர்ப்பையும் சம்பா[illegible] வேண்டிய நிலைமை இதனாலேயே உருவானது. ★

# 24ஆவது ஒலிம்பிக் போட்டி சோல் நகரில் இன்று ஆரம்பம்

24ஆவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தென்கொரியாவின் தலைநகரான சோலில் வரும் செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2 முடிய 16 நாட்கள் நடைபெற இருக்கிறது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவில் அங்கம் வகிக்கும் 167 நாடுகளில் 161 நாடுகள் சோலில் 273 தங்கப்பதக்கங்கள் பெற 23 வகையான விளையாட்டுகளில் போட்டியிடப் போகின்றன.

சோல் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள சர்வதேச ஒலிம்பிக் குழு விடுத்த அழைப்பை வட கொரியா, கியூபா, அல்பேனியா, எத்தியோப்பியா, நிகரகுவா, செல்செல்ஸ் ஆகிய ஆறுநாடுகளும் புறக்கணித்து விட்டன.

1976 மான்ரீல் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குப்பின் முதன்முறையாக சோவியத் யூனியனும், அமெரிக்காவும் ஒன்றையொன்று எதிர்த்து விளையாடப் போகின்றன.

டென்னிஸ், டேபிள்டென்னிஸ் விளையாட்டுகள் சோல் ஒலிம்பிக்கில் புதிதாக இடம் பெற்றுள்ளன.

சோல் ஒலிம்பிக்கில் போட்டியிட உலகின் தலைசிறந்த 13,000 விளையாட்டு வீரர்கள் வருவார்கள் எனக் கணக்கிட்டுள்ளனர்.

### 'ஹடாரி' சின்னம்

சோல் ஒலிம்பிக் ஹாலின் முன், பங்கெடுக்கும் 161 நாடுகளின் பல்வண்ண தேசியக் கொடிகள் பறப்பதைக் கண்டு தன் மகிழ்ச்சியைக் கைவிரித்துத் தெரிவிக்கும் 'ஹடாரி' என்ற கொரியப்புலி சோல் ஒலிம்பிக்ஸின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

இதனுடைய தலையில் தொப்பி காணப்படுகிறது. அதில் இருந்து நூல் ஒன்று 'எஸ்' வடிவில் காணப்படுகிறது.

இது போட்டி நடக்கும் சோல் நகரைக் குறிக்கிறது.

எந்த ஒரு ஒலிம்பிக் போட்டி நடந்தாலும் ஒலிம்பிக் கொடி ஒன்றுதான். அந்தக்கொடியில் 5 வளையங்கள் காணப்படுகிறது. இவை ஐந்து கண்டங்களில் வாழும் மக்களின் ஒற்றுமையை உணர்த்தும்.

அந்த வளையங்கள் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை சிவப்பு ஆகிய நிறங்களில் இருக்கும்.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும்.

### அலுமினியச் சுவர்

வீரர்கள் ஓட்டப் பந்தயம் நடக்கிற மைதானத்திற்குள் காற்றுப்புகுந்து விடாத படிக்கு அலுமினியத் தகடுகளால் சுவர்போல அமைத்திருப்பது சோல் ஒலிம்பிக்கின் சிறப்பு அம்சம்.

இவ்விசேட ஏற்பாடு குறித்து சோல் ஒலிம்பிக் அமைப்புக் குழுவின் கூட்டு அமைப்பாளர் மூன் டொங் ஹூ செய்தியாளர்களிடம் சொன்னதாவது:

இயற்கைக் காற்று வேகமாக வீசுகிற பட்சத்தில் வீரர்களின் திறமையை அது பாதிக்கக் கூடும்.

அவர்களுடைய ஓட்ட வேகம் தடைப்படும். எதிர்க் காற்று வீசினால் இப்படிப் பட்ட பாதிப்பு உள்ளது.

ஒரு வேளை காற்றானது வீரர்கள் ஓடுகிற திசையிலேயே வீசினால் அது மெலிந்தவர்களுக்குச் சாதகமாகவும் கனத்தவர்களுக்கும் அவ்வளவு பயனில்லாமலும் அமைந்து விடக் கூடும்.

## உலக விளையாட்டு

எனவே வெற்றி தோல்வி என்பது வீரர்களின் தனித் திறமையால் முடிவு செய்யப்பட வேண்டும். காற்று குறுக்கிட்டு முடிவை மாற்றிவிடக் கூடாது.

இதற்காகத்தான் அலுமினியத்தகடு சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சுவர்கள் காற்றானது மைதானத்துக்குள் புகாதபடி தடுத்து விடும்.

திரு. மூன்டொங் இப்படிச் சொன்னார்.

ஒரு மாதத்திற்கு முன்பு பிரி - ஒலிம்பிக்போட்டிகள் அமெரிக்காவில் நடந்த போது பிரபல வீரர் கரோல் லிவிஸ் 100மீட்டர் தூரத்தை 9 வினாடியில் கடந்து சாதனை படைத்தார். இந்தச் சாதனை பிரமிக்கத்தக்கதாக இருந்தது. ஆனால் இதனை உலக உடற்பயிற்சிச் சங்கம் ஏற்கவில்லை.

லிவிஸ் இப்படி அபார சாதனை படைக்கக்காரணம் என்ன என்று ஆராய்ந்த போது காற்று வேகமாக அடித்து அவரைத் தள்ளிவிட்டது என்பது தெரியவந்தது. அவர் மட்டுமன்றி அவரோடு கூட ஓடிய எல்லோருமே வழக்கத்தைவிட முன்னதாகவே தூரத்தைக் கடந்து இருந்தார்கள்.

எனவே தான் இது போன்ற பிரச்சினை ஒலிம்பிக்கிலும் காற்றால் ஏற்பட்டுவிடக்கூடாது என்று அலுமினியத் தகடுகளால் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

### ஒலிம்பிக் செலவு

ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு தென்கொரிய அரசுக்கு ஆகும் செலவு இலங்கைப்பணத்தில் 8, 500 கோடி ரூபாவுக்கு மேல் ஆகும்.

தொடக்க நாளன்று பெண்கள் துப்பாக்கி சுடும் போட்டி தான் முதலாவதாக நடக்கிறது. முதல் தங்கப்பதக்கம் இந்தப் போட்டிக்குத்தான் தரப்படுகிறது.

எந்தநாடும் செய்யாத சாதனை ஒன்றை அமெரிக்கா செய்து இருக்கிறது. கூடைப்பந்துப் போட்டி அறிமுகப்படுத்தப் பட்ட 1936ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா அதற்கான தங்கப்பதக்கத்தைப் பெற்று வருகிறது. 1972 இல் மட்டும் தான் இப்போட்டியில் அமெரிக்கா தங்கப்பதக்கத்தைப் பெறத் தவறியது.

அடுத்த ஒலிம்பிக்போட்டி ஸ்பெயின் நாட்டில் உள்ள பென்சிலானியாவில் 1992 இல் நடக்கும்.

### பி. டி. உஷா

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள ஓட்டப்பந்தய வீராங்கனை பி. டி. உஷா தகுதிபெற்றிருக்கிறார்.

அவரது வலதுகாலில் திடீர் வலி ஏற்பட்டதால் அவர் ஒலிம்பிக் குழுவில் இருந்து நீங்குவார் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த ஒலிம்பிக்போட்டிகள் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்தன. இந்திய வீராங்கனை பி. டி. உஷா 400 மீற்றர் தடைஓட்டத்தில் வெண்கலம் பெறும் வாய்ப்பை அப்போது இழந்தார்.

### 280 கப்பல்கள் பாதுகாப்பு

ஒலிம்பிக் போட்டியைத் தீவிரவாதிகள் குழப்பாமல் இருக்க ஜப்பானும் உதவ முன் வந்துள்ளது.

தென்கொரிய அரசாங்கத்தின் வேண்டுகோளின் மீது 280 ரோந்துக் கப்பல்களை ஜப்பான் அனுப்பி வைத்திருக்கிறது.

வலிமை வாய்ந்த இக்கப்பல்களைத் தாண்டி தீவிரவாதிகள் தென்கொரியாவுக்குள் ஊடுருவ முடியாது. ★

# பொது அறிவுப்போட்டி இல. 13

1. மன்னர் ஆட்சி இன்றும் உள்ள நாடு எது? ... ... இங்கிலாந்து / நேபாளம்
2. பிரிக்கமுடியாத கல் எது? ... ... ... ... ... ... ... ... கருங்கல் / சிக்கல்
3. சக்கரவர்த்தி என்று போற்றப்பட்டவர் யார்? ... ... கண்ணதாஸன் / கம்பர்
4. அமெரிக்காவின் தேசியப் பறவை? ... ... ... ... ... ... ... மயில் / கழுகு
5. உலகில் பெரிய கடல் ... ... ... ... ... ... மலாக்கா கடல் / சீனக்கடல்
6. வாட்டர்கேட் ஊழலில் சம்பந்தப்பட்டவர் யார்? ... ... நிக்ஸன் / கார்ட்டர்
7. ஒரு தலைமுறை எத்தனை ஆண்டுகள்? ... ... ... ... ... ... ... 30 / 50
8. பாண்டவர்களின் சகோதரர்களில் ஒருவர் ... ... ... ... கர்ணன் / அர்ஜுன்
9. சுதந்திரத்துக்கு விலையாகக் கொடுக்க நேரிடும்? ... ... ... கண்ணீர் / செந்நீர்
10. ஊர்வலத்துக்குப் பயன்படுவது எது? ... ... ... ... ... தேர் / பல்லக்கு
11. அறிவு வளர்ச்சிக்கு எது முக்கியம்? ... ... ... ... ... ... கண் / காது
12. வேரில் விளைவது எது? ... ... ... ... ... ... உருளைக்கிழங்கு / கடலை

பெயர்:- ..................
விலாசம்:- ......................
...............

பொது அறிவுப்போட்டி இல: 13
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 28. 9. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org